பக்கங்கள்: 24
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2048 | கார்த்திகை 03 | ஞாயிற்றுக்கிழமை 19.11.2017 | கதிர் 14

உங்கள் நிறுவனங்களுக்கு
திறமையான பணியாளர்களை
குறுகிய காலத்தில்
பெற்றுக்கொள்ள
WINSTAR
JOB BANK
106, தபாற்பெட்டிச் சந்தி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
web: www.winstar jaffna.com
Fb : winstar job bank
021 320 2789
c/400

## ஈ.பி.ஆர்.எல்.எவ். விலகி நின்றால்...
# சர்வேஸின் அமைச்சு பதவிக்கும் ஆபத்து?



யாழ்ப்பாணம், நவம்பர் 19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய மூன்று கட்சிகளையும்விட்டு, ஈ.பி.ஆர்.எல்.எவ். விலகி நின்றால் - எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் அக்கட்சி தனிவழிபோனால் - வடக்கு மாகாண சபையில் தமிழ்க் கூட்டமைப்பு அமைத்திருக்கும் மாகாண அரசில் அக்கட்சியின் சார்பில் கல்வி அமைச்சராகவிருக்கும் கலாநிதி க.சர்வேஸ்வரனின் அமைச்சுப் பதவிக்கும் ஆபத்து ஏற்படும் சூழல் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது. பக்கம் 22

## காலியில் பதற்றம் நீடிப்பு நேற்றிரவு மீள ஊரடங்கு
### 19 பேர் பொலிஸாரால் கைது

கொழும்பு, நவ. 19

காலி, ஜிந்தோட்டைப் பிரதேசத்தின் அமைதிக்குப் பங்கம் விளைவித்த குற்றச்சாட்டில் 19 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர். சம்பவத்தையடுத்துநேற்று முன்தினம் இரவு முதல் விதிக்கப்பட்டிருந்த ஊரங்குச் சட்டம் நேற்றுக் காலை 9 மணி முதல்விலக்கிக்கொள்ளப்பட்டுள்ளது.

எனினும் ஊரடங்கு நேற்று மாலை 6 மணி முதல்மீளநடைமுறைப்படுத்தப்பட்டது. அது இன்று காலை 6 மணிவரை அமுலில் இருக்கும்.

இதேவேளை கைது செய்யப்பட்ட 19 பேரும் பக்கம் 22

## மன்னாரில் ஐந்து இடங்களில் பிள்ளையார் சிலை உடைப்பு
### நேற்று அதிகாலை விசமிகள் கைவரிசை



மன்னார், நவ. 19

மன்னாரில் ஐந்து இடங்களில் நேற்று அதிகாலை பிள்ளையார்சிலைகள்உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளன. அத்தோடு, ஆலயங்களின்உண்டியல்களும்களவாடப்பட்டுள்ளன.

மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் தள்ளாடி விமான ஓடு பாதைக்கு முன்பாக வீதியோரத்தில் அமைக்கப்பட்டிருந்த பிள்ளையார் சிலை நான்காவது தடவை பக்கம் 22

## தமிழ்க் கூட்டமைப்பின்
# யாழ். மேயர் தேர்வு தேர்தலுக்கு பின்னர்?
### சண்டை, சச்சரவுகளைச் சமாளிக்க புதிய வியூகம்

யாழ்ப்பாணம், நவ. 19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ். மாநகரமுதல்வர்பதவிக்கு யாரைநியமிப்பதுஎன்பது தொடர்பில்பெரும்பாலும் உள்ளூராட்சித்தேர்தலின் பின்னரே முடிவு எட்டப்படும் என்று நம்பிக்கையான வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

யாழ். மாநகர முதல் பக்கம் 22

## வடக்கின் முக்கிய இடங்களை விட்டு அகலாது இராணுவம்
### சபையில் பொன்சேகா திட்டவட்டம்



கொழும்பு, நவ.19

வடக்கில் முக்கிய இராணுவ முகாம்கள்அகற்றப்படா. அங்கு நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினரும் குறைக்கப்படமாட்டார்கள்.

இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் திட்டவட்டமாக அறிவித்தது நல்லாட்சி அரசு.

இராணுவத்தை வடக்கிலிருந்து வெளியேற்ற தமிழ் பக்கம் 22

## தேசியக் கொடி விவகாரம்; பதில் கூறவேண்டும் விக்கி
### மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் கோரிக்கை

கொழும்பு, நவ. 19

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன்தேசியகொடியை ஏற்ற மறுத்தமைக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பொறுப்புக் கூற வேண்டும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள்ஆணையாளர் பக்கம் 22

## யாழ்ப்பாணத்தில் புலிகள் மீள உருவெடுக்கவில்லை
### நாடாளுமன்றில் கூறப்படுபவைகளை முற்றாக மறுக்கிறார் பொலிஸ் உயரதிகாரி



யாழ்ப்பாணம், நவ. 19

நாடாளுமன்றில் தெரிவிக்கப்படுவது போன்று யாழ்ப்பாணத்தில் புலிகள் மீள உருவாகவில்லை. 20 வயது கொண்ட நான்கு, ஐந்து இளைஞர்களுக்கு இடையே சிறு சிறு மோதல்களே இடம்பெறுகின்றன. அவையும் கட்டுப்பாட்டிக்குள் கொண்டுவரப்படும். பக்கம் 22

## பொலிஸ் விசாரணை வளையத்துள் 11 பேர்

யாழ்ப்பாணம்,நவ. 19

யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாகத் தொடரும் வாள்வெட்டுச் சம்பவங்களுடன்தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் 11 பேர் விசாரணையில்வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் இன்னும் கைது செய்யப்படவில்லை என்று வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மாஅதிபர்றொஷான் பெர்னாண்டோ தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை நடத்திய பக்கம் 22

## சு.க. உள்வீட்டுச் சிக்கலில் தலையிடாராம் கம்மன்பில

கொழும்பு, நவ. 19

சுதந்திரக் கட்சியின் உள்வீட்டுப்பிரச்சினையில் தலையிடப் போவதில்லை எனப் பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவர்உதயகம்மன்பிலதெரிவித்தார்.

இதுதொடர்பாகநேற்று பக்கம் 22

## வாள்வெட்டு நடந்த இடங்களை நேரில் ஆராய்கிறார் பிரதிப் பொலிஸ்மா அதிபர்



யாழ்ப்பாணம், நவ. 19

வாள்வெட்டுக் கும்பல்கள் தாக்குதல் நடத்திய இடங்களில் நேரடிக்கள நிலைவரங்களை வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொஷான் பெர்னாண்டோ ஆராய்ந்து வருகிறார். சம்பவத்தில் படுகாயமடைந்தவர்களையும் பக்கம் 22

## வாள்வெட்டுக் கும்பல்களை மடக்க குடாநாட்டில் சிறப்பு பொலிஸ் குழு

யாழ்ப்பாணம், நவ. 19

யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டு வன்முறைகளில் ஈடுபட்டுவரும் கும்பல்களைக் கைது செய்வதற்குயாழ்ப்பாணம்பிராந்திய பொலிஸ் அதிகாரி தலைமையில் சிறப்புப் பொலிஸ் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பாலித பெர்னாண்டோஇந்தக்குழுவை அமைத்துள்ளார்.

வாள்வெட்டு வன்முறைகளில்ஈடுபடும்கும்பல்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துவிரைவில்அறிக்கை சமர்ப்பிக்குமாறு அந்தப் பொலிஸ் குழுவுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கடந்த சில தினங்களாக வாள்வெட்டுச் சம்பவங்கள் கட்டுக்கடங்காமல் அதிகரித்துள்ளன. இதனால் மக்கள் பெரும் அச் பக்கம் 22

# வவுனியா இ.போ.ச. டிப்போ ஊழியரின் நேற்றைய பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

## சுதந்திரக்கட்சி அமைப்பாளரின் வாக்குறுதியை அடுத்து






வவுனியா, நவ. 19

இலங்கை போக்குவரத்து சபையின் வவுனியா டிப்போ ஊழியர்கள் நேற்று பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். எனினும் சில மணி நேரத்தில் இந்தப் போராட்டம் கைவிடப் பட்டது.

வட மாகாண முகாமையாளர் மற்றும் பாதுகாப்பு முகாமையாளரை இடமாற்றம் செய்யக் கோரியே இந்தப் பணி பகிஷ்கரிப்பை அவர்கள் நடத்தினர்.

இதன் காரணமாக வவுனியாவில்இலங்கைபோக்குவரத்து சபையின் உள்ளூர் மற்றும் வெளிமாவட்ட சேவைகள் இடம்பெறாத போதிலும் வட மாகாண மற்றும் ஏனைய மாவட்ட பஸ்கள் சேவையில் ஈடுபட்டன.

இதுதொடர்பில் இணைந்த தொழிற்சங்கத்தின் தலைவர் வாமதேவன் தெரிவித்தவை வருமாறு:-

வட மாகாண முகாமையாளரையும், இடைநிறுத்தப்பட்ட பாதுகாப்பு முகாமையாளரையும் வடக்கில் இருந்து இடமாற்றம் செய்யவேண்டும் எனக்கோரியே நாம் பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளோம்.

வட மாகாண முகாமையாளர் யாழ்ப்பாணத்தில் அலுவலகத்தை அமைக்காது வவுனியாவில்இருந்துபணியாற்றுகிறார். எமது டிப்போளரிபொருளையே தனது தேவைகளுக்காகப் பயன்படுத்துகின்றார்.

இது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம்என்பதுடன்அவருடைய செயற்பாடுகள் விரும்பத்தகாததாக உள்ளன. - என்றார்.

இந்த நிலையில் குறித்த வட மாகாண முகாமையாளர் அண்மையில் சிறிலங்கா சுதந்திரகட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் பதவியை பெற்று அரசியல் செயற்பாட்டை இலங்கை போக்குவரத்து சபையினுள் மேற்கொண்டு வருகின்றார் என்ற குற்றச்சாட்டும் எழுந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இ.போ.சபையின் வவுனியா டிப்போக்கு விரைந்த ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் வாசல கருத்து தெரிவிக்கையில் -

இவர்கள் இருவரையும் ஒரு வாரத்தினுள் வடமாகாணத்திலிருந்து இடமாற்றம் செய்யலாம் என்றும், இந்த இடமாற்றம் இடம்பெறாத பட்சத்தில் தானும் இ.போ.ச ஊழியர்களின் தொழிற்சங்க போராட்டத்தில் இணைந்து கொள்வேன் என்றும் தெரிவித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து இந்த வாக்குறுதிகள் நிறைவேறாத பட்சத்தில் வடமாகாணம் தழுவிய போராட்டத்தில் தாம் ஈடுபடவுள் ளதாகவும், பணிப்புறக்கணிப்பு காரணமாக பாதிக்கப்பட்ட மக்களிடம் மன்னிப்பு கோருகின்றனர் எனவும் வட பிராந்திய ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தின் தலைவர் இராசரத்தினம்வாமதேவன் குறிப்பிட்டுள்ளார். (இ-100)

# நல்லாட்சி அரசின் உறுதிமொழிகள் தற்போது நிறைவேற்றப்படுகின்றன!

## அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு




கொழும்பு, நவ. 19

நல்லாட்சி அரசு அதிகாரத்திற்கு வந்ததன் பின்னர் ஏற்படுத்திய ஆணைக் குழுக்கள் வினைத்திறனான முறையில் செயற்படுகின்றனஎன அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

சமகால அரசு வழங்கியுள்ள உறுதிமொழிகள் நிறைவேற்றப்படுகின்றன எனவும் நாடாளுமன்றத்தில்நேற்று முன்தினம் ஆரம்பமான வரவு- செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் அவர் குறிப்பிட்டார்.

விவாதத்தில் உரையாற்றிய அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்ஸா தெரிவிக்கையில்-

போலிப் பிரசாரங்களின் மூலம் நாட்டின் அபிவிருத்தியைச்சீர்குலைக்கச்சிலர்முயன்று வருகின்றார்கள் என்று குற்றம் சாட்டினர். மக்களை வலுவூட்டும் தேசிய வேலைத்திட்டங்கள் ஜனாதி பதி செயலகத்தின் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அமைச்சர் கூறினார்.

இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்தன குறிப்பிடுகையில்-

சுற்றாடலைப் பாதுகாப்பதற்கான சட்டங்கள் வலுப்படுத்தப்பட்டு, வன அடர்த்தியும் அதிகரிக்கப்பட்டு வருகிறது எனக் கூறினார். கிராம சக்தி என்ற வேலைத் திட்டத்தின் ஊடாக வறுமை ஒழிப்பிற்கான யோசனைகள்முன்மொழியப்பட்டன.

ஒவ்வொரு குடும்பத்திற்காகவும் தலா எட்டாயிரம் ரூபாவை ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தேர்தல் முறைமை, நிறைவேற்று அதிகார முறைமை என்பனவற்றை மாற்றுவதற்கான கலந்துரையாடல்கள் நாட்டில் ஆரம்பமாகியுள்ளமை மகிழ்ச்சிக்குரியயை ஆகும் என்றும் அவர் கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவிக்கையில்-

அரசு ஜனநாயகத்திற்கு எதிராக செயற்பட்டு வருகிறது என விவாதத்தில் உரையாற்றிய குற்றஞ்சாட்டினார். நாடாளுமன்றத்தின் மீதான நம்பிக்கை குறைந்து வகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

# இராணுவ பரா விளையாட்டு போட்டி எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்பம்!

## 800 படையினர் பங்களிப்பு




கொழும்பு, நவ. 19

2017 ஆம் ஆண்டிற்கான இராணுவ பரா விளையாட்டு போட்டிகள் எதிர்வரும் 22 ஆம்திகதி ஆரம்பமாகவுள்ளன.

பல்வேறுபட்ட விளையாட்டுத் துறைகளில் திறமையுடையவர்களும் மனிதாபிமான நடவடிக்கைகளில் அங்கவீனமுற்ற படையினருக்கான இந்த போட்டி இம்மாதம் 22 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை ஹோமாகம தியகம விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் ஊடக நிலையத்தில் இந்த போட்டிகள் தொடர்பான ஊடக சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின் போது இராணுவ பரா விளையாட்டு சங்கத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் தம்பத் பெர்ணாந்து கருத்துத் தெரிவிக்கையில் -

இந்த விளையாட்டுப் போட்டிகளில் வெளிநாட்டு இராணுவ வீரர்களும் கலந்து கொள்கின்றனர் எனவும், இரண்டு மாத காலமாக இந்த போட்டிகள் தியகம விளை யாட்டரங்குகளிலும், படையணிதலைமையகங்களிலும் 800படையினரின் பங்களிப்புடன் இடம்பெற்றன.

இந்தப் போட்டியில் சைக்கிள் ஓட்டம், நாற்காலி மரதன், வில் ஏய்தல், பாரம் தூக்குதல், ஹேன்டபோல், ஆசன ஹேன்ட போல், கடற்கரை ஹேன்ட போல், மேசைப்பந்து, கிரிக்கெட், நீச்சல், நாற்காலி சக்கர மேசைப்பந்து,வாயு துவக்கு வெடிவைப்பு, மெய்வல்லுநர் போட்டியின் வீரர்களும் கலந்து கொள்வர்.

இந்த விளையாட்டு நிகழ்வு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்கவின் தலைமையில் இடம்பெறும்.

இறுதி நிகழ்வு 24 ஆம் திகதி வெள்ளிக் கிழமை பாதுகாப்பு செயலாளர் கபில வைத்திய ரத்னவின் பங்களிப்புடன் நடைபெறவுள்ளது.

இந்தப் பரா போட்டிகள் 1991ஆம் ஆண்டு இராணுவ அங்கவீனமுற்ற படை வீரர்களின் போட்டியென ஆரம்பமாகி 2010 ஆம் ஆண்டு இராணுவ பரா விளையாட்டு போட்டியாக பெயர் மாற்றப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் இராணுவ பேச்சாளர் மற்றும் ஊடக பணிப்பாளர் மேஜர் ஜெனரல் ரொஷான் செனெவிரத்ன, இராணுவ பரா சங்கத்தின் பிரதித் தலைவர் பிரிகேடியர் ரஜீவ விக்கிரம சிங்க, செயலாளர் கேர்ணல் ராஜா குணசேகர ,பரா விளையாட்டு வீரரான சாஜன் தினேஸ் பிரியந்த உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# காலியில் முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள் சகிக்க முடியாதது எனச் சீறுகிறார் சம்பந்தன்

கொழும்பு, நவ.19

காலியில் நமது தமிழ் பேசும் சகோதரர்களான முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் நன்கு திட்டமிடப்பட்டு அரங்கேற்றப்பட்டிருக்கின்றது. அது சகித்துக் கொள்ள முடியாதது. இதன் சூத்திரதாரிகளை உடன் கண்டு பிடித்துத் தண்டிக்க அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

– இவ்வாறு சீற்றத்துடன் கூறியிருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன்.

காலித் தாக்குதல் சம்பவம் குறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டில் இனவாதத்தைக் கிளறி, குழப்பத்தைத் தூண்டிவிட சிலர் தூபமிடுகின்றனர் என்பதையே காலிச் சம்பவம் காட்டுகின்றது.

இது குறித்து அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். துரித விசாரணை நடத்தி சூத்திரதாரிகளைக் கண்டுபிடிக்க வேண்டும். தாக்குதலுக்குத் தூண்டியவர்களை அடையாளம் கண்டு தண்டிக்க வேண்டும்.

குறிப்பாக எமது தமிழ் பேசும் முஸ்லிம் சகோதரர்கள் மீதான இத்தகைய தாக்குதல்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. சகித்துக் கொண்டிருக்கவும் மாட்டாது. இத்தகைய விடயங்களில்



அனைத்து மட்டங்களிலும் நாம் குரல் எழுப்புவோம்.

நாடாளுமன்றத்திலும் விசேட நடவடிக்கைகளை எடுத்து, அரசிடம் கேள்வி எழுப்புவோம். – என்றும் சம்பந்தன் கூறினார். (உ)

# கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்ட சின்னையா பதவி இழப்பு: டக்ளஸ் அதிருப்தி, விசனம்

45 வருடங்களின் பின்னர் முதல்தடவையாகக் கடற்படைத் தளபதி பதவிக்கு நியமிக்கப்பட்ட தமிழரான ட்ரவிஸ் சின்னையா இரண்டு மாதகாலத்தில் வீட்டுக்கு அனுப்பப்பட்டமை தொடர்பில் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா விசனமும் அதிருப்தியும் தெரிவித்தார்.

அந்த நியமனம் நல்லிணக்க முயற்சிக்கு பெரும் உத்வேகம் தருவதாக அமைந்தது. ஆனால் மிகக் குறுகிய காலத்தில் – இரண்டு மாதத்தில் – அவரை அந்தப் பதவியிலிருந்து விலக்கியமை மூலம் அந்தச் சாதகமான சூழ்நிலையை அரசு பாழ்படுத்தி விட்டது என்றார் டக்ளஸ் தேவானந்தா.

நாடாளுமன்றத்தில் நேற்று வரவு – செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (உ)

# யாழ் மாநகரப் பிரதேசத்தில் திண்மக் கழிவகற்றல் நடவடிக்கை

திண்மக் கழிவகற்றல் விசேட திட்டம் ஒன்றை நாளை திங்கட் கிழமை முதல் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை யாழ். மாநகர சபை முன்னெடுக்கவுள்ளதாக சபையின் ஆணையாளராகப் பதவியேற்றுள்ள தனபாலசிங்கம் ஜெயசீலன் தெரிவித்தார்.

நாளை காலை 9 மணிக்கு குருநகர் 5 மாடி வீட்டுத் திட்டப் பகுதியில் இதன் ஆரம்ப வைபவம் இடம்பெறும். யாழ். மாநகர சபை, யாழ்ப்பாணம் – நல்லூர் பிரதேச செயலர் அலுவலகங்கள், உள்ளூராட்சி அலுவலகம் ஆகியன இதில் பங்கேற்கவுள்ளன.

21 ஆம் திகதி வெள்ளிக் கிழமை பாஷையூர், அரியாலை ஆகிய பிரதேசங்களிலும் –

22 ஆம் திகதி புதன்கிழமை –நல்லூர், வண்ணார்பண்ணை பிரதேசங்களிலும் –

23 ஆம் திகதி வியாழக் கிழமை – நாவாந்துறைப் பிரதேசத்திலும் –

– 24 ஆம் திகதி வெள்ளிக் கிழமை யாழ்.நகரப் பிரதேசத்திலும் –

திண்மக் கழிவுகள் அகற்றும் விசேட திட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் ஆணையாளர் த.ஜெயசீலன் தெரிவித்தார்.

# மாவீரர்களின் பெற்றோருக்கு முல்லைத்தீவில் மதிப்பளிப்பு





முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவீரர் வணக்க நிகழ்வும் பெற்றோர் மதிப்பளிக்கும் நிகழ்வும் நேற்று இடம்பெற்றுள்ளன.

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை பத்து மணியளவில் கைவேலிப் பகுதியில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில், மாவீரர்களின் உறவுகளால் பொதுச்சுடர் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து நினைவுப் பந்தலில் வைக்கப்பட்ட 200 மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்குப் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களால் மலர்மாலை அணிவிக்கப்பட்டு சுடர் ஏற்றப்பட்டது.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் மாவீரர்களின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்ட கொட்டகைகளில், உறவினர்கள் கண்ணீர் மல்க மாவீரர்களை நினைவு கூர்ந்தனர்.

மாவீரர் பெற்றோர்களுக்கும மாவீரர்களின் திருவுருவப் படங்கள், தென்னங்கன்றுகள் மற்றும் நினைவுப்பொருள்களும் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்சியாக மாவீரர்களின் பெற்றோர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு ஜனநாயகப் போராளிகள் கட்சியினால் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

# காலி வன்முறைகளுக்கும் தமக்கும் தொடர்பில்லை என்கிறது பலசேனா



கொழும்பு, நவ. 19

காலி, ஜிந்தோட்டைப் பிரதேசத்தில் இடம்பெற்ற குழப்பநிலைக்கும் தமக்கும் தொடர்பில்லை எனப் பொதுபலசேனா கூறியுள்ளது.

இது தொடர்பில் பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் வண.ஞானசார தேரர் விசேட அறிவித்தல் ஒன்றை நேற்று விடுத்துள் ளார்.

சமூக ஊடகங்கள் சிலவற்றில் ஜிந்தோட்டைச் சம்பவத்துடன் பொதுபல சேனாவின் பெயரைத் தொடர்புபடுத்திப் பொய்யான தகவல்கள் பல வெளியாகியுள்ளன என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது .

காலி, ஜிந்தோட்டைப் பிரதேசத்தில் இடம்பெற்ற அசம்பாவிதம் தொடர்பில் கண்டறியப் பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் உள்ளிட்ட குழுவினர் நேற்று அங்கு சென்றனர்.

# வவுனியா பேராறு திட்டத்துக்கு புதைத்த குழாய்கள் தரமற்றவை

## பதிலாகப் புதிய குழாய்கள் பொருத்தும் பணி



வவுனியா, நவ. 19

வவுனியாவில் பேராறு திட்டத்துக்காகப் புதைக்கப்பட்ட குழாய்கள் தரமற்றவை எனத் தெரிவிக்கப்பட்டு அவை மீள அகழப்படுகின்றன.

பேராறு திட்டத்தின் ஊடாக வவுனியா மாவட்டத்துக்கான நீர்த்தேவையைப் பூர்த்தி செய்ய கடந்த 2013 ஆம் ஆண்டு முதல் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பேராற்றில் இருந்து நீர்த்தாங்கிகளுக்கு நீரைக் கொண்டு செல்வதற்காகப் பெருந்தொகையான குழாய்கள் நிலத்தில் புதைக்கப்பட்டன.

இந்தத் திட்டத்தை ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவில் இந்திய நிறுவனம் ஒன்று செயற்படுத்தி வந்தது.

தற்போது குறித்த குழாய்கள் தரமற்றவை எனத் தெரிவித்து மீள மண்ணில் இருந்து அகழப்பட்டு வருகின்றன. அவற்றுக்குப் பதிலாக இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட குழாய்களைப் புதைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பூந்தோட்டம் வீதியில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருவதால் போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்பட்டுள்ளது. (100)

# மஹிந்தவுக்கு - 72



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது 72ஆவது பிறந்த நாளை குடும்பத்தினருடன் இணைந்து நேற்றுத் தனது அலுவலகத்தில் கொண்டாடினார்.

கேக் வெட்டி இந்தப் பிறந்த நாள் கொண்டாட்டம் நடந்தது.

இதில் மஹிந்தவின் குடும்பத்தவர்கள், அவருக்கு நெருக்கமானவர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

திஸ்ஸமகாராமப் பகுதியில் மஹிந்தவின் சகோதரர்கள் மக்களுக்கு பாற்சோறு பகிர்ந்தளித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## தீர்வு முயற்சியை முறியடிக்க வழமைபோல இனவாதத் தீ!

கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் ஒரு முக்கிய விடயத்தைப் பட்டவர்த்தனமாகச் சுட்டிக்காட்டியிருந்தார்.

*"இனவாதத்தைத் தூண்டி, தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியை மஹிந்த ராஜபக்ஷ குழுப்பக் கூடாது. அரசியல் சுயலாபத்துக்காக தீர்வு காணும் முயற்சியை அவர் தடம் புரளச் செய்யக்கூடாது. அதிகாரப் பகிர்வுக்கு அவர் தயாரா, இல்லையா என்பதை அவர் பகிரங்கப்படுத்த வேண்டும்."*

- இவ்வாறு நாடாளுமன்றத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் வைத்துக் கொண்டு அவரைப் பார்த்துக் கேள்வி எழுப்பினார் இரா.சம்பந்தன்.

இலங்கைத் தீவில் இனவாதப் பிரச்சினை இரத்த ஆறு ஓடும் வன்முறைப் புயலாகக் கட்டவிழ்வதற்குக் காரணமான - காலங் காலமாகக் காரணமாக அமைந்த - விடயத்தைத் தொட்டுப் பேசியிருக்கின்றார் சம்பந்தன்.

நாட்டின் அனைத்துச் சமூகங்களும் ஒன்றிணைந்து இன சௌஜன்யத்தோடு வாழ்வதற்கான ஒரு கட்டமைப்பு - தீர்வு - ஏற்படாமல் போன துரதிஷ்ட நிலைக்கு பிரதான காரணி எதுவோ அதனையே சுட்டிக்காட்டியிருக்கின்றார் சம்பந்தன்.

அந்த விடயத்தை விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியராக விளங்கிய 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கமும் தமது 'போரும் சமாதானமும்' என்ற நூலில் குறிப்பிட்டிருந்தார்.

*"சிங்கள தேசத்தின் இனவாத அரசியல் அணுகுமுறையில் மாறி மாறி நிகழும் ஒரு வரலாற்றுப் பாங்காக, மாற்ற முடியாத ஒரு நடைமுறையாக, ஓர் உண்மையைக் கண்டுகொள்ளலாம். அதாவது, ஆட்சிப் பீடம் ஏறும் கட்சி, தமிழர் பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வுகாண முற்படும் பொழுது, எதிர்க் கட்சியாக விளங்கும் கட்சி அம்முயற்சியை முறியடிக்கும் வகையில் தமிழ் விரோத உணர்வைத் தூண்டிவிடும். இதன்படி, சிங்களத் தேசப்பற்றாளராகத் தம்மை இனங்காட்டி, எதிராளிக் கட்சியைக் காட்டிலும் தாம் கெடுபிடிக்காரர் என உயர்த்திக்காட்டி அரசியல் லாபம் தேடும் ஒரு கீழ்த்தரமான அரசியல் நடைமுறையை சிங்கள அரசியல் கட்சிகள் மாறி மாறிக் கடைப்பிடிக்கின்றமை ஒரு வரலாற்று நியதியாகிவிட்டது."* - என்று மதியுரைஞர் கூறிய வரலாற்று நியதியைத்தான் இப்போது சம்பந்தனும் சுட்டிச் செல்கின்றார்.

சுதந்திர இலங்கையின் ஆட்சியை - அதிகாரத்தை - பிடிப்பதற்கும், தக்கவைப்பதற்கும் தென்னிலங்கைச் சிங்கள அரசியல் தலைமைகள் கைக்கொண்ட பிரதான தந்திரோபாயமாக தமிழர்களுக்கு எதிரான இனவாதமே - பௌத்த, சிங்கள மேலாண்மைப் போக்கிலான பேரினவாதமே அமைந்தது என்பது கண்கூடு.

ஐம்பதுகளின் பிற்பகுதியில் ஆட்சியைப் பிடிப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க தனித்துக் கையில் எடுத்த ஒரே ஆயுதம் இந்த இனவாதம் தான்.

1926 இல் - இலங்கையின் சரித்திரத்தில் முதன் முதலாக - இந்த நாட்டில் சமஷ்டி முறையிலான ஆட்சியே ஒரே வழி எனப் பிரசாரம் செய்த பண்டாரநாயக்கா, ஐம்பதுகளின் இறுதிப்பகுதியில் அதையெல்லாம் மறந்து, அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு குறுகிய இனவாதத்தைக் கையில் எடுத்துக் கொண்டார்.

அவர் தலைமை தாங்கிய 'சிங்களம் மட்டும்' சட்டம் அவரை 1956 இல் அரசியல் அதிகாரத்துக்குக் கொண்டுவந்தது.

வெறும் 'சிங்கள மட்டும்' சட்டத்தை நிறைவேற்றுவேன் என அறிவித்தால், அது பேரினவாதம் மூலம் தென்னிலங்கை பௌத்த சிங்கள மக்களின் மனதை வெற்றிகொள்வதற்குப் போதுமானதல்ல என்று கருதிய பண்டாரநாயக்கா, தாம் ஆட்சிக்கு வந்தால் அடுத்த 24 மணி நேரத்துக்குள் 'சிங்கள மட்டும் சட்டத்தை' முழு அளவில் நடைமுறைப்படுத்துவார் என அறிவித்தார். அதன் மூலம் - பேரினவாத உணர்ச்சிக் கொந்தளிப்பை ஏற்படுத்தியதன் வாயிலாக - தமது காரியத்தைச் சாதித்துக் கொண்டார் அவர்.

அதே பேரினவாதத்தைப் பயன்படுத்தி இப்போதும் அமைதி முயற்சிகளையும் சீர் குலைத்துவிட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், அவரது கூட்டு எதிரணியினரும் முயற்சிக்கின்றனர் என்பதே சம்பந்தனின் குற்றச்சாட்டு.

நாய் வாலை நிமிர்த்துவது எவ்வளவு தூரம் சாத்தியமற்றதோ, அது போன்றதுதான் தென்னிலங்கைச் சிங்களத்தின் பேரினவாத பேதமையை - பேதலிப்பை - மாற்றுவதும் கூட.

இப்போது பிரதான இரண்டு சிங்களக் கட்சிகளும் ஒன்றிணைந்து தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வு காண்பதற்கு முயற்சிக்கும் போது -

கோட்டைவிட்ட தமது ஆட்சி அதிகாரத்தை மீளக் கைப்பற்றுவதற்குக் கங்கணம் கட்டி நிற்கும் மஹிந்த ராஜபக்ஷவும் அவரது 'எடுபிடிகளும்' வழமை போல இனவாதத் தீயை மூட்டி, பெரும் அரசியல் பூகம்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

வழமையாக அரங்கேறும் இத்தகைய கெடுதி நாடகத்தின் அங்கத்திலிருந்து தற்போதைய அமைதி முயற்சிகளை நல்லாட்சி அரசுத் தரப்பும் தமிழ்க் கூட்டமைப்பும் எப்படி மீட்கப்போகின்றன?

பேரினவாதத் தீயை மூட்டும் முயற்சியை அரசு எப்படி முறியடிக்கப் போகின்றது?

அதில்தான் தீர்வு முயற்சி வெற்றி பெறுவது தங்கியுள்ளது.

# வவுனியாவில் பெருந்தொகை கஞ்சா மீட்பு!

## யாழ். இளைஞன் கைது



வவுனியா, நவ. 19

வவுனியா மத்திய பஸ் நிலையத்தில் வைத்து நேற்றுமுன்தினம் அதிகாலை 1.30 மணியளவில் 10 கிலோ 23 கிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து, கொழும்பு நோக்கிச் சென்ற அரச பஸ்ஸில் கேரளக் கஞ்சா கொண்டு செல்லப்பட்டபோதே வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் அதனைக் கைப்பற்றியுள்ளமையுடன், குறித்த சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம், கொடிகாமத்தைச் சேர்ந்த ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் உள்ள காணிகளின் அளவீட்டுப் பணிகள் கிளிநொச்சியில்!

கிளிநொச்சி, நவ. 19

கிளிநொச்சி, இரணைமடு பகுதியில் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பராமரிப்பில் உள்ள அரச காணி அளவீட்டுப் பணிகள் நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்டன.

மீள்குடியேற்றத்தின் பின்னர் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்த குறித்த காணி பின்னர் இராணுவ சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினரால் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது.

தற்போது அளவீடு செய்யப்படும் இந்தக் காணியில் பொதுமக்களின் காணிகளும் உள்ளடங்குகின்றன என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில், இந்தக் காணிகளை தற்போது அளவீடு செய்வதற்கான நோக்கம் என்ன என்பது தொடர்பில் பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

# முல்லைத்தீவில் சிறப்புற இடம்பெற்ற மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு!









முல்லைத்தீவு, நவ. 19

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஜனநாயக போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில் மாவீரர் வணக்க நிகழ்வும் பெற்றோர்கள் மதிப்பளிக்கும் நிகழ்வும் நேற்றுக் காலை கைவேலிப் பகுதியில் அமைந்துள்ள ஜனநாயக போராளிகள் கட்சி தலைமைச்செயலகத்தில் நடைபெற்றது.

ஜனநாயகப் போராளிகள் கட்சியைச் சேர்ந்த டெல்சன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாவீரர்களின் உறவுகளால் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு தொடர்ந்து நினைவுப்பந்தலில் வைக்கப்பட்ட 200 மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கு பெற்றோர்கள் மற்றும் உறவினர்களால் மலர்மாலை அணிவிக்கப்பட்டு சுடர் ஏற்றப்பட்டுள்ளது.

நீண்ட இடைவெளியின் பின்னர் மாவீரர்களின் திருவுருப்படங்கள் வைக்கப்பட்ட கொட்டகைகளில் கண்ணீர் மல்க மாவீரர்களை நினைவிற் கொண்டுள்ளனர்.

இந்த நிகழ்வில் கருத்துரைகளை ஜனநாயக போராளிகள் கட்சியின் செயலாளர் இ.கிருபாகரன், புதுக்குடியிருப்பு வணிகர்சங்கத் தலைவர் செ.செல்வச்சந்திரன், ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.துளசி ஆகியோர் நிகழ்த்தினர் .

இதில் மாவீரர் பெற்றோர்களுக்கு மாவீரர்களின் திருவுருவப் படங்கள், தென்னங்கன்றுகள் மற்றும் நினைவுப் பொருள்களும் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்சியாக மாவீரர்களின் பெற்றோர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு ஜனநாயகப் போராளிகள் கட்சியினரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளனர்.

## நாளை

20.11.2017
திங்கட்கிழமை

நட்சத்திரம் : கேட்டை பி.இ. 12.42 வரை
திதி : துதியை மு.இ. 8.53 வரை
சுபநேரம் : 12.09 - 01.39 வரை
இராகுகாலம்: 07.39 - 09.09 வரை

# ஜெனிவாவில் பூகோள கால மீளாய்வின் போது 53 பரிந்துரைகளை நிராகரித்தது இலங்கை!




கொழும்பு, நவ. 19

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான மூன்றாவது பருவ, பூகோள கால மீளாய்வின் போது, உலக நாடுகளால் சமர்ப்பிக் கப்பட்ட 53 யோசனைகளை இலங்கை அரசு நிரா கரித்துள்ளது.

கடந்த புதன்கிழமை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், பேரவையின் இலங்கை தொடர்பான மூன்றாவது பருவ, பூகோள கால மீளாய்வு அமர்வு இடம்பெற்றது.

இதன்போது, மனித உரிமைகள் தொடர்பாக இலங்கை நிறைவேற்ற வேண்டிய 230 பரிந்துரை கள் பல்வேறு நாடுகளால் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில், நேற்று முன்தினம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், பேரவையின் இலங்கை தொடர்பான மூன்றாவது பருவ, பூகோள கால மீளாய்வின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதன்போது, உரையாற்றிய இலங்கையின் பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா, பேரவையில் முன்வைக் கப்பட்ட 230 பரிந் துரைகளில், 177 பரிந்துரை களை மாத்திரம் இலங்கை அரசு ஏற்றுக்கொள்கிறது எனக் கூறினார்.

ஏனைய 53 பரிந்துரைகளும் இலங்கை அரசால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

எனினும், ஏனைய பரிந்துரைகள் நிராகரிக்கப்பட் டன என பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா வெளிப் படையாகக் கூறவில்லை. 53 பரிந்துரைகளையும் தாம் கவனத்தில் கொண்டுள்ளோம் என்று மாத்திரம் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், தன்னார்வ அடிப்படையில் 12 வாக் குறுதிகளையும் இலங்கை வழங்கியி ருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

## வடமாகாண மர நடுகை மாதம்; நல்லூரில் கண்காட்சி ஆரம்பம்!





தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் வட மாகாண மர நடுகை மாதத்தை முன்னிட்டு கண் காட்சியொன்று நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் முன்னாள் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடை பெற்ற இந் நிகழ்வில் வடக்கு முதலமைச்சர் சி.வீ.விக் னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கண் காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து பல்வேறு கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் வடக்கு விவசாய அமைச்சர் க.சிவனேசன் உள்ளிட்ட மாகாண சபை உறுப்பினர்கள், பொது மக்கள், அதி காரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## சு.கவுக்கும் எதிரணிக்கும் இடையில் எந்தப் பேச்சும் நடக்கவில்லை!

### இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவிப்பு



கூட்டு எதிர்க்கட்சியு டன் இணைந்து செயற் படுகின்றமை தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இதுவரை எவ்விதமான பேச்சுகளையும் நடத்த வில்லை.

அவ்வாறு நடத்துவதற் கான சூழல் அமைய வில்லை என்று சுதந் திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா தெரிவித்துள் ளார்.

கிராம மட்ட மக்கள் இரண்டு தரப்பும் இணையவேண்டும் என்று விரும்பலாம். ஆனால், அதற்கு தலை வர்கள் பேச்சு நடத்த வில்லையே என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மஹிந்த மற்றும் மைத் திரி தரப்புக்களை இணைக்கும் முயற்சி கள் இடம்பெறுகின்றன எனத் தெரிவிக்கப்படு கின்றமை குறித்து எழுப் பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் டிலான் பெரேரா மேலும் தெரிவித்தவை வரு மாறு:-

கூட்டு எதிர்க்கட்சியு டன் சிறிலங்கா சுதந்தி ரக்கட்சி இதுவரை பேச்சு நடத்தவில்லை. அதா வது, கூட்டு எதிர்க்கட்சி யுடன் இணைவது தொடர்பில் இதுவரை எவ்விதமான பேச்சுக் களும் நடைபெற வில்லை.

ஆனால், ஊடகங்கள் இது தொடர்பில் செய்தி களை வெளியிடுகின் றன. அதாவது, சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் கூட்டு எதிரணியும் இணைந்து கொள்ளப்போகின்றன எனவும் அதற்கான பேச்சு கள் இடம்பெறுகின்றன எனவும் ஊடகங்கள் தெரி வித்து வருகின்றன.

ஆனால், அவ்வாறு எந்தப் பேச்சுகளும்இடம் றெவில்லை என்று கட்சி யின் ஊடக பேச்சாளர் என்ற வகையில் நான் கூறுகின்றேன். கட்சி யின் ஊடக பேச்சாளர் என்ற வகையில் எனக்கு தெரியாமல் இவ்வாறு பேச்சுகளும் நடைபெறு வதற்கான சாத்தியம் குறைவா கும்.

எனக்கு தெரிந்த வகை யில் பேச்சுகளும்இரண்டு தரப்புக்கும் இடையில் நடைபெறவில்லை என் றும் அவர் தெரிவித்துள் ளார்.

## ஆஸி. கடற்படைக் கப்பல் நாடு திரும்பியது!



கொழும்பு, நவ. 19

நல்லெண்ண விஜ மொன்றைமேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்த ஆஸ்திரேலிய நியூ காஸ்ரல் கடற்படைக் கப்பல் வெற்றி கரமாக தனது விஜயத்தை முடிவு செய்து நாடு திரும்பி யது.

கடந்த 14 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த ஆஸ்திரேலிய கடற்படை கப்பல் நேற்றுமுன்தினம் நாட்டை விட்டு புறப்பட்டுச்சென்றது.

இலங்கைக் கடற்படையினர் கடற்படை மரபுகளுக்கமைய மரியாதை செலுத் தினர்.

இந்தக் கப்பல் இலங்கையில் நங்கூரமிட்டிருந்த காலத்தில் கப்பலின் ஊழியர்கள் இலங்கை கடற்படையினர் ஏற்பாடுசெய்த பல நிகழ்வுகளில் பங்கேற்றனர்.


உலக சைவத் திருச்சபையின்
ஆதரவில்
கலாநிதி வி.அடியார் விபுலாநந்தாவின்
ஏற்பாட்டில்

**விவாத அரங்கு**

தலைப்பு:
தமிழரின் சமயம் சைவமா? ஹிந்துவா?

தலைமை:
பரா.நந்தகுமார்
(பொதுச் செயலாளர், அகில இலங்கை சைவ மகாசபை)

இடம்:
நாவலர் மண்டபம்
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

காலம்:
இன்று (19.11.2017) ஞாயிறு

நேரம்:
பிற்பகல் 3 மணிக்கு
(அனைவரும் வருக)

ம.அசுபதி (ஆசிரியர்)
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி



# இலங்கையில் சுற்றுலாத் துறையின்

# வளர்ச்சியும் போக்கும்

வரலாற்றுக் காலம் தொடக்கம் இன்றுவரை இலங்கை அதன் அமைவிடம் மற்றும் இயற்கையாக அமைந்த கவர்ச்சிகரமான அம்சங்கள் காரணமாக சுற்றுலா மையமாகத் திகழ்ந்து வருகிறது. இலங்கையின் பொருளாதாரத் துறையிலும் இந்தச் சுற்றுலாத்துறையே முதன்மை இடத்தை வகிக்கிறது. உலகின் வேகமான சுற்றுலாத்துறை வளர்ச்சி கொண்டுள்ள நாடுகளில் இலங்கை 4 ஆவது இடத்திலுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு இலங்கை, சர்வதேச சுற்றுலாப் பயணிகள் விரும்பித் தெரிவு செய்யும் ஒரு சுற்றுலாத் தலமாக விளங்குவதற்குப் பல்வேறு விசேட அம்சங்கள் காரணமாக அமைகின்றன. பல்வேறு இன, மத, மொழி பேசும் மக்களும் வேறுபட்ட கலாசாரங்களும் கொண்ட தீவாக இலங்கை விளங்குகின்றமை, ஒரே நாட்டினுள் வேறுபட்ட காலநிலை வலயங்கள் காணப்படுகின்றமை, நூற்றுக்கும் மேற்பட்ட ஆறுகளும் உள்நாட்டு ஏரிகளும் நீர்நிலைகளும் காணப்படுகின்றமை, தீவைச் சூழ பல்லுருவ தன்மை கொண்ட கடற்கரையோரங்கள், கண்டல் தாவரங்கள், முருங்கைக் கற்பாறைத் தொடர்கள், கடற்படுக்கைகள் காணப்படுகின்றமை, 20-20 இற்கும் மேற்பட்ட தேசிய பூங்காக்களைக் கொண்டிருத்தல், நாட்டுக்கே உரித்தான



பல்வேறு உயிரினங்களைக் கொண்டிருத்தல்.

பல சிறப்பு வாய்ந்த கலாசார மையங்கள், வரலாற்றுச் சின்னங்கள் என்பவற்றைக் கொண்டு விளங்குகின்றமை என்பன இலங்கையில் சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கு வித்திடும் அடிப்படை அம்சங்களாக உள்ளன.

எவ்வாறாயினும் இலங்கையில் இடைக்கிடை ஏற்படும் கலவர நிலைமை இந்தத் துறையைக் கடந்த காலங்களில் பாதிப்படையச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இருப்பினும் அதன் பின்னரான காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகை ஒப்பீட்டளவில் பெருமளவு அதிகரித்துள்ளது. இதன் வளர்ச்சியை ஊக்குவிக்கத் தற்போது அரசு பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

2016 ஆம் ஆண்டிலும் சுற்றுலாத்துறையின் வளர்ச்சி உத்வேகத்தை அடைந்து பெருமளவு வெளிநாட்டு நாணயத்தை இலங்கைப் பொருளாதாரத்தில் ஈட்டித் தந்துள்ளது. வரலாற்றில் முதன் முறையாக சுற்றுலாப் பயணிகளின் வருகை 20 லட்சத்தைக் கடந்து 20 லட்சத்து ஐம்பதாயிரத்து 832 ஆக உயர்ந்தது. 14 வீதமான வரவேற்கத்தக்க வருடாந்த வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

சுற்றுலா தொடர்பான உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் முதலீடுகளிலான கணிசமான அதிகரிப்பு, புதிய வான் வழி மற்றும் கப்பல் உலா போன்றவற்றின் தொழிற்பாட்டால் அதிகரித்த இணைப்பு என்பவற்றுடன் நாடு குறித்த ஊக்குவிப்புப் பிரசாரங்களும் இந்த வரவேற்கத்தக்க வளர்ச்சிக்குப் பங்களித்திருக்கின்றன.

2016 ஆம் ஆண்டில் ஆபிரிக்காவைத் தவிர ஏனைய அனைத்து பிராந்தியங்களிலிருந்தும் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளன. இதில் இந்தியா பெரிய சுற்றுலா மூலமாகவும் சீனா இரண்டாவதாகவும் அதைத் தொடர்ந்து ஐக்கிய இராச்சியம், ஜேர்மன் மற்றும் பிரான்ஸ் என்பன காணப்பட்டுள்ளன. இந்த ஐந்து நாடுகளையும் சேர்த்து 2016 ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 51 வீதமாக அமையப் பெற்றுள்ளது.



சுற்றுலாப் பயணிகளின் வருகைக்கான நோக்கத்தின் அடிப்படையில் பெரும்பான்மையானோர் (83.4%) விடுமுறையைக் கழிப்பதற்காகவும் 1.8 வீதமானோர் வியாபார நோக்கங்களுக்காகவும் வருகை தந்துள்ளனர். சமய மற்றும் கலாசார நோக்கங்கள், அலுவலக சார் கூட்டங்கள், மாநாடுகள், நண்பர்கள், உறவினர்களைப் பார்க்கும் நோக்கங்கள் மற்றும் விளையாட்டு காரணங்களுக்காகவும் 14.8 வீதமான பயணிகள் வருகை தந்துள்ளனர். சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்புடன் அவர்களின் உயர் செலவிடல் மற்றும் தங்கியிருக்கும் காலம் அதிகரித்தமை என்பனவற்றின் விளைவாகச் சுற்றுலா வருவாய் 2015 ஆம் ஆண்டில் 2981 மில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடும்போது 2016 ஆம் ஆண்டில் 3518 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு 18 வீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளது.

இவ்வாறு சுற்றுலாத்துறை நாட்டில் முன்னேற்றம் காண்பதற்கு இலங்கை அரசு கடந்த காலங்களிலும் தற்போதும் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சிறப்பாக பாசிக்குடா, நிலாவெளி, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் சுற்றுலா தொடர்பான புதிய செயற்றிட்டங்கள் நிறைவு பெற்றுள்ளன.

மேலும், இலங்கை முதலீட்டுச் சபை கலப்பிட்டியில் ஒருங்கிணைக்கப்பட்ட சுற்றுலா வாசஸ்தலம் கெத்துவில் சுற்றுலா வாசஸ்தலம் மற்றும் பொழுதுபோக்கு அபிவிருத்தி என்பவற்றை உருவாக்க முன்மொழிந்துள்ளது. மற்றும் தெற்கு அதிவேகப் பாதை, எதிர்காலத்தில் வடக்கு விரைவு பாதை என்பவற்றின் முயற்சிகளும் சுற்றுலாத்துறையின் விருத்திக்குப் பெரிதும் பங்களிப்புச் செய்கின்றன.

மேலும், இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை ஏனைய சுற்றுலா நிறுவனங்களுடன் இணைந்து உச்ச சுற்றுலாப் பயணிகளின் வருகைக்காக 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் கலாசார நிகழ்வுகள், பருவகால நிகழ்வுகள், உணவுத் திருவிழாக் கண்காட்சி என்பவை அடங்கிய சுற்றுலாப் பயணிகள் விடுமுறை விழாவை ஒருங்கமைத்திருந்தது.

இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகமும் இலங்கை குறித்த சந்தைப் படுத்தல் மற்றும் விளம்பரப்படுத்தல் திட்டங்களையும் மேற்கொண்டுள்ளன.

சர்வதேச புகழ்மிக்க நாளேடுகளினூடாக வலை பேனர்கள், அர்ப்பணிக்கப்பட்ட மின்னஞ்சல் மற்றும் சமூக வலைத்தள நிகழ்வுகளூடாக விளம்பரப்படுத்தல் என்பன இதனுள் உள்ளடக்கப்பட்டுள்



ளன. இவ்வாறாக இலங்கை அரசால் மேற்கொள்ளப்படும் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நடவடிக்கைகள் பாராட்டத்தக்கதாக அமையப் பெற்றுள்ளன.

இலங்கை ஆயுர்வேத மருத்துவத்தின் போட்டித் தன்மைகள் காணப்படுகின்றன. அதனால், மருத்துவ சுற்றுலாக்களையும் ஊக்குவிக்க முடியும். வருங்காலத்தில் சுற்றுலாத்துறையில் தொழிலாளர் பற்றாக்குறை இதன் வளர்ச்சி வேகத்தைக் கட்டுப்படுத்த எத்தனிக்கும் என்பதால் விருந்தோம்பல் கைத்தொழிலை வேலையாள் களைப் பயிற்றுவிக்க நிகழ்ச்சித் திட்டங்களையும் பாட நெறிகளையும் பிரதேச மட்டங்களில் மேம்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். சுற்றுலா விடுதிகள் தொடர்பாக தொடர்ச்சியாகக் கண்காணிப்பு இடம்பெற வேண்டியதுடன் அதன் விலைக் கொள்கைகளும் சரியான முறையில் அமுல்படுத்தப்பட வேண்டும்.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

# வடக்கில் உள்ள வாள்வெட்டுக் குழுக்கள் வெளிநாட்டில் இருந்து இயக்கப்படுகின்றன!

## சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவிப்பு

கொழும்பு, நவ. 19

யாழ்ப்பாணத்தில் கடந்த சில நாள்களாக அதிகரித்துள்ள வாள்வெட்டுக் குழுக்கள், வெளிநாட்டில் இருந்து இயக்கப்படுகின்றன என்று சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உள்ளூர் பாதாள உலகக் குழுக்களை வெளிநாட்டில் இருந்து சிலர் கட்டுப்படுத்துகின்றனர் எனத் தகவல்கள் கிடைத்துள்ளன.

வடக்கு உள்ளிட்ட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும், பாதாள உலகக் குழுக்களுக்கு எதிரான காவல்துறையினர் சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வடக்கில் மீண்டும் ஆவா குழு தலையெழுப்பதற்கு அரசு ஒருபோதும் அனுமதிக்காது. இந்தக் குழுவைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன.

குற்றக் குழுக்களைக் கட்டுப்படுத்த பொலிஸின் முழுப் பலமும் பயன்படுத்தப்படுகிறது.

கடந்த இரண்டு நாள்களில் வடக்கு மாகாணத்தில் 8 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய 6 பேர் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளனர். ஏனையவர்களையும் கைது செய்வதற்கான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



அதேவேளை, யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் மேலும் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர் எட்டு வாள்வெட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

ஆவா குழுவுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் 45 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 39 பேர் முன்னைய சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப் பட்டவர்களில் 25 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். 14 பேர் இன்னமும் தடுப்புக் காவலில் உள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

## கல்முனை மாநகர சபை தொடர்பில் சம்பந்தனின் தலைமையில் குழு!

கொழும்பு, நவ.19

கல்முனை மாநகர சபையை நான்கு உள்ளூராட்சி சபைகளாக பிரிப்பதற்காக அதற்கான எல்லைப் பிரதேசங்களை ஆராய்வதற்கென எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபையை நான்கு உள்ளூராட்சிச்சபைகளாகப் பிரிக்கப்படுமானால் தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நகரசபை ஒன்று உருவாக்கப்படுவதிலும் கிழக்கின் கல்முனை மற்றும் சாய்ந்தமருது பிரதேசங்களைச் சேர்ந்த சகல மக்களதும் அபிலாஷைகள் உள்வாங்கப்பட்டு எந்தவொரு மக்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் இவ்விடயம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதிலும் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக உள்ளூராட்சி சபைகள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சில் நேற்று முன்தினம் மாலை பேச்சு நடைபெற்றது.

அமைச்சர் பைசர் முஸ்தபா தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் பிரதிநிதிகள் மற்றும் முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

சகல கட்சிகளினதும் உடன்பாடுகள் பெறப்பட்டு இதற்கு ஒரு சுமுகமான தீர்வைக் காணும் நோக்கில் எதிர்வரும் 22 ஆம் திகதி எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் தலைமையில் அடுத்த சுற்றுப் பேச்சு நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன், கோடீஸ்வரன் மற்றும் ஹென்ரி மகேந்திரன் ஆகியோர் தமிழர் தரப்பில் கலந்துகொண்டனர்.

பிரதி அமைச்சர் ஹரீஸ், முன்னாள் அமைச்சர் அதாவுல்லா எம்.பி, அஸாத் சாலி உள்ளிட்டோர் முஸ்லிம் தரப்பில் கலந்துகொண்டனர்.

## ஐக்கிய அரபு இராஜ்ஜியதின் அமைச்சர் இலங்கை விஜயம்!



கொழும்பு, நவ. 19

ஐக்கிய அரபு இராஜ்ஜியதின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஷெயிக் அப்துல்லா பின் ஹல்தானி இலங்கை வந்துள்ளார்.

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று முன்தினம் இலங்கை வந்தடைந்த இவர் ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின் அரச குடும்பத்து அங்கத்தவராவார்.

அரபு இராஜ்ஜியத்தின் அமைச்சர் தலைமையில் 30 பேர் கொண்ட தூதுக்குழு விசேட விமானத்தின் மூலம் இலங்கை வந்துள்ளது. அவர் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பனவுடன் இரு தரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபடுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்திற்கு விஜயம்!



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் நாடாளுமன்றத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

ஜனாதிபதி செயலகம் பிரதமர் அலுவலகம், நாடாளுமன்றம், சுயாதீன ஆணைக்குழுக்கள் உள்ளிட்ட 26 நிறுவனங்களின் நிதி ஒதுக்கீடு தொடர்பான வரவு - செலவுத்திட்ட குழு நிலை விவாதங்கள் இடம்பெற்றன.

குழுநிலை விவாதத்தின் போதே ஜனாதிபதி நாடாளுமன்றத்திற்கு விஜயம் செய்தார்.

## நாடாளுமன்றத்துக்குள் பாம்பு!

கொழும்பு, நவ. 19

நாடாளுமன்றத்தின், முதலாவது இலக்க குழு அறைக்குள் இருந்து பாம்பு ஒன்று நேற்று முன்தினம் நாடாளுமன்றப் பணியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டது.

நாடாளுமன்றத் தரைத் தளத்தில் உள்ள முதலாவது இலக்கக் குழு அறையில் நேற்றுமுன்தினம் காலை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர்கள், அங்கு பதுங்கியிருந்த பாம்பு ஒன்றைக் கண்டுபிடித்து பிடித்துச் சென்றனர்.

பிடிக்கப்பட்ட பாம்பு, பூனைப்பாம்பு வகையைச் சேர்ந்தது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாம்பு கண்டுபிடிக்கப்பட்ட குழு அறை பெரும்பாலும், அமைச்சர்களுக்கும் அரச அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்புகளுக்குப் பயன்படுத்தப்படுவது வழக்கம்.

நாடாளுமன்றத்தின் பல்வேறு பகுதிகளிலும், இது போன்ற பாம்புகள் முன்னரும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற வளாகத்தில் பாம்புகளின் நடமாட்டம் அதிகம் இருப்பதால், நாடாளுமன்ற பணியாளர்கள் சிலருக்கு அண்மையில் பாம்புகளைப் பிடிக்கும் பயிற்சி அளிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க இராஜாங்க அதிகாரிகளை சந்தித்தார் பிரசாத் காரியவசம்!



அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான முதன்மை பிரதி உதவிச் செயலர், அலிஸ் வெல்ஸ் அம்மையாரை, வெளிவிவகாரச் செயலர் பிரசாத் காரியவசம் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

வொஷிங்டனில் உள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

ஜெனீவாவில் நடந்த பூகோள கால மீளாய்வு அமர்வில் பங்கேற்பதற்காக, பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தலைமையிலான குழுவில் இடம்பெற்றிருந்த இலங்கை வெளிவிவகாரச் செயலர் பிரசாத் காரியவசம் அங்கிருந்து வொஷிங்டனுக்குச் சென்றுள்ளார்.

இலங்கை வெளிவிவகாரச் செயலரின் திடீர் அமெரிக்கப் பயணம், மற்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள உயரதிகாரிகளுடனான சந்திப்புகளுக்கான காரணம் தெரியவரவில்லை.

## இன்னும் இரண்டு வாரங்களுக்குள் குறைவடைகிறது தேங்காய் விலை!

தேங்காயின் விலை எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் குறைவடையும் என்று தெங்கு செய்கை சபையின் தலைவர் கபில யகந்தலாவ தெரிவித்துள்ளார்.

மக்களின் தேங்காய்க்கான தேவையைப் பூர்த்திசெய்வதற்கான நடமாடும் சேவையும் அமுலாகின்றது.

கடந்த 15 ஆம் திகதி முதல் டிசம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை தேங்காய் அறுவடை பெறப்படுகின்றது.

இதற்கு 28 கோடி தேங்காய் அறுவடையாக எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

**19.11.2017 25.11.2017**

**சந்திராட்டமநாள்** : அசுவினி, பரணி, கார்த்திகை முதலாம் பாதம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் சுபகருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

**கணிப்பு: 'ஜோதிடமணி' பிரம்ம ஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா (ஜே.பி.)**

*2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் கார்த்திகைத் திங்கள் 4 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை பிரதமைத் திதி இரவு 07.15 மணிவரை. பின்னர் துவிதியை. நட்சத்திரம்: அனுஷம் இரவு 9.57 மணிவரை. பின்னர் கேட்டை. மரண யோகம் முழுவதும்.*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *அனுஷம்.*

**ராகுகாலம்:** *மாலை 4.17 மணிமுதல் 5.44 மணிவரை.*

**சுபநேரம்:** *காலை 9.10 மணி முதல் 10.42 மணிவரை.*

**திவசம் செய்ய வேண்டிய திதி:-** *கார்த்திகை மாத வளர்பிறை பிரதமை.*

## மேஷம்:

யோசனையான வாரம். பொருளாதாரம் நலிவடையும். தேக சுகம் பாதிப்படையும். குடும்பத்தில் உட்பூசல்கள் காணப்படும். வியாபாரத்தில் பெரிய நஷ்டம் ஏற்படும். உத்தியோகத்தில் கவனக் குறைவால் அதிகாரிகளின் கண்டனத்துக்கு ஆளாவார்கள்.

குடும்பப்பெண்களுக்கு பொறுப்புகள் அதிகரிக்கும். உறவினர்களால் தொல்லை உண்டாகும். நண்பர்கள் பகைவர்களாக மாறுவார்கள். மாணவர்களுக்கு ஞாபக சக்தி குறைவால் கல்வி ஊக்கம் குறையும்.

## ரிஷபம்:

சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும். உடல் நலம் பாதிப்படையும். மருத்துவச் செலவுகள் உண்டாகும். குடும்பத்தில் ஓரளவு சகஜ நிலை காணப்படும். வியாபாரத்தில் சமலாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் வேலைச்சுமை, அலைச்சல்கள் அதிகமாகும். திருமண காரியங்களில் தடை உண்டாகும்.

புதிய தொழில் முயற்சிகளைத்தள்ளிப் போடுவது நல்லது. யாருக்கும் பணம், நகைகள் இரவல் கொடுப்பதையோ, வாங்குவதையோ தவிர்க்கவும்.

## மிதுனம்:

நன்மையான வாரம். பணப் புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பஉறவுஅன்புடையதாக இருக்கும். அரச ஆதரவு கிடைக்கும். தொழிலில் தேக நிலை மாறி நன்மையைப் பெறுவார்கள். திருமணத் தடை நீங்கி, காரியம் கைகூடும். முதலீடு இல்லாத தொழில் நல்ல முன்னேற்றமடையும்.

தாயார்வழியில் பணவரவு கிடைக்கும். வியாபாரம் விறுவிறுப்பாக நடக்கும். உத்தியோகத்தர்களுக்கு உயர் அதிகாரிகளின் பாராட்டும் அனுசரணையும் கிடைக்கும்.

## கடகம்:

மேன்மையான வாரம். பொருள் வரவு திருப்தியைத் தரும். குடும்பத்தில் நெருக்கம், பாசம் அதிகரிக்கும். பெண்களின் சுயதொழிலில் இருந்த தேக நிலை மாறி நன்மை அடைவார்கள். பகையாய் இருந்த உறவினர்கள் மீண்டும் இணையும் வாய்ப்பு உண்டாகும். சிலருக்கு தூர பயணம் மேற்கொள்ள வேண்டி வரும்.தொழிலாளர்கள் உழைப்புக்குத் தகுந்த ஊதியம் பெறுவார்கள். வியாபாரிகளுக்கு வெளிநாட்டு ஒப்பந்த வாய்ப்பு அமையும்.

## சிம்மம்:

சம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். உடல் நலனில் சில பாதிப்பு உண்டாகும். குல தெய்வ வழிபாடுகளில் தடங்கல் உண்டாகும். தினமும் அலைச்சல் அதிகரிக்கும். வங்கி மூலம் பணம் பரிமாற்றம் செய்யும் போது கவனமுடன் செயற்பட வேண்டும்.

பிறர் விஷயங்களில் அநாவசியமாகத் தலையிடுவதைத் தவிர்க்கவும். வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். உத்தியோகத்தர்களுக்கு கடின உழைப்பு இருக்கும்.

## கன்னி:

விருத்தியான வாரம். பொருளாதாரம் விருத்தி அடையும். குடும்பத்தில் புரிந்துணர்வு அதிகரிக்கும். வியாபாரம் நல்ல விருத்தி அடையும். செய் தொழிலில் ஆதாயம் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் அடைவார்கள். பெண்கள் சமூக சேவையில் ஈடுபடுவார்கள். உத்தியோகத்தில் பதவி உயர்வு, சம்பள உயர்வு, வசதியான இடமாற்றம் என்பன கிடைக்கும்.

விவசாயத்தில் பயிர் விளைச்சல்கள் அதிகரிக்கும். சகோதர உறவு வலுவடையும்.

## துலாம்:

யோகமான வாரம். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் அந்நியோன்யம் அதிகரிக்கும். பெண்களுக்கு சுய தொழிலில் விருத்தியும் எண்ணியபடி நல்ல வரனும் அமையும். குடும்பத்தில் சுப காரியங்கள் சிறப்பாக நடக்கும்.

சகோதர உறவு வலுவடையும். வீடு, வாகன யோகம் உண்டாகும். அந்நிய நாட்டு உதவி கிட்டும். உத்தியோகத்தர்கள் திறமையால் முன்னேற்றம் அடைவார்கள். பிரிந்திருந்த உறவினர் மீண்டும் ஒன்று சேர்வார்கள்.

## விருச்சிகம்:

ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் வளர்ச்சி அடையும். குடும்ப ஒற்றுமை நிலவும். சுயதொழில் வளர்ச்சி அடையும். வாகன வசதி கிட்டும். மாணவர்களுக்கு கல்வி வளர்ச்சிக்கு ஆசிரியர் தரப்பில் ஒத்துழைப்புக் கிட்டும்.

நண்பர்கள் சகாயம் கிட்டும்.திருமணத் தடை விலகும். செய் தொழிலில் மேன்மை உண்டாகும். கலை ஞர்களின் எதிர்பார்ப்பு கைகூடும். குலதெய்வ வழிபாட்டை மேற்கொள்வதற்காக ஸ்தல யாத்திரை மேற்கொள்வார்கள்.

## தனுசு:

யோசனையான வாரம் ஆகும். பணவரவு குறையும். குடும்பத்தில் குழப்பநிலை காணப்படும். உத்தியோகத்தர்களுக்குப் பொறுப்புகளும், அலைச்சல்களும் அதிகரிக்கும். வியாபாரம் மந்த நிலையில் இருக்கும். தொழிலில் போட்டிகள் அதிகரிப்பால் வருவாய் குறையும்.

இதுவரை நோயால் வாடியவர்கள் நோய்கள் நீங்கி, ஆரோக்கியமடைவார்கள். மாணவர்களுக்கு உயர் கல்வி கற்கும் வாய்ப்பு தடைப்படும். திருமணப் பேச்சுகள் குழம்பிப் போகும். கொடுக்கல் வாங்கலில் அவதானம் தேவை.

## மகரம்:

சுபீட்சமான வாரம். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். சிலர் நண்பர்களின் உதவியுடன் புதிய தொழில் வாய்ப்பைப் பெறுவார்கள். திருமண காரியங்கள் மளமளவென்று ஒப்பேறும்.

உறவினர் வீட்டுச் சுப நிகழ்ச்சிகளில் குடும்பத்தவர்களுடன்கலந்து மகிழ்வார்கள். பிள்ளைகளால் பெருமையும், மகிழ்ச்சியும் உண்டாகும். குடும்ப ரகசியங்களைப் பிறரிடம் கலந்துரையாடாமல் இருப்பது நன்மை தரும். சிலர் சொந்த வீட்டுக்கு குடிபோவார்கள். வாகன யோகம் உண்டாகும்.

## கும்பம்:

மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் மத்திமமாக இருக்கும். உடல் நலக் குறைபாடுகள் வரலாம். உத்தியோகத்தர்கள் பணியின் போது கவனமாகச் செயற்பட வேண்டும். தொழிலாளர்களின் சுய முயற்சிகளுக்குப் பலன் கிட்டும்.

குடும்ப உறவில் கருத்து வேறுபாடுகள் இருக்கும். தேக ஆரோக்கியம் பாதிப்படையும். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. மாணவர்கள் கல்வியில் சுமாரான முன்னேற்றம் அடைவார்கள். கொடுக்கல், வாங்கலில் அவதானம் தேவை.

## மீனம்:

உயர்வான வாரம். வருமானம் உயரும். தொழிலில் சிறப்பாக முன்னேற்றம் கிடைக்கும். சகோதரர்கள் வழியில் உதவிகள் கிடைக்கும். இதுவரை வாட்டி வதைத்த நோய்கள் நீங்கி ஆரோக்கியம் அடைவார்கள்.

பெண்களின் எண்ணம் நிறைவேறும். சுயதொழிலில் வளர்ச்சியும், பொருளாதார நன்மையும் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வித் தரம் மேம்படும். சிலருக்கு கடல் கடந்து செல்லும் வாய்ப்புகள் உண்டாகும். உத்தியோகத்தர்களின் திறமைக்குத் தகுந்த வரவேற்பு கிடைக்கும்.

**வட மாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில், நல்லூர் முத்திரைச் சந்தி சங்கிலியன் பூங்காவில் நேற்று ஆரம்பமான "மரநடுகையும் மலர்க் கண்காட்சியும்" நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் சிறப்புரை ஆற்றினார். அவரின் உரை முழுமையாகத் தரப்பட்டுள்ளது.**



# இயற்கையில் பிறந்த நாம்

# இன்று செயற்கைக்கு அடிமையாகி விட்டோம்!

ஆண்டுதோறும் கார்த்திகை மாதம் முதலாம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை வடமாகாணத்தின் மரநடுகை மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டு வடமாகாண சபையின் விவசாய அமைச்சும், சனசமூக நிலையங்கள் மற்றும் வெகுஜன இயக்கங்கள் என அனைவரும் இணைந்து கொண்டு இந்நிகழ்வுகளை வெகுசிறப்பாக முன்னெடுத்து வருகின்றமை அனைவரும் நன்கறிந்ததே.

அந்த வகையில் இந்த வருடமும் "ஆளுக்கொரு மரம் நடுவோம் நாளுக்கொரு வரம் பெறுவோம்" எனும் தொனிப் பொருளில் வெகுஜன அமைப்புக்களுடன் இணைந்து கொண்டு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் அதன் தலைவர் பொ. ஐங்கரநேசனின் வழிகாட்டலின் கீழ் முன்னெடுக்கும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுவதில் மகிழ்வடைகின்றேன்.

மரநடுகை மாத கொண்டாட்ட நிகழ்வு வடமாகாணசபையின் திணைக்களங்களுக்கு மட்டும் உரித்தான ஒரு நிகழ்வு என்ற தவறான கருத்து பொதுமக்களிடையே நிலவுகின்றது. இந் நிகழ்வு ஆனது வடமாகாணசபையின் விவசாய அமைச்சால் அறிமுகப்படுத்தப்பட்ட போதும் இது வடமாகாணத்திலுள்ள அனைத்துப் பொது மக்களுக்கும் உரிய ஒரு நிகழ்வாகும்.

நாட்டில் சமாதானச் சூழல் ஏற்பட்ட பின்னர் பன்னாட்டு நிறுவனங்களின் உள்நுழைவுகள் பற்றியும் சந்தடியின்றி எமது வளங்களைச் சுரண்டிச் செல்கின்ற நிகழ்வுகள் பற்றியும் பலர் அறிந்திருக்க மாட்டார்கள். இவை மத்திய அரசின் அனுசரணையுடன் நடைபெற்று வருகின்றதோ என்ற சந்தேகம் எம்மிடம் வலுப்பெற்றுள்ளது. ஏனென்றால் வட மாகாணத்தின் சூழலியல் வளங்களைப் பாதுகாக்கின்ற பணிகளை மத்திய அரசு தன்னகத்தே கொண்டிருப்பது விந்தைக்குரியது. எமது சூழல் ஏனைய மாகாணங்களை விட வேறுபட்டது.

எமது கலை, பண்பாட்டு விழுமியங்கள் பெரும்பான்மை சமூகத்தின் பண்பாட்டு விழுமியங்களில் இருந்து வேறுபட்டவை. எனவே, எமது சூழலியலைப் பாதுகாக்கின்ற பொறுப்பு எமக்கே வழங்கப்பட்டிருக்க வேண்டும். இன்று எமது பகுதிகளில் காணப்படும் பெரிய மரங்களும் விருட்சங்களும் வகை தொகையின்றி வெட்டி அழிக்கப்படுகின்றமையும் அதன் பலனாக மழைவீழ்ச்சி சில வருடங்களில் வெகுவாகக் குன்றிப் போவதும் விவசாயப் பயிர்ச்செய்கை மற்றும் உபஉணவுப் பயிர், மரக்கறி வகைகள் உற்பத்தி வீழ்ச்சியடைவதும் வருடாவருடம் அதிகரித்துச் செல்வதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. போர்க் காலத்திலும் பசுமை அழிவு நடந்தது. இப்பொழுதும் தொடர்ந்து நடைபெறுகிறது.

நவீன இலத்திரனியல் கருவிகள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகள் ஆகியவற்றின் அபரீத வளர்ச்சி காரணமாக எமது பகுதியில் காணப்பட்ட சிட்டுக்குருவி போன்ற பல சிறிய பறவையினங்கள் முற்றாக அழிந்து போய் விட்டன என்று அறிவிக்கப்படுகிறது. இது



**பசுமையான சுற்றுப்புறச் சூழலை எமது சந்ததிக்கு விட்டுச் செல்வோம்!**

வருத்தத்திற்குரியது. இந்த நிலை தொடருமானால் எதிர்காலத்தில் எமது குழந்தைகளின் மூளை வளர்ச்சிகள் கூட பாதிப்படையக்கூடும். தினமும் பல லட்சக்கணக்கான நுண் அலைகள் குறுக்கும் நெடுக்குமாக எம் மத்தியில் பயணித்த வண்ணமாக உள்ளன. இவை குழந்தைகளின் மூளைகளில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியன.

வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் இந்த நுண்ணலைகளின் தாக்கங்கள் பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதற்கு அந்த நாட்டின் அரசாங்கங்கள் ஏற்ற பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. எனினும் எமது பகுதிகளில் தேவைக்கு அதிகமாக இந்தப் பாவிப்பானது ஒரு நவீன கலாசாரமாக மாறியிருப்பது வேதனைக்குரியது.

பாடசாலைக்குச் செல்கின்ற ஒரு சிறு பிள்ளையின் கையில் கூட அன்ரோயிட் கையடக்கத் தொலைபேசிகள் காணப்படுகின்றன. இவற்றின் தேவைகள் பற்றியும் இத்தொலைபேசிகள் சமூக கலாசார விழுமியங்களில் ஏற்படுத்தக் கூடிய பெரும் தாக்கங்கள் பற்றியும் இப்பிள்ளைகளின் பெற்றோர்கள் அறிந்துள்ளார்களோ நாம் அறியோம். வளர்ச்சியடைந்துள்ள இந்த இலத்திரனியல் யுகத்தில் கையடக்கத் தொலைபேசிப் பாவனையற்ற சமூகத்தை உருவாக்குவதென்பது இயலாத காரியம். எனினும் இந்த இலத்திரனியல் சாதனங்களை எம்மில் இருந்து எவ்வளவு தூரத்தில் வைத்திருக்கவேண்டும், எங்கு வைத்திருக்க வேண்டும்; அதன் பயன்பாடுகளை எவ்வாறு மட்டுப்படுத்த முடியும் என்பன பற்றி பொதுமக்கள் அறிவூட்டப்பட வேண்டும்.

எமக்கு முன்னைய சந்ததி பசுமைச் சூழலில் மிகச் சிறிய வருமானத்தில் மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ்ந்து வந்தனர். இன்று வருமானம் அதிகரித்து விட்டது. எனினும் வாழ்வில் இன்பமும் அமைதியும் மிகவும் குன்றிவிட்டன. அகலக்கால் வைக்கப்போய் இருப்பையும் இழந்த கதையாகி விட்டது. கொழும்பில் நண்பர் ஒருவருடைய அழகான வீடு ஒரு பிற நாட்டு தூதுவர் ஒருவருக்கு குத்தகைக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. ஒரு நாள் நண்பருக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. தோட்டத்தில் இருந்த ஒரு மரத்தை வெட்டவேண்டியிருக்கின்றது எனக் கூறப்பட்டது. அனுமதி வழங்கினார் நண்பர். அடுத்து வீட்டைப்போய் அவர் பார்க்கும்போது தோட்டம் வெட்டவெளியாக இருந்தது. மரங்கள் எல்லாம் நீக்கப்பட்டிருந்தன. ஏன் என்று கேட்டால் மரங்கள் பறவை களுக்கும் வேறு ஜந்துக்களுக்கும் உறைவிடமாகையால் பாதுகாப்புக் கருதி அவை அழிக்கப்பட்டு விட்டன எனக் கூறினார் தூதுவர். இன்றைய நிலை இவ்வாறு மாறியுள்ளது.

இந்த நிலையில் இயற்கையை நேசிக்கின்ற, இயற்கையோடு ஒன்றி வாழுகின்ற ஒரு சமூகத்தை உருவாக்க வேண்டிய ஒரு பெரிய பொறுப்பு எமக்கு உண்டு. இயற்கையில் பிறந்த நாங்கள் இன்று செயற்கைக்கு அடிமையாகி விட்டோம். உணவில் செயற்கை, உற்பத்தியில் செயற்கை, மருந்தில் செயற்கை! மக்கள் வாழ்க்கை செயற்கையின் சிறைக் கைதியாகிவிட்டது.

(18 ஆம் பக்கம் பார்க்க...)



தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா




**வட கொரிய மக்களின் சுதந்திரம் ஒருபுறம் இருக்கட்டும், வட கொரியாவிற்கு எதிரான யுத்த ஆபத்து அதன் அணுஆயுத திட்டம் குறித்த அக்கறையிலிருந்து ஊக்குவிக்கப்படவில்லை. எனினும், ஆசிய பசிபிக்கிலும், சர்வதேச ரீதியிலும் மூலோபாய மற்றும் பொருளாதார சக்திகளின் போட்டி மையமாக உருவெடுக்கும் சீனாவின் தற்போதைய எழுச்சியை தலைகீழாக மாற்ற இராணுவ வலிமையைப் பயன்படுத்த அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் திட்டமிடப்பட்ட மூலோபாயத்தின் ஒரு பகுதியாகவே இது உள்ளது.**



பெய்ஜிங்கில் ட்ரம்ப் ஆற்றிய உரை, அமெரிக்காவால் 25 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வரும் ஆக்கிரமிப்பு போர்கள், இரண்டாம் உலகப் போருக்கு பிந்தைய அதன் பொருளாதார மற்றும் மூலோபாய ஆதிக்கத்தின் சரிவுக்கு முட்டுக்கொடுப்பதற்காகவே அமெரிக்க ஆளும் உயரடுக்கினரின் உறுதிப்பாட்டால் உந்தப்பட்டிருக்கின்றன என்ற உண்மையை அடிக்கோடிட்டுக் காட்டியது.



அத்துடன் அவர், சீனா தனது பொருளாதாரத்தை அமெரிக்க வங்கிகள் மற்றும் பெருநிறுவனங்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கவேண்டும் என்ற மறைமுகமான அச்சுறுத்தல்களை விடுத்து, கொரிய தீபகற்பம் மீதான ஒரு போரை தொடுப்பதன் மூலமாக கிழக்கு ஆசியாவை ஸ்திரமற்ற தன்மைக்குள்ளும், கொந்தளிப்பிற்குள்ளும் மூழ்கடிப்பதற்கான அவரது அச்சுறுத்தலையும் சேர்த்து விடுத்தார்.

ட்ரம்ப், ஜி ஜின்பிங் மற்றும் அங்கு கூடியிருந்த CCP பிரமுகர்களிடம், சீனாவுடனான அமெரிக்க வர்த்தக பற்றாக்குறை, ஒரு வருடத்திற்கு 500 பில்லியன் டொலரை விட மிக அதிகமாக இருந்தது என, அதாவது 2016 ஆம் ஆண்டில் 347 பில்லியன் டொலர் என்றிருந்த உத்தியோகபூர்வ புள்ளிவிவரத்தைக் காட்டிலும் மிக அதிகமாக இருந்ததெனக் கூறினார்.

‘‘சந்தை வெற்றிக்கான தடைகளுடன் கூடிய, இந்த பற்றாக்குறையை இயக்குவிக்கும் நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள் பற்றி நாம் உடனடியாக கவனம்செலுத்த வேண்டும் என வலியுறுத்தினார். மேலும், அமெரிக்காவும் அதன் நிறுவனங்களுமே குறைந்த பட்சம் 300 பில்லியன் டொலர் தொகையை ஒரு வருடத்துக்கு விலை கொடுக்கின்றதான கட்டாய தொழில் நுட்ப பரிமாற்றம் மற்றும் அறிவுசார் சொத்து திருட்டு ஆகியவை குறித்து உண்மையிலேயே நாம் கவனம் செலுத்த வேண்டும்’’. என்றும் கூறினார்.

**நாம் இதை மாற்ற வேண்டும், ஏனெனில் நமது பெரிய அமெரிக்க நிறுவனங்களுக்காக மட்டும் வெறுமனே இது வேலை செய்யாது. மேலும், நமது சிறந்த அமெரிக்க தொழிலாளர்களுக்காகவும் இது வேலை செய்யாது என்றவர் நிறைவு செய்தார்.**

‘‘நான் சீனாவைக் குற்றஞ்சாட்டவில்லை ’’ என்றும், வர்த்தகப் பற்றாக் குறைக்குப் பொறுப்பான கடந்த நிர்வாகங்களைக் குற்றம்சாட்டுவதன் மூலம் உள்நாட்டு அரசியல் மதிப்பீடுகளைப் பெறுவதற்கே நான் முயற்சித்தேன் என ட்ரம்ப் அறிவித்தார்.

இருப்பினும், உண்மை என்னவென்றால், ஒபாமா நிர்வாகத்தின் ஆசியாவை நோக்கிய முன்னெடுப்பு என்ற இராணுவக் கொள்கைக்கும் மற்றும் அதனால் முன்மொழியப்பட்ட Trans-Pacific Partnership (TPP) வர்த்தக ஆதரவளிப்போர் தொகுப்பிலுள்ள அங்கத்துவ விதிமுறைகளுக்கும் உயிரூட்டுவதாக பெய்ஜிங்கிற்கு எதிரான அதே மோதல் நிலைப்பாடு தான் அவரது உரையில் அடங்கியிருந்தது.

சீன உள்நாட்டு சந்தைகளிலும் மற்றும் மிகவும் சர்ச்சைக்குரியதான அதன் வங்கி மற்றும் நிதி அமைப்புகள் உள்ளிட்டவைகளிலும் போட்டியிடும் அமெரிக்க பெருநிறுவனங்கள் மீதான தனது தடைகளை பெய்ஜிங் நீக்கிய பின்னரே TPP இல் அது இணைந்து கொள்ள முடியும் என ஒபாமா வலியுறுத்தி இருந்தார்.

மேலும், அவரது நிர்வாகம், சீனா தனது அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களை தனியார் மயமாக்குவதை முடுக்கிவிடவும் மற்றும் அமெரிக்காவிலும் பிற இடங்களிலும் இருக்கும் அறிவார்ந்த சொத்துரிமைகளுக்கான அதே பாதுகாப்பை சட்டமாக்கவும் கோரிக்கை விடுத்திருந்தது. காப்புரிமைகளின் கட்டுப்பாடு, அமெரிக்க அடிப்படையிலான தொழில்நுட்பம், மருந்துகள் மற்றும் இதர கூட்டு நிறுவனங்களுக்கு உரிமம் வழங்குவதில் நூற்றுக்கணக்கான பில்லியன் டொலர் வருவாய் போக்கை உறுதி செய்கிறது.

**ட்ரம்ப் TPP ஐ நிராகரித்துவிட்டார், என்றாலும் சுங்க மற்றும் வர்த்தக யுத்த அச்சுறுத்தலை விடுப்பது மற்றும் சீன அடிப்படையிலான பெருநிறுவனங்களின் மீதான ஏனைய பொருளாதாரத் தடைகளைச் சுமத்துவது போன்ற பிறவழிகளில் ஒபாமாவை போல அதே முடிவுகளைத் தேட முனைகிறார். அவரது பெய்ஜிங் கருத்துக்கள், வியட்நாம், டா நாங்கில் தொடங்கும் ஆசிய பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு அரங்கத்தில் (Aisa Pacific Economic Cooperation (APEC) அவர் அமெரிக்க பெருநிறுவன நலன்களுக்கான சலுகைகள் குறித்த கோரிக்கைகளை முன்வைக்க உள்ளார் என்பதை தெரிவித்தன.**





அதே நேரத்தில், அவரது நிர்வாகம் முன்னெடுப்பு அல்லது மறுசீரமைப்பு போன்ற வார்த்தைகளை கைவிட்டது. 2011 இல் ஒபாமாவின் கீழ் ஆசிய பிராந்தியத்தில் தொடங்கப்பட்டதான அமெரிக்க விமானப்படை மற்றும் கடற்படையின் 60 சதவிகிதத்தை மையப்படுத்தி இது தொடர்கிறது.

இந்த இராணுவக் கட்டமைப்பின் பின்னால் இருக்கும் மூலோபாய நியதி என்பது அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் சீன முதலாளித்துவ செல்வந்த தட்டினருக்கும் இடையிலான பொருளாதார போட்டி இறுதியில் மோதல்களுக்கும் மற்றும் இரு அணு ஆயுத வல்லரசுகளுக்கு இடையேயான போருக்கான சாத்தியக்கூறுகளுக்கும் வழிவகுக்கும் என்பது குறித்த ஒரு கணக்கீடாகும்.

சிறிய நாடான வட கொரியாவில் ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வரவும் மற்றும் அமெரிக்காவுடன் இணக்கமாகவுள்ள தென்கொரியாவிற்குள் அதனை இணைக்கவும் அதன் அணு ஆயுதங் களை சாக்குப்போக்காக பயன்படுத்தும் உந்துதலின் பின்னணியில் இறுதியில் சீனாவுடனான ஒரு மோதலுக்கான தயாரிப்புக்கள் மட்டுமே உள்ளன.

இத்தகைய விளைவு, அமெரிக்க மற்றும் அதன் கூட்டணிப் படையினர் சீனாவின் வடகிழக்கு எல்லை வழியாக தீபகற்பத்தினுள் நேரடியாகப் புகுவதற்கான நிலைமைகளை உருவாக்கும்.

1950 இல், இவ்வாறான ஒன்று நடைபெறுவதைத் துல்லியமாகத் தடுக்கும் பொருட்டு, அமெரிக்க தலைமையிலான ஆக்கிரமிப்பு படையிலிருந்து வட கொரியாவைப் பாதுகாக்க நூறாயிரக்கணக்கான சீன துருப்புக்கள் அனுப்பப்பட்டன.




(கேள்வி தொடரும்)

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. 'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.



# கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 10

# உன்னைச் சரணடைந்தேன்



## ஐந்தாவது தமிழாராய்ச்சி மாநாட்டுப் பயணம் 05.01.1981

கம்பன் கழக வரலாற்றில் இந்த மாநாடு ஒரு திருப்பு முனை. தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆரால், இம்மாநாடு மதுரையில் 1981 இல் நடத்தப்பட்டது. எங்களை அறிவுத் துறையில் எப்போதும் ஊக்குவித்துக் கொண்டிருந்த, எங்கள் ஆசிரியர் வித்துவான் வேலன் அவர்கள், '' எப்படியும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளுங்கள் என்று எங்களைத் தூண்டினார். இலங்கையில் இருந்து கூட்டணி எம்.பிக்கள், பல்கலைக்கழக அறிஞர்கள், எழுத்தாளர்கள், பெரிய வர்த்தகர்கள் என ஒரு பெரும் கூட்டம், தமிழக அரசின் அழைப்பின் பெயரில் அவ்விழாவில் கலந்து கொண்டது. மாநாட்டுக்கென்று இலங்கையில் ஒரு சங்கம் அமைக்கப்பட்டு, மேற் சொன்னவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

எங்களை அப்போது எவருக்கும் தெரியாது. விழாவுக்கு நாங்களாகச் செல்லவும் எங்களுக்கு வசதி இருக்கவில்லை. ஆசையோவிட்ட பாடில்லை. எங்களை மாநாட்டுக்கு அழைக்கும்படி, துணிந்து தமிழக முதலமைச்சருக்கு நானும் குமாரதாசனும் ஒரு வெள்ளைத் தாளில் கடிதம் எழுதிப் போட்டோம். அப்போது கழகத்துக்கென ஒரு 'லெற்றர் பாட்' கூட இருக்கவில்லை.

''இளைஞர்களான நாங்கள், தமிழ்ப் பணி செய்ய விரும்புகின்றோம். தங்களின் மதுரை மாநாட்டைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்ததால் ஊக்கம் பெறுவோம்'' இவ்வளவே நாம் எழுதிய கடிதத்தின் செய்தி. 'முதலமைச்சர், தமிழ்நாடு, இந்தியா' என்று மட்டும் முகவரியிட்டு அக் கடிதத்தை அனுப்பினோம். விளையாட்டுத்தனமான முயற்சி! பதில் வரும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. ஆச்சரியமாக, ஒரு வாரத்தில் முதல்வரது முதன்மைச் செயலாளர் திரவியம் என்பவரிடம் இருந்து, எங்கள் கழகத்தினர் பத்துப் பேருக்கு அழைப்பு வந்தது. அதிசயித்துப் போனோம். அப்போது கழகத்தில் பத்துப் பேர் கூட இருக்கவில்லை.

செலவுக்குப் பணம், பாஸ்போட், விசா, வீட்டில் அனுமதி, இவை அனைத்தையும் ஒரு வாரத்தில் ஒருவாறு சமாளித்து, நான், குமாரதாசன், மாணிக்கம், கிரி ஆகியோரோடு, மாணிக்கத்தின் அக்கா, அத்தான், அத்தை ஆகிய ஏழு பேரும் மாநாட்டுக்குப் புறப்பட்டோம். படாத பாடு பட்டு விழாத் தொடங்கிய அடுத்த நாள் அங்கு போய்ச் சேர்ந்தோம். கடுமையான பணத் தட்டுப்பாடு.

பலரதும் அபிப்பிராயங்களை உள்வாங்கி, பொருளாதார நோக்கத்துக்காக, 'ரவுசர்' துணிகள், சவர்க்காரங்கள், தேயிலை, தேங்காய் எண்ணெய், சலூனில் பாவிக்கும் சவரக்கத்தி என, பலவற்றையும் வியாபாரிகள் போல் வாங்கிச் சென்றமையும், விலைப்படாமற்போன சவரக்கத்திகளை சலூன் சலூனாக ஏறி விற்க முயன்றமையையும் இப்போது நினைக்க வெட்கத்தில் உயிர் போகின்றது. அப்போது 'இராமானுஜம்' கப்பல், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஓடிக்கொண்டிருந்தது. பிரமுகர்கள் சென்றபடியால், முதல் நாள் கப்பலில் எங்களுக்கு இடம் கிடைக்கவில்லை. இரண்டாம் நாள் கப்பலில் பிந்திச் சென்ற போதும், அவ்விழாவில் எவருக்கும் கிடைக்காத புகழ் எங்களுக்குக் கிடைத்தது.

### விழா 'பட்ஜ்ஜுக்கு' அலைந்தோம்

பிந்திப் போனமையால் பேராளர்களுக்கு வழங்கப்பட்ட அடையாள அட்டை, 'பட்ஜ்' முதலியவை எமக்குக் கிடைக்கவில்லை. 'அம்மாமி' அப்பக் கட்டு சைசில், கலர் கலராக அந்த 'பட்ஜ்கள்' தயாரிக்கப்பட்டிருந்தன. எமக்கு முன் சென்றவர்கள் எல்லாம் அவற்றைக் குத்திக் கொண்டு திரிந்தனர். அந்த நேரத்தில் ஒரு விழா 'பட்ஜ்' என்பது, எங்களுக்குப் பெரிய விசய மாய் இருந்தது. திரும்பி வந்து இலங் கையில் காட்டிப் பெருமைப்பட, ஒரு 'பட்ஜ்' கிடைக்காதா என அலைந்தோம்.

ஆய்வரங்கு நடைபெறும் மண்டபத்துக்குப் போனால் 'பட்ஜ்' கிடைக்கலாம் என்று ஒருவர் சொல்ல, அங்கு ஓடினோம். மதுரைக் காமராஜர் பல்கலைக் கழகத்தில் ''தொல்காப்பியர் அரங்கு'' எனும் பெயரில், ஆய்வரங்க மண்டபம் அமைக்கப்பட்டிருந்தது. அறிஞர்களுக்கான ஆய்வுகள் நடைபெறும் மண்டபம் அது. பல நாட்டு அறிஞர்களும் அங்கு கூடியிருந்தனர். அங்கு தான் நம் நாட்டில் இருந்து சென்ற அறிஞர் பலரும் இருந்தனர்.

அங்கிருந்த மாநாட்டுக் குழு உறுப்பினர் ஒருவரிடம் உதவி கோரினோம். தாடைக்கு கீழ் வரை மீசை நீண்டிருந்த அந்தக் கரைவேட்டி மனிதர், பணிவுடன் ''என்ன வேண்டும்?'' என்றார்? குழந்தைத் தனமாய் விழா 'பட்ஜ்' ஒன்று வேண்டும் என்றோம். அது முடிந்து விட்டதாய்ச் சொல்லி ''வேறு ஏது வேண்டுமானாலும் கேளுங்கள்?'' என்றார். நப்பாசையில் ஒன்றும் யோசிக்காமல் அடுத்த நாள் ஆய்வரங்கில் பேச, எங்களுக்குச் சந்தர்ப்பம் தாருங்கள்? எனக் கேட்டோம். '' காலை சந்தர்ப்பம் தரப்படும் வாருங்கள்!'' என்றார். திகைத்துப் போனோம்.

### கிண்டலடித்த பெரிய மனிதர்

அப்போது, யாழ்ப்பாணத்தின் வசதி மிக்க பல பிரமுகர்கள் இருந்தனர். அவர்களுள் சண்முகலிங்கம் என்பவரும் ஒருவர். 'நொதேர்ன்' இன்டஸ்ரீஸ் எனும் பெயரில் ஒரு நிறுவனத்தை அவர் நடத்தி வந்தார். அப்போது, யாழ். சைவ பரிபாலன சபை அவர் கையில் தான் இருந்தது. தன்னை ஒரு சமய அறிஞராய்க் காட்டிக் கொள்வார்.

அவரது வசதி நோக்கி தமிழறிஞர்கள் சிலரும், அங்ஙனமாய் அவரை அங்கீகரிப்பர். இவரது ஊரும் சுருவிலே. மாணிக்கத்தின் அழைப்பில் சுருவில் கோவிலுக்குச் சொற்பொழிவுக்குப் போகும் போதெல்லாம் அந்தக் கோவிலின் பொருளாளராக இருந்த இவர், என்னை இளக்காரமாகப் பேசி மகிழ்வார். இவரும் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு அழைப்பின் பெயரில் வந்திருந்தார். விழா 'பட்ஜுக்காக' நாங்கள் அலைந்து திரிந்தபோது, மாநாட்டில் வழங்கப்பட்ட அன்பளிப்புப் பையோடு, அறிஞர் தோரணையில் நின்ற அவர், எங்களைக் கண்டு, கிண்டலாக, ''இது அறிஞர்களுக்கான நிகழ்ச்சி நடக்கிற மண்டபம், நீங்கள் எங்கே இங்கே நிக்கிறீங்கள்? உங்கட பட்டிமண்டப நிகழ்ச்சி எல்லாம் அங்க எல்லோ நடக்குது'' என்றார். மாநாட்டு நிகழ்ச்சிகளை ''தொல்காப்பியர் அரங்கு'', ''மூவேந்தர் அரங்கு'' என இரண்டு அரங்குகளில் நடத்தினார்கள். முதலரங்கு ஆய்வறிஞர்களுக்கானது. இரண்டாவது அரங்கு பொது மக்களுக்கானது. மூவேந்தர் அரங்கிலேதான் பட்டிமண்டபம், கவிஞரங்கம் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அப்போதெல்லாம் யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், பட்டிமண்டபங்களைக் கிண்டல் செய்வார்கள். சண்முகலிங்கமும் அந்த அடிப்படையில் தான், எங்களையும் ''பட்டிமண்டபக் காரர்'' என்னும் தொனிப்படக்கிண்டலடித்தார். அந்த ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, எங்கள் காரியத்தைப் பார்க்கச் சென்றோம். அடுத்த நாள் நிலைமை மாறப் போவதை, அவரும் அறிந்திருக்கவில்லை. நாங்களும் அறிந்திருக்கவில்லை.

### எம்.ஜி.ஆர். வந்தார்


அரங்கில் சந்தித்தவர். அடுத்த நாள் பேசச் சந்தர்ப்பம் தருகிறேன் எனச் சொன்னமையால், இரவு முழுக்கத் தூக்கம் இல்லை. அடுத்த நாள் ஒன்பது மணிக்குத் தொடங்க வேண்டிய விழாவுக்கு, ஏழு மணிக்கே போய் விட்டோம். முதல் நாள் எங்களை வரச் சொன்னவரை எங்கு தேடியும் காணவில்லை. எங்களைச் சமாளித்து விலத்துவதற்காக, அவர் பொய் சொல்லியிருக்கிறார் என்பது கூட, அப்போது எங்களுக்குத் தெரியவில்லை. ஐயாயிரம் பேர் இருக்கக்கூடிய மண்டபம் அது. வெறும் ஐநூறு அறுநூறு பேர் தான் அன்று உட்கார்ந்திருந்தனர். பேச வாய்ப்பளிப்பதாய் வாக்குத் தந்தவரை தேடிக் களைத்த நிலையில், திடீரென பேரிரைச்சல் ஒன்று கேட்டது. கருப்புக் கண்ணாடியுடன் ஒரு கார் வர, அதன் பின்னே ஆயிரக் கணக்கான மக்கள் கூட்டம் ஓடி வந்தது. நிகழ்ச்சி நிரலில் இல்லாமல் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். திடீரென அங்கு விஜயம் செய்தார். அன்றைய மேடையில் ''சிலம்புச்செல்வர்'' ம.பொ. சிவஞானம், நீதிபதி எஸ்.மகாராஜன் போன்ற பேரறிஞர்கள் அமர்ந்திருந்தனர். ம.பொ.சி. அப்போது தமிழக அரசின் மேலவைத் தலைவராய் இருந்தார். அவரைக் கௌரவிக்கவே எம்.ஜி.ஆர். வந்திருக்கிறார் என அறிந்தோம். எம்.ஜி.ஆர். ரசிகர்களால், நிமிடத்தில் மண்டபம் நிறைந்து வழிந்தது. குமாரதாசனைத் தவிர, என்னோடு வந்த அனைவரும் கூட, எம்.ஜி.ஆரைப் பார்க்கவென எங்களை அநாதரவாய் விட்டு விட்டு உள்ளே சென்று விட்டனர். எம்.ஜி.ஆர். மண்டபத்துக்கு வந்ததும் மாநாட்டில் பேச வேண்டும் என்னும் எண்ணம் எனக்கு மேலும் அதிகரித்தது.

(தொடரும்...)

காலைக்கதிர்
Kalaikkathir



# இணைய உலகையே கலக்குக் கலக்கிய குறும்படம் 'லட்சுமி'



லட்சுமி– கடந்த வாரம் முழுக்க இணைய உலகை விவாத மேடையாக்கிய குறும்படம். அப்படி என்ன இருக்கிறது அந்தப் படத்தில்? சலிப்பான திருமண வாழ்க்கையைக் கொண்ட பெண்ணுக்கு ஒரு கலைஞனின் அறிமுகம் கிடைக்கிறது. அது ஒரே ஒருநாள் ஆயுள் கொண்ட உடல் சார்ந்த உறவாகப் பரிணமிக்கிறது. மறுநாள் அவள் தன் பாதையை மாற்றிக் கொள்கிறாள். அதோடு படம் முடிகிறது.

இந்தப் படம். தன்னைத் தூக்கி வளர்த்த பெண்ணின் மேல் காதல் கொள்ளும் சிறுவன், தன் தாயிற்குத் திருமணம் தாண்டிய உறவு இருக்கின்றமையை அறிந்து, அவளை புரிந்து கொள்ள முயற்சிக்கும் இளைஞன் என ஏராளமான கதைகளை இதற்கு முன்னால் தமிழ்ச் சமூகம் பார்த்திருக்கிறது தான். ஆனாலும் இந்தப் படத்திற்கு ஏன் இவ்வளவு எதிர்ப்புகள்?

அவ்வளவாகப் பேசப்படாத, பெண்ணின் திருமணம் தாண்டிய உறவைப் பேச இயக்குநர் முற்பட்டிருக்கிறார். ஆனால், அதையும் வழக்கமான பாணியிலேயே அடைத்தது

தான் மிகப்பெரிய உறுத்தல். இந்த ஸ்டீரியோடைப் 'லட்சுமி' என்ற பெயரில் இருந்தே தொடங்குகிறது. அந்தப் பெயரை சொன்னவுடனே சேலை கட்டிய, நடுவகிடெடுத்து பொட்டு வைத்த, குனிந்த தலை நிமிராத பெண் உருவத்தை எத்தனை பேரால் உருவகப் படுத்த முடிகிறது? பெரும்பான்மையானவர்களால் இது முடியும். நம் பொதுபுத்தியில் பிரசவிக்கும் இந்தத் தோற்றத்திற்கு முட்டுக் கொடுக்க, 'பொண்ணுனா காலண்டர்ல இருக்கிற லட்சுமி, சரஸ்வதி மாதிரி பாந்தமா இருக்க ணும்' போன்ற சொல்லாடல்களையும் உருவாக்கி வைத்திருக்கிறோம்.

அடுத்த ஸ்டீரியோடை கலைஞனோடு காதலில் விழுவது! இயக்குநரை சொல்லித் தவறில்லை. ஒரு சிற்பக் கலைஞனோடு, ஒரு கவிஞனோடு, ஓர் ஓவியனோடு, ஓர் எழுத்தாளனோடு, ஒரு நாடோடியோடு காதலில் விழுதலே சுவாரஸியம் என எழுதப்பட்ட புகழ்பெற்ற கதைகள் ஏராளம் இருக்கின்றன. 'அவர்கள் ஒருநாளும் சலிப்பான வாழ்க்கையை வாழமாட்டார்கள். சின்னச் சின்ன விடயங்களிலும் சுவாரஸ்யங்களைப் புகுத்தி வாழ்க்கையைக் கொண்டாடும் ராஜகுமாரர்கள் அவர்கள்' என்பதுதான் இந்தக் கதைகள் சொல்லும் நீதி. ஆனால், நிஜத்தில் காதலைப் பற்றி மாய்ந்து மாய்ந்து எழுதும் கவிஞனுக்குதன் ஜோடியோடு காதல் புரிய நேரமே இருக்காது. அவர்களின் கற்பனை முழுக்க முழுக்கத் தங்கள் படைப்புகளோடு நின்றுவிடுபவைதான். "அவரோட உலகமே வேற. குடும்பத்தைப் பற்றி அவருக்கு நினைப்பே இருந்ததில்ல. எனக்கு பிரிஞ்சுடலாம்னு கூட தோணியிருக்கு" – அறிவுஜீவிகள் சமூகம் கொண்டாடும் ஒரு பிரபல எழுத்தாளரின் மனைவி உதித்த இந்த வார்த்தைகள்தான் ஒரு சோறு பதம்.



அடுத்தது, அந்த பஸ் ஸ்டாப் உரையாடல். இன்டெலக்ச்சுவலிஸம் ஆல்ஃபா, ஆணுக்கான தகுதியாக மாறிவிட்டது தான். உரையாடல்கள் அடுத்த கட்டத்திற்கு நகர உதவும்தான். ஆனால், முன்பின் தெரியாத, ஓவியம் பற்றி கொஞ்சமும் அறிந்திடாத பெண்ணிடம் போய் "ஏஞ்சலோ தெரியுமா? பிக்காஸோகிட்ட பேசிருக்கியா?" என்றெல்லாம் கேட்டால், "நான் நடந்தாவது வீட்டுக்குப் போயிடுறேன் சா மி" என கிளம்பிவிடுவார். எந்த உரையாடலுக்கும் ஒரு பொதுவான கனெக்டிங் பாயின்ட் முக்கியம். இந்தப் படத்தில் நடக்கும் உரையாடலில் செயற்கைத்தனமே மிஞ்சுகிறது.

அடுத்தது, பாரதியார் பாடல்கள். வீழ்வேனென்று நினைத்தாயோ டிர்ட்கள், சின்னப் பாரதி, குட்டிப் பாரதி பட்டங்கள் என ஏற்கெனவே பாரதியார் படாதபாடு பட்டுக்கொண்டிருக்கிறார். பாரதியை மேற்கோள் காட்டி எதைச் சொன்னாலும் அது மேக்கிங்கை மேட்ச் செய்துவிடும் என இயக்குநரும் நினைத்திருப்பார் போல. ஆனால், பொதுவுடைமை ஆக்கப்பட்ட படைப்பென்பதால் அதைப் பயன்படுத்த அவருக்கு உரிமை இருக்கிறது.

அது ஏன் மிடில் க்ளாஸ் பெண்? பார்வையாளர்கள் அந்த வகுப்பைச் சார்ந்தவர்கள் என்ற வணிகநோக்கம் காரணமாக இருக்கலாம். ஆனால், சகல விளைவுகளையும் மறந்து ஒரே நாளில் புது உறவிற்குத் தயாராவாள் என்பதை



ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதற்கான சாத்தியங்கள் இல்லை என்பதில்லை. அதைப் பற்றி யோசிப்பதற்கான வாய்ப்புகளைச் சமூகம் வழங்குவதில்லை என்பதுதான் உண்மை. அதேசமயம், அவள் எடுக்கும் முடிவிற்குக் காரணம் கணவன் இன்னொரு பெண்ணோடு தொடர்புவைத்திருப்பதுதான் என்ற கருத்துத் திணிப்பும் துருத்தலாகவே உள்ளது. ஆனால், இதற்கே தரம் குறைந்த விமர்சனங்கள். கணவன் நல்லவனாக இருந்து லட்சுமி இந்த முடிவு எடுத்திருந்தால் கேட்கவே வேண்டாம்!

ஒரு முதல்பட இயக்குநரின் படத்தில் எந்த அளவிற்கான முதிர்ச்சி இருக்குமோ, அதுதான் இந்தப் படத்திலும் இருக்கிறது. இந்த சின்னச் சின்ன ஸ்டீரியோடைப்புகள்தான் மோக முள் படத்தை, அம்மா வந்தாள் நாவலை பேசாமல் ஏற்றுக்கொண்ட மனத்தை இதில் ஒன்றைச் செய்யாமல் அலைக்கழிக்கின்றன போல.

**குவியும் விமர்சனங்கள்:**

ஒரு படைப்பு விவாதப் பொருளாக மாறும்போதுதான் அடுத்த கட்டத்திற்கு நகர்கிறது. மேற்சொன்ன ஸ்டீரியோடைப்புகளை எல்லாம் வைத்து விமர்சனம் செய்யும்போது விவாதம் ஆக்கப் பூர்வமாக அடுத்த கட்டத்திற்குச் செல்ல வாய்ப்பிருக்கிறது. ஆனால், ஒருசிலரைத் தவிர மற்றவர்களின் விமர்சனங்களில் வன்மமே தெறிக்கிறது. காரணம்? முற்போக்கு முகமூடி மாட்டிக்கொள்வது அவ்வளவு சுலபமல்ல. வரம்பை மீறிய இந்தமாதிரியான பிரதிகள் வரும்போது அதை ஆதரிப்பதாகக் காட்டிக்கொள்ள வேண்டும்.

ஆனால், 'ஆம்பளை எப்படினாலும் இருக்கலாம், பொண்ணு இப்படித்தான் இருக்கணும்'என்ற பழகிப்போன பழைமைவாத எண்ணமும் உள்ளே கிடந்து அழுத்தும். ஈயம் பூசுனமாதிரியும் இருக்கணும், பூசாத மாதிரியும் இருக்கணும் நிலை இது. ஆக, விமர்சனத்தை வேறு வழிகளில் வைக்கிறார்கள். அதற்குப் பாரதியாரும், கதிரின் அமெச்சூரான பாத்திரப் படைப்பும் சாக்குகளாக உதவுகின்றன.

இயக்குநர் பாரதியை அசிங்கப்படுத்தி விட்டார் என்றால், 'ஆன்ட்டியை கரெக்ட் பண்ணணுமா? பாரதி பாட்டு பாடு' என மீம் போடுவது மட்டும் எந்தவகையில் வரும்? லட்சுமியாக நடித்த பெண்ணின் பழைய விளம்பரங்கள், படங்களைப் பயன்படுத்தி கமென்ட் தட்டுவது ஜென்டில் மேன்களின் வேலையா என்ன? உண்மையில் படத்தில் வந்ததைவிட நிஜத்தில் வந்த மீம்களில்தான் பாரதியாரும் பெண்களும் சிறுமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

இங்கே இரண்டே நிலைப்பாடுகள் தான். ஒன்று, வேர்களை யோசிக்காமல் கொச்சைப்படுத்துவது, இல்லையென்றால், தெய்வீக லட்சணம் கொடுத்து புனிதப்படுத்துவது. செக்ஸ் பல ஆண்டுகளாக இப்படி இரண்டு நிலைப்பாடுகளுக்குள் சிக்கித் தவிக்கும் சப்ஜெக்ட். "அப்படி என்ன அவசரம் உனக்கு?" என கேவலமாக கொச்சைப்படுத்துவதும் தவறுதான். 'இதுதான் மொத்த கலாசாரத்துக்கான அடிப்படை' என புனிதப்படுத்துவதும் தவறுதான். அதுவும் பசி, தூக்கம் போன்ற கட்டாய உடல்தேவை. பல திருமணங்கள் உடைவது இப்படியான தீர்க்கப்படாத தேவைகளால்தான் என்பதும் உண்மை தானே. எனவே செக்ஸை தேவையாக பார்க்கும் மனநிலை அவசியமான ஒன்றாக இருக்கிறது. ஆனால் நிஜம் அப்படித்தான் இருக்கிறதா?


செக்ஸைப் பற்றி பெண்கள் நினைப்பதே இங்கு பாவத்திற்குரிய செயல். அதைப் பற்றி தங்கள் தோழிகள் குழுவிற்குள் பேசிச் சிரிக்கலாம். ஆனால், வீட்டில் பேசமுடியாது. திருமணமே செய்திருந்தாலும் கணவனிடம் பேச முடியாது. எங்கே நாம் முதலில் அழைப்பு விடுத்தால் கணவன் சந்தேகப் படுவானோ? என்ற தயக்கம் பெரும்பான்மை பெண்களுக்குள் இருக்கிறது. அந்தத் தயக்கம் உண்மைதான்.

கணவனுக்கென்று இல்லை. காதலர்களுக்கும் பெண்கள் முதலில் அழைப்பு விடுப்பதென்பது பிடிப்பதில்லை. விளைவு, சந்தேகமும், பட்டப் பெயர்களும் பெண்களைத் துரத்தி வரும்.

(18 ஆம் பக்கம் பார்க்க....)



# புரட்சி வீரர் சரிந்தார் இராணுவப் புரட்சியில்!



ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தில் இருந்த ஸிம்பாப்வே நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்டவர் ரொபர்ட் முகாபே (Robert Mugabe). ஸிம்பாப்வேயின் முந்தைய பெயர் ரெகோத்சியா. வடக்கு ரெகோத்சியா, தெற்கு ரெகோத்சியா என இரண்டு பிரிவுகளாக இருந்தது. தெற்கு ரெகோத்சியாவை பிரிட்டிஷ் ஆண்டது. சிறுபான்மையினராக இருந்த ஆங்கிலேயர்கள் ஆட்சி செய்தனர். பெரும்பான்மை கறுப்பர்கள் இருக்கும் தேசத்தில் இருந்து ஆங்கிலேயர்களை அகற்றும் போராட்டங்கள் 1960-களில் தீவிரம் அடைந்தன. ஆங்கிலேய அரசுக்கு எதிராக குரல் எழுப்பியதால் தேசத் துரோக வழக்கில் Robert Mugabe கைதுசெய்யப் பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். விடுதலை ஆனதும், வெளிநாட்டில் தலைமறைவாக இருந்த முகாபே, ஸிம்பாப்வே ஆபிரிக்க தேசிய யூனியன் என்ற கட்சியைத் தொடங்கி, அதன் தலைவர்



ஆனார்.

**விடுதலைப் போராட்டம்**

ஆங்கிலேய அரசுக்கு எதிராக மக்களைத் திரட்டி போராட்டத்தை தீவிரப்படுத்தினார். தெற்கு ரெகோத்சியாவின் பிரதமராக இருந்த Ian Smith க்கு எதிராக பல போராட்டங்கள் நடைபெற்றன. போராட்டங்கள் ஓயாதமையை அடுத்து தெற்கு ரெகோத்சியாவுக்கு விடுதலை கொடுக்க பிரிட்டன் முடிவு செய்தது.

இதன் விளைவாக 1980 இல் தெற்கு ரெகோத்சியா தேர்தல் நடைபெற்றது. விடுதலை அடைந்த தெற்கு ரெகோத்சியாவின் முதல் பிரதமராக ரொபர்ட் முகாபே தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் நாட்டின் பெயரையும் ஸிம்பாப்வே என்று மாற்றினார்.

இப்போது ரொபர்ட் முகாபேவுக்கு 93 வயதாகிறது. 1987 ஆம் ஆண்டில் இருந்து ஸிம்பாப்வேயின் அதிபராக முகபே இருந்துவருகிறார். ஸிம்பாப்பே இப்போது பெரும் பொருளாதார சிக்கலில் தவிக்கிறது. இந்தச் சூழலில், அந்நாட்டின் ராணுவம் முகாபேவுக்கு எதிராக புரட்சியில் ஈடுபட்டது. அவரை வீட்டுச் சிறையில் வைத்திருக்கிறது. முகபே சரிந்ததற்கு பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன.

**பொருளாதாரச் சரிவு**

முதல் காரணம் பொருளாதாரச் சரிவு. கடந்த பத்தாண்டுகளில் அடுத்தடுத்து ஸிம்பாப்வே பொருளாதார சரிவில் சிக்கியது. நாடு முழுவதும் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்திருக்கிறது. வேலை இல்லாதவர்கள் எண்ணிக்கை 90 சதவீதமாக இருக்கிறது என்று ஸிம்பாப்வே நாட்டின் தொழிற்சங்கங்கள் கூறுகின்றன. 2008 ஆம் ஆண்டில் இருந்தே ஸிம்பாப்வே அதீத பணவீக்கத்தில் சிக்கித்தவிக்கிறது. இதனால், ஒரு கட்டத்தில் நாட்டின் பண




மதிப்பை முகாபே முடக்கினார். எனவே, மக்களிடம் பணப்புழக்கம் இல்லாமல் போனது.

ஸிம்பாப்வே சொந்தமாக டொலர் வெளியிட்டது. இது பாண்ட் நோட் என்று அழைக்கப்பட்டது. ஆனால், அதன் மதிப்பும் நாளடைவில் சரிய ஆரம்பித்தது. வங்கிகளில் கட்டுக்கட்டாக சேமித்து வைத்திருந்தவர்கள் பணத்தை எடுக்க முடியாமல் திண்டாடினர். தங்கள் கணக்கில் உள்ள பணத்தை எடுப்பதற்கு ஸிம்பாப்வே மக்களுக்கு கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இதனால், ஸிம்பாப்வே தலைநகர் ஹராரே-வில் பிட்காயின் விலை அதிகரித்தது.

**ஸிம்பாப்வே போராட்டங்கள்**

ஸிம்பாப்வேக்கு இந்த நிலை ஏற்படுவதற்கு முகாபேயும் ஒரு காரணம் என்று சொல்கின்றனர். 93 வயதாகும் அவர், இன்னும் பதவியை விட்டு இறங்காமல் இருக்கிறார். அதிபர் முகாபேயின் ஆதரவாளர்கள் தங்கள் பதவியை தக்கவைத்துக்கொள்வதற்காக வன்முறையில் ஈடுபட்டுவந்தனர். ஒரு கட்டத்தில் தன்னையும், கட்சியையும் உயர்த்திக் கொள்வதற்காக ஆட்சி அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்துகிறார் என்ற குற்றச்சாட்டும் முகாபே மீது எழுந்தது. தம்முடைய புரட்சிகரமான திட்டங்கள் முடிவுக்கு வரும் வரை தாம் பதவி விலகப் போவதில்லை என்று அடிக்கடி வீர வசனங்களையும் பேசி வந்தார்.

**வலுவான எதிர்க்கட்சி இல்லை**

முதுமை காரணமாக முகாபேயால், திடமான நிலையில் ஆட்சி செய்ய முடியவில்லை. உடல்நலக் குறைபாடு ஏற்பட்டது. நாட்டின் இப்போதைய சிக்கலுக்கு அவரது உடல்நலமும் ஒரு காரணம். முகாபேயின் நீண்டகால ஆட்சிக்குக் காரணம், ஒரு வலுவான எதிர்க் கட்சி இல்லை என்றும் சொல்லலாம். அவர், எதிரிகளை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிந்துவிடுவார். 1999 ஆம் ஆண்டில் ஜனநாயக மாற்றத்துக்கான இயக்கம் என்ற எதிர்க்கட்சி ஒன்று உருவானது. நாட்டின் பொருளாதாரச் சரிவு உள்ளிட்ட பல்வேறு அம்சங்களைக் கையில் எடுத்து எதிர்க் கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஆனால், அவர்க ளால் முகாபேயை ஒன்றும் செய்ய முடியவில்லை. அதே போல தமது சொந்த கட்சியி லேயே தமக்கு எதிரானவர்களைப் பக்கத்தில் வைத்துக்கொள்ள

## வீட்டுச் சிறையில் இருக்கும் முகாபேயின் கதி என்னவாகும்?

மாட்டார். துணை அதிபர் எம்மர்சன் பதவியில் இருந்து தூக்கப்பட்டதற்கும் முகாபேதான் காரணம். எனவே, முகாபோக்கு மாற்றாக வலுவான ஒரு தலைவர் ஸிம்பாப்வேயில் இல்லை என்று சொல்லலாம்.

**வீட்டுச் சிறை**

இதனிடையே, கடந்த 15 ஆம் திகதி ஸிம்பாப்வே தலைநகர் ஹராரேயில் உள்ள அதிபரின் வீட்டுக்குள் நுழைந்த ராணுவம், முகாபேயை வீட்டுச் சிறையில் வைப்பதாக அறிவித்தது. எனினும், ராணுவம் வெளியிட்ட அறிக்கையில், அதிபர் முகாபே எங்களது இலக்கு அல்ல. அவரைச் சுற்றி இருக்கும் குற்றவாளிகளைக் களையெடுக்கவே இந்தப் புரட்சியில் ஈடுபட்டோம் என்று சொல்லி இருக்கிறது. எது, எப்படியாகினும், புரட்சி முடிவுக்கு வந்த பின்னர் முகபே ஆட்சியில் இருக்க மாட்டார் என்று சொல்கிறார்கள். ஒரு புரட்சியாளராக அடையாளம் காணப்பட்ட முகாபே, இப்போது ஒரு புரட்சியின் மூல மே அகற்றப்பட இருக்கிறார். ★

---

சமுதாயத்தின் காப்பாளனான

# ஆண் மகனுக்கு எதிராகப் புரியப்படும் கொடுமைகள்

இன்று (நவம்பர் 19) உலக ஆண்கள் தினமாகும். அதனையொட்டி இந்தச் சிறு ஆக்கம் வெளி வருகிறது.



சர்வதேச ஆண்கள் தினம் (IMD - International Men's Day) ஆண்டு தோறும் நவம்பர் 19 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. இது 1999 இல் மேற்கிந்தியத் தீவுகளில் உள்ள டிரினிடாட் டொபாகோ நாட்டில் தொடங்கப்பட்டது. ஐ.நாவால் அங்கீகரிக்கப்பட்ட தினமாகவும் இது விளங்குகிறது.

உலகில் ஆண்களைக் கௌரவப்படுத்தவும் ஆண்களின் உரிமை கள் மற்றும் பாதுகாப்புக் குறித்த விழிப்புணர்வுகருதியும் இதுகொண்டாடப்படுகிறது. மகத்தான தியாகங்கள் பல புரிந்து வரும் ஆண்குலத்தின் பெருமையை சமுதாயம் அங்கீகரிக்க இந்த நாள் ஒரு நினைவு படுத்தும் நாளாகவும் அமைகிறது.

பொதுவாக அனைத்து சிறப்பான நாள்களும் பெண்களை முன்னிறுத்தித்தான் செய்யப்பட்டு வருகிறது. ஆணுக்கும் பிரச்சினைகள் உள்ளன, அவனுக்கும் தீமைகள் இழைக்கப் படுகின்றன என்பதை நம் சமூகம் அங்கீகரிக்கவே இதுபோன்ற சர்வதேச ஆண்கள் தினம் கொண்டாடப்படும் சூழ்நிலை உருவானது.

**இந்த ஆண்கள் தினத்தை அனுசரிக்கும் நோக்கங்கள்:**

ஆண்கள் மற்றும் இளைஞர்களின் சுகாதார மேம்பாடு, ஆண், பெண் இருபாலாரும் சம உரிமையுடன் மனமொருமித்த செயல்பாடு போன்றவற்றை வேண்டுவது,

★ ஆணினத்தின் வழி காட்டுதலுக்கு நேர்மையும், மனத்திண்மையும் ஒருங்கே கொண்ட முன் மாதிரிகளை அடையாளம் காண்பது அனைத்துத் துறைகளிலும் கடினமான செயற்பாடுகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு, பல இடர்களுக்கு மத்தியில் முழுமையான அர்ப்பணிப்புடன் பணி புரிந்து வரும் ஆணினத்தின் சாதனைகளை அடையாளம் கண்டு அதற்கு நியாயமாகக் கிட்ட வேண்டிய அங்கீகாரத்தை சமுதாயத்திலிருந்து பெறுதல். (18 ஆம் பக்கம் பார்க்க...)






# கமுகு பயிர்ச்செய்கை

**பொதுப்பெயர்- கமுகு, பாக்கு**
**தாவரவியல் பெயர்-Areca Catechu**

### கமுகுச் செய்கையின் முக்கியத்துவம்

★ ஓர் ஏக்கர் நிலப்பரப்பில் ஒருவருடத்திற்கு பாக்குசெய்கை மூலம் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் (250000.00 ரூபா)வரைவருமானம் பெறலாம்.

★ தனிப்பயிராக கமுகுநடுவதாயின் ஒருஏக்கருக்கு 440 கன்றுகள் நடப்படும்.

★ ஒருமரத்திலிருந்துஒருவருடத்தில் 750 காய்கள் பெற்றுக்கொள்ளலாம்.

### பயன்பாடு

★ உடம்பிற்கு சூட்டுத்தன்மையுடைய உணர்வைத் தூண்டுகிறது.

★ உடன் பாக்காகவும் உலர் பாக்காகவும் பயன்படுத்தலாம்.

★ பச்சைப் பாக்கைவெட்டிஅதற்கு சுவையூட்டிவேறுபட்டஉற்பத்திகள் உருவாக்கப்படுகின்றன.

★ ஆயுர்வேத பாரம்பரிய மருந்துகள் தயாரிப்பில் பயன்படுகிறது.

★ பற்பசைகளின் உள்ளீடாக பயன்படுத்தப்படுகிறது.

★ விலங்கு மருத்துவத்துறையில் நாடாப்புழுக்கள் குடல் ஒட்டுண்ணிகளை அகற்றுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

★ இலைமடல் ஆனது தட்டுக்கள் பொதிசெய்வதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

★முதிர்ச்சி அடைந்த தண்டுகள் கட்டடப் பொருள்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

### இனங்கள்

★ உள்ளூர் இனம், தேசிய இனமாகும்

★ ஹம்பன் பாக்கு

★ வெளிநாட்டில் இருந்துகொண்டுவரப்பட்டு விரிவாக்கம் செய்யப்பட்ட நாட்டுப்பாக்கு.

### தேவையான சூழல் காரணிகள்

★ கடல் மட்டத்திலிருந்து 1000 மீற்றர் வரையானபிரதேசம்.

★ வருடாந்த மழைவீழ்ச்சி 1750 மி.மீ. பரவலானமழைவீழ்ச்சி.

★ வெப்பநிலை15 - 32$^0$C வரை

★ நன்கு நீர்வடியும் இருவாட்டிமண்; சிறந்தது.

★ மண் ஈரலிப்பு தொடர்ச்சியாக இருத்தல் வேண்டும்.



★ நாட்டியதிலிருந்து; 2-3 வருடங்கள் வரை 40% நிழல் அவசியம்.

★ வயதுடைய மரங்கள் மிதமான நிழல் சூழலில் கூடுதல் விளைவை தரும்.

★ உயர் நிழல் உள்ள இடங்கள் சரிவானநிலங்கள் பொருத்தமானவை.

### நடுகைக்கான கன்றுகளை தெரிவுசெய்தல்

★ நடுகைக்கான கன்று குறைந்தது 4 இலைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்

★ இலைப்பரப்பு அகலமாக பரம்பி; இருத்தல் வேண்டும்.

★ தடிப்பான தண்டு உடைய குட்டையான கன்றுகள் நடுகைக்கு உகந்தவை. மெல்லிய உயரிய கன்றுகள் நடுகைக்கு பொருத்தமற்றவை

### நடுகைமுறை

★ சிறுபோக பெரும்போக மழை ஆரம்பத்துடன் நடுகை செய்தல் சிறப்பானது.

★ நடுகைக்கான குழி 1.5'81.5'81.5' நீள அகல ஆழ முடையதாக அமைத்தல் வேண்டும்.

★ சேதனப் பசளை மற்றும் மேல் மண் கலவையால் குழி நிரப்பப்பட வேண்டும்.

★ நடுகை இடைவெளி 10அடிX10 அடி

★ நடுகைக் குழியில் கன்றுகள் ஆழத்தில் நடுதல் சிறந்தது. இதன் மூலம் மரம் சரிந்து விழுவதை தடுப்பதுடன் கூடிய விளைச்சலையும் பெறலாம்.

★ கன்றுகள் நாட்டிய பின்னர் தென்னை ஓலை அல்லது காய்ந்த வாழைச்சருகு மூலம் தற்காலிகமாக நிழல் வழங்க வேண்டும்.

★ நேரடியாக சூரியஒளிபடும் இடத்தில் இலைகள் கருகிவளர்ச்சிகுன்றும்.

★ நடுகைசெய்து இரண்டு வருடங்களில் 4 இற்குமேற்பட்டமுடிச்சுக்கள் இருத்தல் வேண்டும்.

★ 5 வருடங்களின் பின்னர் முதல் அறுவடையை பெற்றுக்கொள்ளலாம்.

★ நலிவடைந்தகன்றுகள் அகற்றப்படவேண்டும்.

★ 40-50 வருடங்கள் வரைவாழ்க்கைக்காலம் உடையதுஆகையால் கூடிய விளைச்சலைப் பெற்றுக் கொள்ள சிறந்த வர்க்க கன்றுகளை நடுகை செய்தல் வேண்டும்.



★இப்பயிர்ச்செய்கையில் பராமரிப்பு மிக இலகுவானதாக இருக்கும்.

### பசளை இடல்

★ கூட்டெரு, பண்ணைப் பசளை ஒரு கன்றுக்கு 12கிலோ நடுகையிலிருந்து முதல் வருடம் வரை இடுதல் வேண்டும்.

### இரசாயனப் பசளை.கிராம்/ கன்று/வருடம்

| பசளை | தேவையானளவு |
|---|---|
| யூரியா | 100 |
| ரி.எஸ்.பி. | 40 |
| பொட்டாஸ் | 140 |

★ கன்றுநாட்டிமுதல் வருடத்தில்பசளைத் தேவையின் முழு அளவில் 1/3 பங்கும் இரண்டாம் வருடத்தில் 2/3பங்கும் மூன்றாம் வருடம் தொடக்கம் முழு அளவுதேவைக்கானபசளையும் இடப்படவேண்டும்.

> மரங்களின் மீது கரிசனை கொண்ட கடவுள் அவற்றை வறட்சி, நோய்கள், பனிச்சரிவுகள், ஆயிரமாயிரம் சூறாவளிகள் மற்றும் கடும் வெள்ளப் பெருக்குகளில் இருந்து காப்பாற்றினாலும் முட்டாள்களிடம் இருந்து மட்டும் அவரால் அவற்றைக் காப்பாற்ற முடியவில்லை

### அறுவடை

★ 6-7 வருடங்களின் பின் முதலாம் அறுவடையை பெற்றுக்கொள்ளலாம்

★ 10- 15 வருடங்களில் அதிகூடிய விளைச்சல

★ 40 வருடங்களின் பின் உற்பத்தி குறைவடைந்து செல்லும்.

★ நாட்டு இனம் ஜூலை முதல் செப்ரெம்பர் வரையும் ஊர்ப் பாக்கு ஒக்ரோபர் தொடக்கம் ஏப்ரல் காலப் பகுதியில் விளைச்சலைத் தரும்.

★ தேசிய இனத்தில் வருடத்திற்கு 3- 5 குலைகளைபெற்றுக் கொள்ள முடியும்.

★ ஒருகுலையில் 250 -400 காய்கள் வீதம் பெற்றுக்கொள்ளலாம்.

### பாக்குநீண்டநாட்கள் சேமிக்கும் முறைகள்.

1. சேற்றுப் பாக்கு- நீரில் அமிழத்தி வளிஅற்றநிலைக்குஉட்படுத்தல்

2. கொட்டப் பாக்கு-வெயிலில் உலர்த்தல் மூலம்.

3. சீவல் பாக்கு- முற்றாத பாக்கு சீவலாகவெட்டிவெயிலில் உலர்த்தல்.

**க.பிரதீபன்,**
பண்ணைமுகாமையாளர்,
மாவட்டவிவசாயப் பயிற்சிநிலையம்,
கிளிநொச்சி.



# எப்பவும் சாப்பிடுவது எந்த நோயின் அறிகுறி?

உணவு என்பது அத்தியாவசியம் என்ற இடத்தைக் கடந்து ஆடம்பரம் என்ற இடத்தை நோக்கி நகர்ந்து விட்டது. இன்றைய துரித உணவு உலகத்தில் புதுப்புது நோய்கள் வந்து கொண்டிருக்கின்றன. அப்படி வந்திருக்கும் ஒரு நோய் தான் மிதமிஞ்சிய உணவுகளை உண்பது.

இதற்குப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. அவற்றில் சில, உடல் ரீதியாகவென்றால், நம் ஓமோன்களில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால் அல்லது சிலருக்கு சாதாரணமாகவே இந்தப் பாதிப்பு ஏற்படும். மனரீதியாக என்றால், முக்கிய காரணம் மன அழுத்தம். உணர்வுகளைக் கையாளத் தெரியாததும், அதீத கோபமும் காரணம். இவற்றைத் தாண்டி இந்தப் பிரச்சினைக்கு சமூக ரீதியிலான காரணங்களும் உள்ளன.

வயிறு முட்டச் சாப்பிட்ட பின்பும் இன்னும் இன்னும் சாப்பிடத்தூண்டும். எவ்வளவு சாப்பிடுகிறோம் எப்போது நிறுத்த வேண்டும் என்று தன்னாலேயே நிறுத்த முடியாமல் போகும். நேரங்கெட்ட நேரத்தில் உணவுகளைத் தேடுவது, சாப்பிட்டால் ரிலாக்ஸாக இருக்கும், சாப்பிட்டால் நல்ல தூக்கம் வரும் போன்ற அறிகுறிகள் தெரிந்தால் உடனடியாக சிகிச்சையளிக்க வேண்டும். இந் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிக உடல் எடை கொண்டவராக இருக்க மாட்டார்கள்.

சாதாரணமாக சாப்பிடுபவர்களுக்கே நோய்கள் வரும் போது, இப்படி அதீதமாகச் சாப்பிடுவது பெரும் ஆபத்துக்களை ஏற்படுத்தும், நீரிழிவு நோய், இதயக்கோளாறு, ஒபீசிட்டி என இதனால் ஏற்படும் பிரச்சினைகள் ஏராளம்.

பெரும்பாலும் அவர்களின் மனக் குறையை யாரிடமும் சொல்ல முடியாத போது அல்லது தீர்க்க முடியாத போது தான் இப்பிரச்சினை ஏற்படுகிறது என்பதால் சைக்கோதெரபி கொடுக்கலாம் என்பது இந்நோய்க்கான சிகிச்சை முறைகளில் ஒன்று.

# விவாகரத்தான பெண்களுக்கான ஆலோசனை

விவாகரத்தால் ஆண்களை விட பெண்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர் என சமுதாயம் கூறினால் பாதிப்பு என்னவோ இருவருக்கும் தான். ஆனால், ஆண்களும், இந்த சமுதாயமும் விவாகரத்தான ஆண்களை விட்டு விடும். எல்லாவற்றிற்கும் பெண் கள் தான் காரணம் என்பது போல் பேசி அவர்களை மனம் உடையச் செய்து விடுவார்கள்.

பெண்கள் இதைப் பற்றி எல்லாம் கவலை கொள்ளாமல் தங்களுடை எதிர்காலத்தில் மட்டும் மனதில் நினைத்து முன்னேற வேண்டும்.

விவாகரத்தான பெண்கள் முதலில் குடும்ப உறவுகளை மேம்படுத்தவேண்டும். குடும்ப உறவுகள் மேம்பாடு அடையும்போது ஓரளவு மகிழ்ச்சி நிரந்தரமாகும். அதன் பின்பு அவர்கள் சமூக உறவை மேம்படுத்த வேண்டும்.

சமூக உறவை நீங்கள்தான் வளர்க்கவேண்டும். அதற்கு ஆரோக்கியமான சிந்தனையும், மகிழ்ச்சியும், புன்னகையும், தைரியமும் அவசியம்.

உங்களுடைய பழைய சோகக் கதைகளை கேட்க யாருமே விரும்ப மாட்டார்கள். உங்களைச் சுற்றியிருக்கும் சமூகத்துக்கு உங்களால் முடிந்த நன்மைகளை செய்து அவர்களை அனுசரித்து நடந்தால் அது ஒரு நல்ல சூழலை உங்களுக்கு ஏற்படுத்தித் தரும். அதன் மூலம் உங்கள் மனதில் இருக்கும் வெறுமை அகலும்.

விவாகரத்தான பெண்கள் அடுத்தவர்களைக் குறைசொல்வதைத் தவிர்க்கவேண்டும். ஏனென்றால் முதலில் கணவரை குறைகூறிதான் விவாகரத்து பெற்றிருப்பார்கள். அப்படிப்பட்ட பெண்கள் குடும்பத்தினர் மீதும், சமூகத்தின் மீதும் குறை சொல்லும்போது அது சரியாகவே இருந்தாலும் இந்த பெண்ணுக்கு வேறு வேலையே இல்லை. யாரையாவது குறை சொல்லிக்கொண்டே இருப்பதுதான் இவள் வேலை என்று காதுபடவே குற்றஞ்சாட்டுவார்கள். அதனால் அடுத்தவர்களை குறைசொல்லாமல் அனுசரித்து வாழ, விவாகரத்தான பெண்கள் முன்வரவேண்டும்.





# கர்ப்ப கால உடற்பயிற்சியில் கவனிக்க வேண்டியவை

கர்ப்பிணிப் பெண்கள் தகுதி வாய்ந்த பயிற்சியாளர் ஒருவர் உதவியுடன் சுகப்பிரசவத்துக்கு உதவும் யோகப் பயிற்சிகளை முறையாக மேற்கொள்ளலாம்.

கர்ப்பிணியின் அடிவயிற்றுத் தசைகளையும் தசை நார்களையும் தளர்த்துவதில் யோகாசனப் பயிற்சிகளுக்கு முக்கிய இடமுண்டு. தகுதி வாய்ந்த பயிற்சியாளர் ஒருவர் உதவியுடன் சுகப்பிரசவத்துக்கு உதவும் யோகாப் பயிற்சிகளை முறையாக மேற்கொள்ளலாம்.

பிராணாயாமம் உடலின் அனைத்துத் திசுக்களுக்கும் ஒட்சிசனை வழங்கக்கூடியது. கருப்பைத் தசைகளுக்கு ஒட்சிசன் குறையாமலிருக்க இது அதிகம் உதவும்.

வழக்கத்தில் நடைப்பயிற்சி, யோகப்பயிற்சி, பிற தசை வலுவூட்டல் பயிற்சிகள், தசை நெகிழ்வூட்ட பயிற்சிகள் அனைத்தும் ஒருங்கிணைந்த ஓர் உடற்பயிற்சித் திட்டத்தை மகப்பேறு மருத்துவர், உடற்பயிற்சியாளர், யோகப் பயிற்சியாளர் ஆகியோருடன் கலந்து ஆலோசித்து மேற்கொள்வது சரியாகவும் முறையாகவும் இருக்கும். கர்ப்பிணிக்கும் குழந்தைக்கும் எவ்வித ஆபத்தும் வராமல் பாதுகாக்கும். அயல்நாடுகளில் கர்ப்பிணிகளுக்கு நீச்சல் பயிற்சிகளையும் கற்றுத்தருகின்றனர்.

தவிர்க்க வேண்டிய பயிற்சிகள் குதித்து ஓடும் பயிற்சிகள், துள்ளும் படியான உடற்பயிற்சிகள், கால் மூட்டுகளைப் பாதிக்கும் பயிற்சிகள் ஆகியவற்றைக் கட்டாயம் தவிர்க்க வேண்டும். அதிகமாக வியர்த்துக்கொட்டும் பயிற்சிகளும் ஆகா. தீவிரமான தரை விளையாட்டுகளிலும் ஆழ்கடல் விளையாட்டுகளிலும் ஈடுபடக்கூடாது.

கர்ப்ப காலத்தில் உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்கள், பிறப்புறுப்பில் ரத்தக் கசிவு உள்ளவர்கள், பனிக்குட நீர்க்கசிவு உள்ளவர்கள், பிரசவ நாளுக்கு முன்பே கருப்பை சுருங்கிவிடும் கர்ப்பிணிகள், மருத்துவரின் ஆலோசனை பெற்றே உடற்பயிற்சிகள் செய்ய வேண்டும்.

# தாடி வைத்த ஆண்களை விரும்பும் பெண்கள்



இன்றைய பெண்கள் தாடி வைத்திருக்கும் ஆண்களை மிகவும் விரும்புகிறார்கள். இதற்கான காரணத்தை என்ன என்பதை அறிந்து கொள்ளலாம்.

இன்றைய பெண்களுக்கு மெல்லிய தாடி, மீசை வைத்திருக்கும் ஆண்களை மிகவும் விரும்புவார்கள். தாடி வைத்திருக்கும் ஆண்கள் கவர்ச்சியாக இருக்கின்றனர் என்பது பெண்களின் கருத்தாக உள்ளது.

மேலும் சாதாரணமாக ஆண்கள் தாடி மீசை வைத்தால் மிகவும் வீரமாகவும், கம்பீரமாகவும் தோற்றமளிப்பார்கள். இது பெண்களுக்கு மிகவும் பிடிக்கிறது.

பெண்களுக்கு எப்படி நீண்ட கூந்தலும், ரெட்டை ஜடையும் அழகு என ஆண்கள் கருதுகிறார்களோ, அதே போல தான் ஆண்களுக்கு தாடியும் முறுக்கு மீசையும் அழகு என்று பெண்கள் கருதுகிறார்கள்.

நூறு ஆண்கள் இருக்கும் இடத்தில் தாடி வைத்திருக்கும் ஆண் மட்டும் தனித்துவமாக இருப்பார். மற்றும் மற்றவர்களது முகங்களைவிட இவர்களது முகம் எளிதாக மனதில் பதிந்துவிடும். இதுவும் ஒரு காரணமாக இருக்கிறது.

நிறைய ஆண்கள் தாடி இல்லாத போது குழந்தை போல தோற்றமளிப்பார்கள், இதுவே அவர்கள் தாடி வைத்தவுடன் மிகவும் முதிர்ச்சியுடன் தோற்றமளிப்பார்கள். இந்த முதிர்ச்சியான தோற்றம் தான் பெண்களை கவர்ந்திழுக்கிறது.

தாடி மீசை என்பது மனதில் ஒரு விதமான உயர்ந்த எண்ணத்தை உருவாக்கும். இளைஞர்கள் மத்தியில் கெத்து என்பது போலவும், பெரியவர்கள் மத்தியில் மரியாதை என்பது போன்ற எண்ணத்தை தாடி, மீசை உருவாக்குகிறது.

பெண்களுக்கு எப்படி நீளமான கூந்தலை பராமரிப்பது எளிதான காரியம் இல்லையோ, அது போல தான் ஆண்களுக்கு தாடி, மீசை வைப்பதும். அவ்வப்போது அரிக்கும், அதை ஸ்டைல் என்ற பெயரில் நீவிவிடுவது போல யாருக்கும் தெரியாமல் சொறிந்து கொள்ள வேண்டும்.

## திருத்தந்தை முதலாம் ஜோன் போல் வணங்கத்தக்கவர்

இறையடியாரான திருத்தந்தை முதலாம் ஜோன் போல் அவர்களை புனிதரென அறிவிக்கும் முயற்சியின் அடுத்த நிலையாக அவரை - வணங்கத்தக்கவர் - என்ற நிலைக்கு உயர்த்த திருத்தந்தை பிரான்ஸிஸ் ஒப்புதல் அளித்துள்ளார். 1978ஆம் ஆண்டு முதலாம் ஜோண் போல் என்ற பெயருடன் திருத்தந்தையாகப் பொறுப்பேற்று 33 நாள்களுக்குப்பின் செப்ரெம்பர் 28ஆம் திகதி இறையடி சேர்ந்தார்.

காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## பேர்லின் சுவர் வீழ்ச்சி - திருத்தந்தை

இவ்வுலகை பிரிக்கும் சுவர்களைத் தகர்ப்பதற்கு சந்திக்கும் கலாசாரம் வளர்க்கப்படட்டும். என்ற சொற்கள் திருத்தந்தையின் டுவிட்டர் செய்தியாக நவம்பர் 9 அன்று வெளியாயின. ஜெர்மன் நாட்டை கிழக்கு ஜெர்மன் மேற்கு ஜெர்மன் என்று பிரிந்திருந்த பெர்லின் சுவர் 1989ஆம் ஆண்டு வீழ்ந்ததை நினைவு கூரும் இந்நாளில் திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி இந்நிகழ்வையொட்டியதாய் அமைந்திருந்தது.

# கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலய 42ஆவது ஆண்டு சிறப்புக் கொண்டாட்டம்

## இளையோரின் மலர் வெளியீட்டுடன்





யாழ். கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலய இளையோர்; தற்போதைய ஆலயம் கட்டப்பட்ட 42 ஆவது ஆண்டு நிறைவை சிறப்பு மலர் வெளியீட்டுடன் கொண்டாடுகின்றனர். இதுதொடர்பாகக் கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலய பங்குத்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளாரிடம் கேட்ட போது, கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலய பங்கிலே இளையோர் மிகக் குறைந்த அளவிலேயே உள்ளனர். இருப்பினும் அவர்கள் மிகுந்த உறுதியுடனும் உற்சாகத்துடனும் செயலாற்றுகின்றமை மகிழ்ச்சி தருகிறது. அவர்கள் தற்போதைய ஆலயம் கட்டப்பட்ட 42 ஆவது ஆண்டு நிறைவை சிறப்பு மலர் வெளியிட்டுடன் கொண்டாடுகின்றமை கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். அவர்களையும் கிறிஸ்து அரசர் ஆலய பங்கு மக்கள் அனைவரையும் அன்போடு இந்த வேளையில் வாழ்த்தி நிற்கிறேன்.

இவ் ஆலய கட்டடப் பணிகளில் அன்று முன்னின்று உழைத்த லூயிஸ் பொன்னையா அ.ம.தி அடிகளாரையும் இன்னும் சிறப்பாக அவருக்குத் துணையாக இருந்து கிறிஸ்து அரசர் ஆலய கட்டடப் பணிகளை முன்னின்று வெற்றிகரமாக நடத்தி முடித்த மறைந்த ஆபரணம் சிங்கராயர் அ.ம.தி அடிகளாரையும் நன்றியோடு நினைவு கூருகிறேன். சிங்கராயர் அடிகளார் இறைவனின் இன்ப சந்நிதானத்தில் அமைதியில் இளைப்பாற வேண்டி நிற்கிறேன்.

இறையாட்சியின் மதிப்பீடுகளுக்கு இணங்க கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலய பங்கு மக்கள் வாழ வேண்டும் என விரும்புகிறேன். பங்கு ஆலயத்தில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டி உள்ளன. இந்தத் திருத்த வேலைகளுக்கு நன்மனதுள்ள கிறிஸ்து அரசர் ஆலயத்தில் வாழ்கின்ற பங்கு மக்களும் புலம்பெயர்ந்து வாழும் பங்கு மக்களும் அன்புதவி செய்ய வேண்டும் எனப் பகிரங்க அழைப்பு விடுகிறேன்.

ஆலய வளாகத்தில் வெள்ளம் நிறைந்திருப்பது பெரும் பிரச்சினையாக உள்ளது. அது தாழ்ந்த பிரதேசமாக இருப்பதால் அதற்குரிய விதமாக வடிகால் அமைத்து நீர் வழிந்தோடக்கூடிய வழி செய்ய வேண்டும் என அரச அதிபருக்கும் பிரதேச செயலருக்கும் மாநகராட்சிக்கும் விண்ணப்பம் செய்திருக்கிறேன். விரைவில் ஆவன செய்வார்கள் என நம்பியிருக்கிறேன்.

கிறிஸ்து அரசர் இங்கு வாழ்கின்ற பங்கு மக்களையும் புலம்பெயர்ந்து உலகின் பல பாகங்களிலும் வாழுகின்ற பங்கு மக்களையும் நிறைவாக ஆசீர்வதிக்க இறைவரம் வேண்டி நிற்கிறேன். - என்றார்.

## உண்மையின் எண்ணங்கள்

**கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலய இளையோர்**

கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலய இளையோர் பங்குத் தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளாரின் வழிகாட்டலுடன் தற்போதைய ஆலயம் கட்டப்பட்ட 42 ஆவது ஆண்டு நிறைவை சிறப்பு மலர் வெளியீட்டுடன் கொண்டாடுகின்றனர் என்ற செய்தி சிறப்பு முக்கியத்துவத்துடன் நோக்கப்பட வேண்டிய செய்தியாகும். கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலய பங்குத்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார் பங்கிலே இளையோர் மிக குறைந்த அளவிலே இருப்பினும் அவர்கள் மிகுந்த உறுதியுடனும் உற்சாகத்துடனும் செயலாற்றுகின்றன பற்றி மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார். உண்மையில் கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலய இளையோர்; பாராட்டப்பட வேண்டியவர்கள். இன்று இளைஞர்கள் அவர்களின் செயற்பாடுகள் பற்றி பல விமர்சனங்கள் எழுப்பப்படும் நிலையில் கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலய இளையோர் ஆக்கபூர்வமாக செயற்படுகிறார்கள். மேல்வரிச்சட்டமாக செயற்படுகிறார்கள். இவர்கள் தட்டிகொடுக்கப்பட வேண்டியவர்கள். இன்னும் சிறப்பாக செயற்பட வழிகாட்டப்பட வேண்டியவர்கள். பங்குத்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளாரின் வாழ்த்துடன் காலைக்கதிர் கிறிஸ்தவ இதழும் கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலய இளையோரை வாழ்க வளமுடன் - தொடருங்கள் தங்கள் சிறந்த பணியை என வாழ்த்தி நிற்கிறது.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் உலகத் தொடர்பு தினம்




மட்டக்களப்பு மறைமாவட்ட சமூகத் தொடர்பு நிலையத்தில் 51ஆவது உலகத் தொடர்புதின விழா அண்மையில் அஞ்சாதே ஏனெனில் நான் உன்னோடு இருக்கிறேன். நாம் வாழும் காலத்தில் எதிர்நோக்கையும் நம்பிக்கையையும் எடுத்துக்கூறுதல் என்னும் தலைப்பில் சமூகத்தொடர்பு நிலைய இயக்குநர் ரமேஸ் கிறிஸ்ரி அடிகளார் தலைமையில் நடைபெற்றது. மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் மேதகு ஜோசப் பொன்னையா ஆண்டகை ஊடகத்தால் சமூக உறவுகளை வளர்க்கவும் முடியும் பிரிக்கவும் முடியும். ஊடகமானது உண்மையையே பேசவேண்டும். ஆனால், இன்று செய்திகள் திரிக்கப்படுகின்றன. அது நாட்டை அழிக்கும் சக்தியாக மாறக்கூடாது. - என்றார்.

## வறியோரை வார்த்தைகளாலன்றி செயலால் அன்பு செய்வோம் - திருத்தந்தை



இன்று (நவம்பர் 19ஆம் திகதி) நினைவு கூரப்படும் உலக வறியோர் தினத்தை முன்னிட்டு திருத்தந்தை பிரான்ஸிஸ் அவர்கள் வெளியிட்டுள்ள செய்தியில் வறியோரை வார்த்தைகளாலன்றி செயல்களால் அன்பு செய்வோம். திருச்சபையின் பணி என்றும் ஏழைகளுக்கே உரியது. இன்று திருச்சபையில் பலர் வறியோர் மட்டில் பாராமுகமாக வாழுகின்ற சாட்சியமற்ற வாழ்வுமுறை மாற வேண்டும். வறியோர் மட்டில் நாம் காட்டும் அன்பு செயல்வடிவம் கொண்ட அன்பாக இருக்கவேண்டும் என்றும் தெரிவித்தார்.

## யாராவது இறப்பாராயின் அவருடைய ஆன்ம இளைப்பாற்றுக்காக செபிப்போம்



புனித யோசவ் வாஸ் அடிகளார் யாராவது இறந்ததாக செய்தி அறிந்தால் உடனடியாக எல்லா வேலைகளையும் நிறுத்தி அவருடைய ஆன்ம இளைப்பாற்றுக்காக செபிப்பார். புனித யோசவ் வாஸ் அடிகளாரின் இந்த ஆண்டிலே இறந்த விசுவாசிகள் மட்டில் புனித யோசவ் வாஸ் அடிகளார் கடைப்பிடித்து வந்த இந்த நல்ல பழக்கத்தை நம்முடையதாக்குவோம் என யாழ் புனித மரியன்னை பேராலய சேமக்காலையில் கார்த்திகை மாதம் 2ஆம் திகதி திருப்பலியில் குரு முதல்வர் கலாநிதி பி.ஜே.ஜெபரட்ணம் அடிகளார் கேட்டுக்கொண்டார். யாராவது இறந்ததாக செய்தி அறியும் போதும் ஆலயங்களில் அடிக்கப்படும் துக்கமணி கேட்கிறபோதும் இறந்தவர் யாராக இருந்தாலும் உடனடியாக எமது அலுவல்கள் அனைத்தையும் ஒருகணம் நிறுத்தி இறந்தவருடைய ஆன்ம இளைப்பாற்றுக்காக செபிக்கும் பழக்கத்தைப் எமது புனித யோசவ் வாஸ் அடிகளாரிடமிருந்து கற்றுக்கொள்வோம். - என்றார்.



# மேலைநாட்டு நடைமுறைகளை அப்படியே புகுத்த முடியாது!

## ஊர்வம்பு

குருவியார்
thamizhkaalaikathir@gmail.com

சந்தியடியில் வம்பளக்க ஏரம்பர், வாத்தியார், ரூபன், ஜீவன், பேப்பர்தம்பி ஆகியோர் கூடியிருந்தனர். செல்லாச்சியும் கச்சான் விற்பனையைக் கவனித்துக் கொண்டே, ஊர்வம்புக்கும் காதைக் கொடுத்தாள்.

கையிலிருந்த மின்னஞ்சல் பிரதிகளைப் பார்த்தபடியே வாத்தியார், ''நாங்கள் ஊர்வம்பளக்க ஆரம்பித்து இந்த வாரத்துடன் ஐம்பத்தியொராவது வாரமாகிவிட்டது.காலைக்கதிர் வாசகர்கள் சிலர் ஐம்பது வார நிறைவுக்கு மின்னஞ்சலில் வாழ்த்து அனுப்பியிருக்கினம். அவைதான் இந்தக் கடிதங்கள். இதில் ஆச்சரியமென்னவென்றால், ஊர்வம்பில் எத்தனையாவது வாரம் என்று குறிப்பிடாதபோதும், வாசகர்கள் தாங்களாகவே கணக்கிட்டு வாழ்த்து அனுப்பியிருக்கினம். அவர்களுக்கு எங்களது நன்றிகளைத் தெரிவிக்கிறோம். இத்தனை வாரங்களில் நாங்கள் கதைச்ச விசயங்களில் சம்பந்தப்பட்ட பலரும் காலைக்கதிர் ஆசிரியருடன் கதைச்சிருக்கினம். அவர்கள் எவரும் சொன்ன விசயங்கள் தவறு என்று சொல்லவில்லை.மற்றபடி தங்களுக்குப் பிடிக்காதவையைப் பற்றி விமர்சிக்கும்போது 'அந்தமாதிரி இருக்கு. இப்படி கதைக்கவும் ஆக்கள் வேணும்தானே' என்று பாராட்டுவதும், அதுவே கதைக்கிறது தங்களுக்குச் சுட்டால் 'இதெல்லாம் ஊடகதர்மமில்லை' என்று கொதிப்பதும் காலம் காலமாக யாழ்ப்பாணத்தில் எல்லோரும் பார்த்துக் கழிச்ச விசயம்தானே'என்றார்.

இதைக் கேட்ட பேப்பர்தம்பி, ''பத்திரிகை ஒன்றில் வரும் விடயம் ஒருவருக்குப் பாதிப்பை ஏற்படுத்தினாலோ அல்லது உண்மைக்குப் புறம்பானது என்று கருதினாலோ அதனைப் பத்திரிகை ஆசிரியருக்குச் சரியான முறையில் தெரிவித்து அதற்கான நிவாரணம் தேடும் உரிமை எல்லோருக்கும் உள்ளது..'' என்றான்.

''எல்லோருக்கும் அவையவை செய்யிறது நியாயம் மாதிரித்தானே இருக்கும். நாங்கள் கதைக்கிறது நடுநிலையாக இல்லாமல், பக்கச்சார்பாக இருக்கு என்று சிலபேர் நினைக்கலாம் தானே?'' என்றார் ஏரம்பர்.

இதைக் கேட்டுச் சிரித்த பேப்பர் தம்பி, ''நடுநிலைமை என்ற சொல் இங்கு சரியாக அர்த்தப்படுத்தப்படுவதில்லை என்றுதான் நினைக்கிறேன். அவையவை தங்கள் வசதிக்கு ஏற்ற மாதிரி அதனை வளைக்கிறார்கள்.'' என்று சொன்னான்.

அப்போது இடைமறித்த ஏரம்பர், ''அப்ப நடுநிலைமை என்ற ஒன்று ஊடகத்துறையிலை தேவையில்லை என்று நினைக்கிறீங்களோ?'' என்று காட்டமாகக் கேட்டார்.

அதற்குப் பதிலளித்த பேப்பர்தம்பி, ''எது நடுநிலைமை? இப்ப தீமை ஒருபுறம்; நன்மை மறு புறம் இருக்கும் போது இரண்டுக்கும் நடுவிலை நிற்பதுதான் நடுநிலைமையா?'' என்று கேட்டு விட்டு, மற்றவர்களின் முகங்களைப் பார்த்தான்.

யாரும் பதில் சொல்லவில்லை.

அதனால் தொடர்ந்து கதைத்த பேப்பர்தம்பி, ''நன்மை, தீமை என்று வரும் போது நடுவிலை நிற்க முடியாது. தீமை இருக்கிற பக்கத்தை விட்டு நன்மையின் பக்கம் பக்கச்சார்பாகத் தான் இருக்க முடியும்.அதனால் நியாயத்தைச்சொல்வதுதான் நடுநிலைமை என்பதாக நான் நினைக்கிறேன். சந்தியடியில் வம்பளக்கும்போது நியாயம் என்று நாம் நினைப்பதை மட்டுமே இங்கு கதைக்கிறோம்.அதனால்தான் தனிமனித துதியும் கிடையாது.இகழ்வும் நடக்காது'' என்று உறுதியாகச் சொன்னான்.

இதற்கு ஏரம்பர், ''நீர் சொல்லுறது சரிதான் தம்பி.என்றாலும் நாங்கள் நினைக்கிறதுதான் நியாயம் என்று எப்படிச் சொல்லுறது என்றும் கேள்வி எழலாம் அல்லவா?'' என்று குழப்பத்துடன் கேட்டார்.

இதற்குப் பதிலளிக்க முன்வந்த வாத்தியார், ''ஒரு விசயத்தைப் பற்றி நாங்கள் யோசித்து ஒரு முடிவுக்கு வருகிறோம் என்றால், எங்களுக்கு அதுதான் சரியான முடிவு. அது தவறானது என்றால் நாங்கள் அந்த முடிவுக்கு வந்தே இருக்க மாட்டமே. எங்களுக்கு அதுதான் சரியானதாக இருக்கும். இன்னொருவருக்கு அது விருப்பமில்லாமல் இருக்கலாம்.அதற்காக அந்த முடிவு பிழையாகி விடாது. அதேநேரம் இன்னொருவருக்கு விருப்பமாக இருப்பதாலேயே அது சரியாகி விடவும் முடியாது. அதனால் எங்களுக்குச் சரியென்ற கருத்தை நாங்கள் சொல்கிறோம். தொடர்ந்து எங்களுக்குக் காது கொடுப்பவர்களுக்கு நாங்கள் சொல்வதன் மீது நம்பிக்கை ஏற்படுகிறது. அதனால் நம்மை நம்பத் தொடங்குகிறாங்கள். 'தமது சுய இலாபங்களுக்காகப் பொய் சொல்ல மாட்டார்கள்' என்று நம்பிக்கை கொள்கிறார்கள்.இந்த நம்பகத்தன்மையை ஏற்படுத்தித் தக்க வைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத்தான் இந்த வாழ்த்துக்கள் காட்டுகின்றன'' என்று சொல்லி விட்டுக் கையிலிருந்த கடிதங்களை மடித்து வைத்தார்.

''நீங்கள் எல்லோரும் இப்படிக் கதைத்தாலும், எனக்கு இதிலை ஒரு சந்தேகம் இருக்கு'' என்று முனகினார் ஏரம்பர்.

''அதுதானே பார்த்தனான், என்னடா இன்னும் இந்தாளுக்குச் சந்தேகம் வரவில்லை என்று'' எனச் சிரித்தபடி சொன்னாள் செல்லாச்சி.

''என்ன சந்தேகம்?''என்று கேட்டான் பேப்பர்தம்பி.

சந்தேகத்தைச் சொன்னார் ஏரம்பர்.

''நாங்கள் சந்தியடியில் இருந்து ஊர்வம்பு கதைப்பதைப் பத்திரிகையில் பிரசுரிப்பது சரியோ என்று கேள்வி எழுப்புகினம். இது வெறும் வம்பளக்கிறதும் அரட்டை அடிக்கிறதும் மாத்திரம் தானே இருக்கு என்று சொல்லுகினம். அதிலையும் நியாயம் இருக்கிற மாதிரித்தானே இருக்கு?'' என்றார் ஏரம்பர்.

இதற்குப் பேப்பர்தம்பி, ''இதெல்லாம் முதலிலேயே சொன்ன மாதிரி அவையவையின்ரை பார்வையைப் பொறுத்தது. முன்னர் கடையிலை பாண் வாங்கப் போனால் அப்படியே தூக்கித் தருவான். ஏனென்றால் சில வெதுப்பகங்கள் தான் இருந்தன. பாண் வாங்குவோர் அதிகமாக இருந்தார்கள். பிறகு வெதுப்பகங்கள் அதிகமாகத் தமது பாணை மக்களிடம் கொண்டுபோய்ச் சேர்க்க அழகான உறைகளில் போட்டு வித்திச்சினம். பிறகு வெட்டி வித்திச்சினம். இப்ப வாகனத்திலை கொண்டு போய் வாசலிலை கொடுக்கினம். அது போலத்தான் காலமாற்றத்தில் வாசிப்புப் பழக்கம் குறைவடைவதாகச் சொல்லப்படும் வேளையில், வாசகரை ஈர்த்து வாசிக்க வைப்பதற்காகப் பல வடிவங்களில் உள்ளடக்கங்களை ஊடகங்கள் கொண்டிருப்பது நியாயமானதுதான். இது ஒன்றும் தமிழ் ஊடகங்களில் மட்டுமில்லையே உலகளவில் பின்பற்றப்படும் ஒரு வழக்கம்தானே. இந்த வடிவத்தைக் குறை சொல்பவர்களுக்கு வடிவம் ஒரு சாட்டே தவிர, வேறொன்றும் கிடையாது.'' என்று ஏரம்பரின் குழப்பத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தான்.

இதனைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த ரூபன், ''ஊடகங்களைக் காவல்நாய்கள் என்று சொல்லுறவை. வீட்டைக் காவல் காக்கும் நாய்கள், ஆபத்து ஏதாவது வரும்போது குரைத்து வீட்டுக்காரரை எச்சரிப்பது போன்று, சமூகத்துக்கு வரப்போகிற ஆபத்துக்களை அடையாளம் காட்டி, எச்சரிக்கிற பெரிய பொறுப்பு ஊடகங்களுக்கு இருக்கு. அதேநேரம் ஊடகங்களில் ஆதாரத்துடன் சொல்ல முடியாத - அதேநேரம் சமூகத்துக்குச் சொல்லப்பட வேண்டிய உண்மையான - விசயம் ஒன்றை சொல்ல வேண்டியிருக்கும். அந்த மாதிரியான விசயங்களைத்தானே நாங்கள் கதைக்கிறனாங்கள்.அதனைப் பத்திரிகை பிரசுரிப்பதில் தவறு காண்பவர்களின் நோக்கத்தை மக்கள் விளங்கிக் கொள்வார்கள்'' என்று சொன்னான்.

''இதன் இன்னொரு பக்கத்தையும் சொல்லித்தான் ஆக வேணும்'' என்று பீடிகை போட்ட ஜீவன், ''அன்றாடச் செய்திகளை விட, இப்படியான விடயங்களைப் பிரசுரிப்பதால்தான் ஊடகங்கள் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றன என்பதுதான் உண்மை'' என்றான்.

இதனைத் தலையாட்டி ஆமோதித்த பேப்பர்தம்பி, ''ஊடகங்களைப் பற்றித் தங்கும் விடுதிகளில் அவ்வப்போது ஆய்வு செய்யிற கூட்டங்கள் நடத்துவினம். அங்கே ஒரு வேடிக்கை நடக்கும். தனிநபர்களால் நடத்தப்படும் இணையப்பக்கங்களில் தரக்குறைவாக எழுதப்படுபவற்றையும், சமூக ஊடகங்களில் சொல்லப்படுபவற்றையும் உதாரணங்களாகச் சொல்லிவிட்டு, கடைசியில் பத்திரிகைகள் மீது அந்தக் குற்றங்களைச் சுமத்தி முடிப்பினம்.இதைப் பார்த்தால் அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை.'' என்று வேதனையுடன் சொன்னான்.

இதற்கு வாத்தியார், ''மூத்த ஊடகவியலாளர் ஒருவர் சொன்னதுதான் எனக்கு ஞாபகம் வருகிறது. குப்பைத்தனமாக எழுதுபவர்களையும் சமூக விடயங்களை முக்கியப்படுத்தி எழுதும் ஊடகவியலாளர்களையும் ஒரே தராசில் வைத்து நிறுக்க முடியாது'என்று அவர் சொல்லியிருந்தார்.ஊடகங்களை விமர்சிப்பவர்கள் இதனை யோசித்துப் பார்க்க வேணும்'' என்றார்.

''இதில் மிகவும் கொடுமையானது என்னவென்றால் தொட்டதுக்கும் மேலைநாடுகளின்நடைமுறைகளை இங்கு கொண்டுவந்து நடைமுறைப்படுத்தத் துடிக்கும் சில புத்திஜீவிகள், எமக்கும் மேலைநாட்டினருக்கும் இடையிலான பண்பாட்டு வேறுபாடுகளைக் கவனத்தில் எடுப்பதில்லை'' என்றான் பேப்பர்தம்பி.

''விளக்கமாகச் சொல்லும் தம்பி'' என்றார் ஏரம்பர்.

சொல்லத் தொடங்கினான் பேப்பர்தம்பி.

''மேலைநாடுகள் பணக்கார நாடுகள். அவர்களின் குடும்ப அமைப்பு, திருமண முறை, கல்விக் கொள்கைகள் என எல்லாமே வேறுபட்டவை. அங்கு ஒருவர் இறக்கும் வரை அரசாங்கமே உதவியளித்துப் பார்த்துக் கொள்ளும். பிள்ளைகள் பெற்றோரை பிற்காலத்தில் கவனிக்க வேண்டும் என்ற அவசியம் அங்கில்லை'' என்று சொல்லி மூச்சு வாங்கினான்.

அப்போது ''நாங்கள் பிள்ளை பெறுவதே கடைசிக்காலத்தில் ஒரு வாய் கஞ்சியாவது ஊற்ற ஆள் வேணும் என்றுதானே.'' என்றாள் செல்லாச்சி.

''சரியாகச் சொன்னாய் செல்லாச்சி'' என்று சிலாகித்த பேப்பர்தம்பி, ''சாகும் வரை ஒருவரைப் பராமரிக்கும் வசதி படைத்த மேலைநாடுகளுக்கு வேண்டுமானால் பெற்றோர், பிள்ளைகளை அடிக்கக்கூடாது என்ற மனித உரிமை பொருத்தமாக இருக்கும். ஆனால், அதனை அப்படியே இங்கே கொண்டுவந்து எவருமே கண்டிக்கக் கூடாது என்று நடைமுறைப்படுத்துவது எப்படிப் பொருத்தமாகும்.இதே போலத்தான் பத்திரிகைகள் மீதான கட்டுப்பாடுகளும். அமெரிக்காவின் அரசியல் சட்டத்திலேயே ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், இலங்கையின் அரசமைப்பில் 'கருத்துச் சுதந்திரம்' என்ற சொல்லில் இருந்து ஊடகசுதந்திரம் என்பது வியாக்கியானப்படுத்தப்படுகிறதே தவிர, உறுதிப்படுத்தப்படவில்லை. மேலைநாடொன்றின் அலுவலகத்தில் ஒரு தகவலைப் பெறுவதற்கும் இங்கு 'ஐயாட்டை கேளுங்கோ; ஐயாதான் சொல்ல வேணும்' என்ற தாழ்பணிதல்களைத் தாண்டி ஊடகவியலாளர் ஒரு தகவலைப் பெறுவதில் உள்ள சிரமங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இது இலகுவாகத் தெரியும்'' என்று சொல்லி முடித்தான்.

''நேரமாகுது. வெளிக்கிட முதல் ஒன்று சொல்லுறன்.''என்ற வாத்தியார், ''காலைக்கதிர்' ஆசிரியரிடம் முன்னாள் அமைச்சர் ஒருவர் 'முன்னர் தமக்குப் பிடித்த அரசியல்வாதிகளின் செய்திகளையே வெளியிட்டு வந்த சில ஊடகங்கள், இப்போது - காலைக்கதிர் வெளிவரத் தொடங்கிய பிறகு, - எல்லா அரசியல்வாதிகளின் செய்திகளுக்கும் இடமளிக்கின்றன. ஏனென்றால் காலைக்கதிர் விருப்பு வெறுப்பில்லாமல் எல்லோருக்கும் இடமளிக்கிறது. அதனால் அந்த ஊடகங்களுக்கும் இது கட்டாயமாகிறது. அதற்காக காலைக்கதிருக்கு நன்றி' என்று சொன்னாராம். நாங்களும் காலைக்கதிர் பத்திரிகையின் ஊடக நேர்மைக்கு இழுக்கு வராமல் ஊர்வம்பளப்போம் என்று உறுதியளிப்போம்'' என்று கூறிவிட்டு எழுந்து நடந்தார்.

அவர் சொன்னதை அங்கீகரிப்பதுபோல், ஆலயமணி ஒலித்தது. கச்சான் கடையைக் கட்டத் தொடங்கினாள் செல்லாச்சி.

# இயற்கையில் பிறந்த நாம் ...



(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இன்று நாம் இழைக்கின்ற தவறுகள் எமது வருங்காலச் சந்ததியினரின் வாழ்க்கையைக் கேள்விக்குறியாக்கி விடும். அந்த வகையில் இந்த மரநாட்டுவிழா நிகழ்வுகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

சூழலை நேசிக்கின்ற சூழலியலாளனாக விளங்குகின்ற பொ.ஐங்கரநேசன் வருடா வருடம் கார்த்திகை மாத மரநாட்டு நிகழ்வுகளில் புதிய புதிய சிந்தனைகளை மக்களிடையே விதைத்து வருகின்றமை போற்றுதற்குரியது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் கார்த்திகை மாதத்தில் வடமாகாணம் முழுவதும் ஐந்து லட்சம் மரக்கன்று களை நடும் நிகழ்வுகள் நடைபெற்றன. யாழ் செம்மணிப் பகுதியில் உள்ள ஏரியின் உள்ளும் மரங்களை நட்டுச் சாதனை புரிந்தார்.ஒரு சில கன்றுகளைத் தவிர அவையாவும் இன்று சிறப்பாக வளர்ந்துவருகின்றன. காரைநகர் பொன்னாலை பாலத்தின் இருமருங்கிலும் கண்டல் செடிகளை நட்டு அவை தற்போது கண்டல் மரங்களாக வளரக் கூடிய அளவுக்கு உருப்பெற்றிருக்கின்றன.

தமிழ்த்தேசிய பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் இந்த வருட மரநடுகைமாத சிறப்பு நிகழ்வுகளாக மரநடுகையும் மலர்க்கண்காட்சி நிகழ்வொன்றும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன. இந் நிகழ்வுகளில் வடமாகாணத்தில் உள்ள தாவர உற்பத்தியாளர்கள் மற்றும் பழமர விற்பனையாளர்கள் சங்கங்கள் பங்கேற்றுக் கொண்டு தமது உற்பத்திகளை கண்காட்சிக்கு வைப்பதும் அவற்றை விற்பனை செய்யும் நடவடிக்கைகளும் இதே இடத்தில் இன்று முதல் 24.11.2017 வரை தினமும் காலை 9 மணிமுதல் இரவு 8 மணிவரை நடைபெற இருக்கின்றது. பொதுமக்களுக்கு நல்ல இனக் கன்றுகளை பெற்றுக்கொள்வதற்கு வசதியாகவும் அதே போன்று உள்ளூர் உற்பத்தியாளர்களின் சந்தை வாய்ப்பை வளப்படுத்துகின்ற ஒரு நிகழ்வாகவும் இவை அமையவிருக்கின்றன.

வடமாகாணத்தின் யாழ்ப்பாணப் பகுதியில் சங்கிலியன் பூங்காவையும் பழைய பூங்காவையும் இணைக்கின்ற கச்சேரி நல்லூர் வீதியின் இருமருங்கிலும் வரிசையாக மரங்களை நட்டு ஒரு பசுமை நிறைந்த சாலையாக இவ் வீதியை மாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.இவ் வீதியை பசுமை இடைவழி அல்லது "Green Corridor" என்றோ, அழகுக்காட்சி வழி "Vista" என்றோ மக்கள் அழைக்கக்கூடிய விதத்தில் ஒரு பசுமைச் சாலையாக மாற்றுவதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு கோரிப் பெறப்பட்டுள்ளது என்று அறிகின்றேன். இது வரவேற்புக்குரியது. இச்சாலையின் இருமருங்கிலும் நடப்படுகின்ற மரங்களை நீரூற்றி பராமரிக்கின்ற பொறுப்பை அவ்வப் பகுதியில் உள்ள குடியிருப்பாளர்களே மனமுவந்து ஏற்றுக்கொண்டிருக்கின்றமை ஒரு சிறப்பம்சமாகும். இந்நிலையில் மக்களிடையே தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் குறிக்கோள்கள் ஆழப்பதிந்திருக்கின்றமை தெளிவாகின்றது.

அமைதிக்கான நொபெல் பரிசு பெற்ற கென்யாவைச் சேர்ந்த வங்காரி மாதாய் என்பவர் ஒவ்வொரு மரம் நடப்படும் போதும் சமாதானத்துக்கான விதை ஊன்றப்படுகின்றது என்றார். அதையே இன்று தம்பி நிலாந்தனின் பேச்சு வலியுறுத்தியது. இவர்கள் கூற்றுக்கு அமைவாகப் பாடசாலை மாணவர்கள், இளையவர்கள், முதியோர்கள் என அனைத்துத் தர மக்களிடையேயும் மரங்கள்- சுற்றுச் சூழலின் பாதுகாவலர்கள் என்ற கருத்தை விதைத்து வரும் இந்த இயக்கம் தொடர்ந்து சூழலியல் தொடர்பில் பொதுமக்களுக்கு நல்ல கருத்துக்களையும் விழிப்புணர்வுகளையும் கொண்டு செல்ல வேண்டும்; அதன் மூலம் பசுமையான ஒரு சுற்றுப்புறச் சூழலை எமது வருங்கால சந்ததிக்கு நாம் விட்டுச் செல்ல வேண்டும். இதற்காக நாம் அனைவரும் இணைந்து கொண்டு பாடுபடுவோம் எனத் தெரிவித்து இந்த நல்ல நிகழ்வு சிறப்புற நடைபெற எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து விடைபெறுகின்றேன். – என்றார். ★

# சமுதாயத்தின் காப்பாளனான...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

வரலாறு தோன்றிய காலத்திலிருந்து ஆண் என்பவன் சமுதாயத்தின் காப்பாளனான, சமூகத்தின் அடிப்படைத் தேவைகளை தன் உழைப்பால் பூர்த்தி செய்பவனாக அறியப்படுகிறான் (the role of a protector and provider). அதுதான் ஆணின் முக்கிய கடமையாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது.

ஆனால்,ஆணின் இந்த மிக முக்கிய பங்களிப்பு சமூகத்தில் எந்தவித அங்கீகாரத்தையும் பெறவில்லை. இந்த அடிப்படை மனப்பான்மையின் நீட்சியாகத்தான் தன்னை விட்டு வெளியேறிய முன்னாள் மனைவிக்கும் பராமரிப்புத்தொகை, ஜீவனாம்சம் என்ற வகைகளில், அவன் கப்பம் கட்டி அழவேண்டிய கட்டாயத்திற்கு அவனைத்



தள்ளும் சட்டங்களும் தீர்ப்புகளும் அமைகின்றன!

இத்தகைய தவறான போக்கை எதிர்த்து குரல் கொடுக்கும் நாளாக இந்த ஆண்கள் தினம் அமைகிறது/ முக்கியமாக இன்றைய நிலையில் இந்திய ஆண்கள் எதிர்கொள்ளும் சட்டபூர்வ பயங்கரவாதத்தையும், ஆண்களை பொருளாதார ரீதியிலும் மன ரீதியாகவும் கொடுமைப் படுத்தும் போக்கையும், பல ஆணெதிர் சட்டங்களின் செயல்பாடுகளால் இந்திய ஆண்கள் தொடர்ந்து எதிர்கொள்ளும் சித்திரவதைகளையும், ஆணினத்தையே அழிக்கச் செய்யும் ஒரு பால் சார்பு நிலையையும் எதிர்த்துப் போராடுவது போன்றவற்றிற்காகவுமே ஆண்கள் தினம் கொண்டாடப்பட வேண்டியதாய் இருக்கிறது.

ஆணினத்திற்கு எதிராக கட்டவிழ்த்து விடப்படும் இத்தகைய கொடுமைகளைக் களைய பாடுபடுவதற்காக அகில இந்திய ஆண்கள் முன்னேற்ற இயக்கம் (All India Men's Welfare Association) AIMWA என்னும் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் சார்பில் நாடெங்கும் சர்வதேச ஆண்கள் தினம் அனுசரிக்கப்படுகிறது. ★

# இலங்கையில் சுற்றுலா...

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சுற்றுலாப் பயணத்துறையில் மேலும் போட்டித்தன்மையைப் பெற்றுக் கொள்ள MICE (Meeting Incentive Conference Event) எனும் முறையை ஊக்குவிக்க வேண்டும். மேலும் தேயிலை சுற்றுலாக்களை வெளி நாட்டுப் பிரதேசங்களிலும், கப்பல் சுற்றுலாக்களை கரையோரப் பிரதேசங்களிலும் மேலும், விரிவுபடுத்த வேண்டும். இத்தகைய திட்டங்களை எதிர்காலத்தில் முன்னெடுக்க முயற்சிகள் மேற் கொள்ளும் பட்சத்தில் சுற்றுலாத்துறையில் தொடர்ச்சியான வளர்ச்சிப் போக்கை அவதானிக்க முடி யும்.

இருந்தபோதிலும் இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளை எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அச்சுறுத்தல்களுக்கும் தீர்வு காணப்பட வேண்டியதும் இங்கு அவசியமான ஒன்றாகக் குறித்துக் காட்டப்பட வேண்டும். வீதி விபத்துக்களால் ஏற்படும் உயிரிழப்புகள் வெளிநாட்டுப் பயணிகளைக் குறிவைத்து மேற்கொள்ளப்படும் திருட்டுச் சம்பவங்களை, பெண் சுற்றுலாப் பயணிகள் எதிர்நோக்கும் பாலியல் அச்சுறுத்தல்கள் என்பன இவற்றுள் முக்கியமான பிரச்சினைகள் ஆகும்.

இத்தகைய சவால்களை எதிர்கொள்ளத் தக்க நடவடிக்கைகள் இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட வேண்டும். இது வெறுமனே அரசின் பொறுப்பாக மட்டும் அமைந்துவிடாது. மாறாக நாட்டின் ஒவ்வொரு பிரஜையினதும் கடமையும் ஆகும்.

எமது நாட்டின் இயற்கையான அழகும் அரசால் மேற்கொள்ளப் பட்ட சுற்றுலாத்துறை மேம்பாட்டு நடவடிக்கைகளுடன் வருங்காலத்தில் மேற்கொள்ளக்கூடிய இத்தகைய திட்டங்களும் சர்வதேச ரீதியில் இலங்கையைச் சிறந்த சுற்றுலா தலமாக நிறுவ உதவி புரியும். அத்துடன் 2020 ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகை இலக்கான 45 லட்சத்தை இலகுவாக அடைந்து விட முடியும் என்பதில் ஐயம் இல்லை. ★


# இணைய உலகையே கலக்கு...

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆக, செக்ஸை உடல்தேவையாக, கொச்சைபடுத்தலும் புனிதப்படுத்தலுமில்லாத சாதாரண நிகழ்வாகப் பார்க்க வேண்டியது அவசியம். அதற்கான விவாதங்களுக்கு, இப்படியான படைப்புகள்.. அவற்றிலிருக்கும் குறை களைத் தாண்டி... வழி வகுக்கும் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், நிஜத்திலேயே இதைக் கடுமையாக எதிர்கொள்ளும் ஆணின் ஈகோ, படத்தில் மட்டும் பேச விட்டு விடுமா என்ன? ஆணுக்குத் தேவை எல்லாம் கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் ரகமே. மயக்கம் என்ன படத்தின் யாமினி இன்னமும் ஆண்களுக்கு ஆதர்சமாய் இருப்பதன் காரணம் இதுதான்.

படத்தின் மேல் வைக்கப்படும் இன்னொரு பெரிய குற்றச்சாட்டு, இன்னமும் எத்தனை நாள்களுக்கு பாலியல் சுதந்திரத்தையே பெண்ணியமாக பேசுவீர்கள் என்பது! இந்தக் குரலில் இருக்கும் சலிப்பை, வெறுமையை, கோபத்தைப் புரிந்துகொள்ளவேண்டியது அவசியம்தான். ஆனால், பல யுகங்களாக பெண்ணை உடல்சார்ந்தே யோசித்து வந்திருக்கும் ஆண், தன்வரையில் கொடுக்கும் முதல் சுதந்திரமாக இதைத்தான் பார்க்கிறான். சுதந்திரம் தருகிறேன் என்பதே ஆணாதிக்கம்தான் என்பதை உணராத அவனுக்கு இந்தக் குமிழ் உடைய நேரமாகும்தான். அதே சமயம் பாலியல் சுதந்திரம் பற்றி பேசாமலும் இருக்க முடியாதே! பெண்களுக்கு செக்ஸ் தேவையே இல்லை. அவர்கள் சாதிக்கப் பிறந்தவர்கள். அவர்களுக்கு உயர்ந்த லட்சியங்கள் இருக்கின்றன என முன்பு சொன்ன புனிதப்படுத்துதலுக்கு இந்த வாதங்கள் வலுச் சேர்த்துவிடும் ஆபத்தும் இருக்கிறது. புனிதப்படுத்தப்பட்டால்... "ஒரு பெண் இப்படியெல்லாம் செய்யலாமா?" எனத் திரும்பவும் முதல் கோட்டிலிருந்து தொடங்குவார்கள். எந்த பிம்பங்களுமில்லாத சக தோழராய் பெண்களை பார்ப்பதுதான் நியாயம். ஆக, சமூக விடுதலை, வேலை வாய்ப்புகள் ஆகியவற்றோடு பாலியல் சுதந்திரம் பற்றியும் பேச வேண்டியது அவசியம். அது தொடர்பான உரையாடல்களை உருவாக்கவாவது கதைகளும் படங்களும் வெளிவர வேண்டும்.

லட்சுமி பெண்களின் ஒட்டுமொத்த பிரதிநிதி



என இயக்குநர் எங்கேயும் உருவகப்படுத்தவில்லை. அதேசமயம் இப்படியான கதைகளே நம்மைச் சுற்றி நடக்கவில்லை என உறுதியாகச் சொல்லமுடியுமா என்ன? பின் ஏன் இந்த பதற்றம்? திருமணம் தாண்டிய உறவுகள் நிஜத்தில் நிறையவே இருக்கின்றன.

ஆனால், அதை எல்லாம் கண்டுகொள்ளாமல் கண்ணை மூடிக்கொண்டு எல்லாம் சரியாத்தான் இருக்கு! என நமக்கு நாமே சமாதானப் படுத்திக்கொள்கிறோம். அது அப்படியில்லை என்ற உண்மையை வேறொருவர் உடைக்கும் போது நேரும் பதற்றம் இது! இந்தக் கண்கட்டு விளையாட்டால் என்ன பயன்? நிதர்சனத்தை ஏற்றுக்கொண்டால் மட்டுமே இந்தப் பிரச்சினைகளுக்குரிய வேர்களைக் கண்டறிந்து தீர்வுகள் காண முடியும். அதைக் கருத்தில் கொள்ளாமல் 'லட்சுமி' போன்ற கிளைகளை மட்டுமே வெட்டிக் கொண்டே இருப்பது நமக்கு நாமே செய்துகொள்ளும் துரோகம்.

இன்னமும் லட்சுமி மேல் கோபம் மிச்சம் இருக்கிறதா? சரி, எல்லாவற்றையும் விடுங்கள். கமல் நடித்த படங்களில் உங்களின் பேவரைட் எது? பாலு மகேந்திராவின் படங்களில்? அநேகம் பேர் 'சதிலீலாவதி' என்போம். அதன் கதை என்ன? மனைவி, குழந்தைகள் என சலிப்புதட்டும் வாழ்க்கைக்கு வடிகால் தேடும் ஒருவனுடைய கதை. அதைச் சிரிக்கச் சிரிக்க ஏற்றுக்கொண்ட நம்மால் இந்தப் படத்தை கொஞ்சம்கூட ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்றால் பிரச்சினை லட்சுமி இல்லை. ★



# சீனாவின் இன்னோர் அதிசயம்!

சீனாவில் மிக அழகான, பிரமாண்டமான நூலகம் ஒன்று திறக்கப்பட்டிருக்கிறது. டியான்ஜின் பகுதியில் அமைந்திருக்கும் பின்ஹாய் நூலகம் 34 ஆயிரம் சதுர மீற்றர்களுக்குப் பரந்து விரிந்திருக்கிறது. 5 மாடிகளைக் கொண்ட இந்த நூலகத்தின் மேற்கூரையிலும் புத்தக அலுமாரிகள் இருக்கின்றன.

இதில் 12 லட்சம் புத்தகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த நூலகத்துக்குள் நுழைந்தால் அதன் அழகையும் பிரமாண்டத்தையும் கண்டு பிரமித்துப் போகாமல் இருக்க முடியாது. கீழ்த்தளம் முழுவதும் படிப்பதற்கும் நடுவில் இருக்கும் தளங்களில் அலுவலகங்களும் மேல் தளத்தில் கணினி அறைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. டச்சு கட்டடக் கலைஞர்களால் 3 ஆண்டுகளில் இது கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது.

# உலகின் மிகப் பெரிய வைரம்



உலகின் மிகப் பெரிய, குறைபாடுகள் இல்லாத வைரம் 657 கோடி ரூபாவிற்கு ஜெனிவாவில் நடந்த ஏலத்தில் விற்பனையானது.

ஆபிரிக்காவின் அங்கோலா பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த வைரமே உலகத்தின் மிகப் பெரிய வைரம் என்று கூறப்படுகிறது. வெட்டியெடுக்கப்படுவதற்கு முன்பு இது 404 கரட்டுக்களைக் கொண்டிருந்தது.

வடிவமைப்புக்குப் பிறகு இந்த முதல் தர வைரம் வெள்ளை நிறத்தில் தீப்பெட்டியின் அளவு மற்றும் வடிவத்தில் உள்ளது. சுமார் 7 சென்ரி மீற்றர்(2.7 அங்குலம்) நீளம் கொண்ட இந்த வைரம் 163 கரட்டுக்கள் கொண்டது.

ஜெனிவாவில் உள்ள கிறிஸ்டி என்னும் நிறுவனம் இந்த ஏலத்தை நடத்தியது. இந்த வைரம் 579 கோடி ரூபா ஏலத்தில் விற்பனையாகும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அதைவிட அதிகமாக 78 கோடி ரூபா விற்பனை ஆகியுள்ளது.

இந்த வைரத்தை வாங்கியவர் தொடர்பான விவரங்கள் இன்னும் வெளியாகவில்லை.

# தனிமையில் இனிமை இதுதானோ?

அரிசோனாவின் பாலைவனப் பகுதியில், ஒவ்வாமையால் பாதிக்கப்பட்டவர்கள் சேர்ந்து வாழ்ந்து வருகிறார்கள். வாசனைத் திரவியம், சிக்கரெட் புகை, புதுத்தாள், புதுத் துணி, பிளாஸ்ரிக், பூக்களின் நறுமணம், இரசாயனங்கள் என்று எத்தனையோ வித ஒவ்வாமைகள் தோன்றுகின்றன. இவர்களால் மற்றவர்களைப் போல் இயல்பாக இருக்க முடிவதில்லை. காலப்போக்கில் மனநலம் பாதிக்கப்படுகிறார்கள். இவர்கள் மருத்துவத்தை நாடாமல், தாங்களே சரிசெய்துகொள்ள விரும்புகிறார்கள்.

அதனால் மக்கள் வசிக்கும் இடங்களைத் தவிர்த்து, தனியாக வசித்து வருகிறார்கள். தங்களுக்கு ஒவ்வாமை ஏற்படுத்தும் விடயங்களை தவிர்த்துக்கொண்டு வாழ்க்கை நடத்துகிறார்கள். 1988ஆம் ஆண்டு ப்ரூஸ் மெக்க்ரியரி இரசாயன ஒவ்வாமை ஏற்பட்டமையால், பாலைவனத்தில் வந்து தங்கிவிட்டார்.

1994ஆம் ஆண்டு சூசி மோல்லோய் தனக்கு ஏதோ பிரச்சினை என்று உணர்ந்தார். தனியாக வசிக்க முடிவெடுத்து, இந்தப் பகுதிக்குக் குடியேறினார். இன்றுவரை தன்னுடைய காரில் தான் வசித்து வருகிறார். காகிதங்களைத் தொடும்போது கைகளுக்கு உறை மாட்டிக் கொள்கிறார்.

புகை பிடிக்காததால் முகமூடி அணிகிறார். இப்படி உலகத்தை விட்டு ஒதுங்கி வாழ்பவர்களுக்குக் குடும்பத்தினரும் நண்பர்களும் நிதியுதவி செய்கிறார்கள். அதனால் இவர்கள் ஓரளவு நிம்மதியாக வாழ்ந்து வருகிறார்கள். தங்களுக்குள் உரையாடிக்கொள்கிறார்கள். உதவி செய்துகொள்கிறார்கள். சுமார் 30 பேர் இப்படி வசித்து வருகிறார்கள்.




# இவர் தான் சிறந்த மனிதர்

கலிபோர்னியாவில் வசிக்கும் 62 வயது முகமது ப்ஸீக், கடந்த இருபதாண்டுகளாக நோயுற்றக் குழந்தைகளை வளர்த்து வருகிறார். இந்தக் குழந்தைகள் ஆதரவற்ற இல்லங்களைச் சேர்ந்தவர்கள். மிகக் கடுமையான நோயால் பாதிக்கப்பட்டவர்கள்.

இல்லங்களால் கைவிடப்பட்டவர்கள். இவர்களைத் தன் வீட்டில் வைத்து மருத்துவம் பார்க்கிறார், அன்பு செலுத்துகிறார், தன்னம்பிக்கை ஊட்டுகிறார், மகிழ்ச்சியாக வைத்திருக்கிறார். லொஸ் ஏஞ்சல்ஸில் ஆதரவற்ற குழந்தைகளின் வளர்ப்புத் தந்தையாக இவர் ஒருவர் மட்டுமே இருக்கிறார்.

எங்கள் அமைப்பில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு, கவனிக்கப்பட வேண்டிய குழந்தைகள் இருந்தால் நாங்கள் உடனே முக மதுவைத்தான் தொடர்புகொள்வோம். எத்தனை குழந்தை களைக் கொடுத்தாலும் அன்புடன் அழைத்துச் செல்வார். இவரைப் போன்ற ஒரு மனிதரை நான் பார்த்ததில்லை என்கிறார் குழந்தைகள் நல அமைப்பைச் சேர்ந்த மெலிஸா டெஸ்டர்மென்.




# மனித குலத்துக்கான 2 ஆவது எச்சரிக்கை



அதிகரித்து வரும் மக்கள் தொகை மற்றும் பெற்றோல், டீசல் போன்ற எரிபொருள்களால் ஏற்படும் கரும் புகை காரணமாக பூமிக்கு பெரும் ஆபத்து ஏற்படும் என விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பருவநிலை மாற்றம் காரணமாக உலகில் பல்வேறு இயற்கைப் பேரழிவுகள் ஏற்படுகின்றன. அதற்கு சுற்றுப்புறச் சூழல் மாசுவே காரணம் எனக் கூறப்படுகிறது.

பெற்றோல், டீசல் உள்ளிட்ட எரி பொருள்கள் பயன்படுத்துவதால் வளி மண்டலத்தில் ஓசோன் மண்டலத்தில் ஓட்டை ஏற்பட்டு அதனால் சூரியனின் வெப்பம் பூமியைத் தாக்குகின்றது என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

காற்று மண்டலத்தில் ஏற்கனவே குறைவாக இருந்த மாசு அளவு தற்போது எப்போதும் இல்லாத அளவு அதிகரித்துள்ளது. இதற்குப் பூமியில் அதிகரித்து வரும் மக்கள் தொகை பெருக்கமும், அவர்களால் பயன்படுத்தப்படும் எரிபொருள்களால் ஏற்படும் கரும் புகையுமே காரணமாகக் கூறப்படுகிறது.

இதே நிலை தொடர்ந்து நீடித்தால் பூமிக்கு எப்போதும் இல்லாத அளவுக்கு பெரும் ஆபத்து ஏற்படும். இதை 184 நாடுகளைச் சேர்ந்த 15 ஆயிரம் விஞ்ஞானிகள் கடிதம் மூலம் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மனித குலத்துக்கான எச்சரிக்கை என்ற தலைப்பில் Bio science அறிவியல் நாளிதழில் வெளியிட்டுள்ளனர். இந்த எச்சரிக்கை மனித குலத்துக்கு விடுக்கப்பட்ட 2ஆவது நோட்டீஸ் என வர்ணிக்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் மாசு காரணமாக வனப்பகுதிகள் அழியும். சுத்தமான குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும். கடல்வாழ் உயிரினங்கள் அழியும். கடல்நீர் மட்டம் உயர்ந்து பேரழிவு ஏற்படும். மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படும் என விளக்கம் அளித்துள்ளனர்.

# சிரியாவில் கார்க் குண்டுத் தாக்கு; அப்பாவி மக்கள் 26 பேர் பலி!



டமாஸ்கஸ்,நவ.19

சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய கார்வெடிகுண்டுத்தாக்கு தலில் அப்பாவி பொது மக்கள் 26 பேர் கொல்லப் பட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சிரியாவில் அதிபர் பஷர் அல் ஆசாத்துக்கு எதிரான ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் ஜிஹாதி குழுவினர் நாட்டின் பல பகுதிகளைக் கையகப்படுத்தி, தங்களது ஆதிக்கத்தின்கீழ் வைத்து நிர்வகித்து வருகின்றனர். இதுதவிர, ஐ.எஸ். தீவிரவாதிகளும் சில பகுதிகளைக் கைப்பற்றி தங்களது கட்டுப் பாட்டுக்குள் வைத்துள்ளனர். இந்தக் குழுக்களையும் வேட்டையாடஅமெரிக்க விமானப் படையின் துணையுடன் அந்நாட்டு முப்படைகளும் தீவிரமாகப் போரிட்டு வருகின்றன.

இதற்கிடையே, நேற்று முன்தினம் நடைபெற்ற சண்டையில் கூட்டுப் படையினர்ஐ.எஸ். தீவிரவாதிகளிடம் இருந்து சில பகுதிகளைக் கைப் பற்றினர்.

இந்த நிலையில், சிரியாவின் டேர் எஸ்சர் மாகாணத்தில் பொதுமக்கள்கூடியிருந்த இடத்தில் ஐ.எஸ். தீவிரவாதிகள் கார்க் குண்டு வெடிப்பு மூலம் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் அப்பாவி பொது மக்கள் 26 பேர் கொல்லப் பட்டுள்ளனர் என அங்குள்ள மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

# ராணுவ நீர்மூழ்கிக் கப்பல் 44 பேருடன் மாயமானது



ஆர்ஜென்டினாவைச் சேர்ந்த இராணுவ நீர்மூழ்கிக் கப்பல் தெற்கு அத்திலாந்திக் கடலில் சென்றபோது மாயமானது. அதில் பயணம் செய்த ஊழியர்கள் உட்பட 44 பேரைத் தேடும் பணி நடைபெற்று வருகின்றது.

ஆர்ஜென்டினாவைச் சேர்ந்த இராணுவ நீர்மூழ்கிக் கப்பல் கடந்த சில தினங்களுக்கு முன் படகோனியன் கடல் பகுதியில் இருந்து புறப்பட்டுச் சென்றது.

தெற்கு அத்திலாந்திக் கடலில் சென்று கொண்டிருந்த போது திடீரென கப்பல் மாயமானது. கட்டுப்பாட்டு அறையுடனான ரேடார் தொடர்பு துண்டிக்கப்பட்டது. அதில் பயணம் செய்த ஊழியர்கள் உட்பட 44 பேரைத் தேடும் பணியில் கடற்படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுதொடர்பாக கடற்படை அதிகாரிகள் கூறுகையில், தெற்கு அத்திலாந்திக் கடலில் மாயமான நீர்மூழ்கிக் கப்பலைத் தேடி வருகிறோம். கடந்த வியாழன் விமானப்படை ஹெலிக்கொப்டர் மூலம் கடலில் தேடும் பணி தீவிரமாக நடைபெற்றது. அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் சிலி நாட்டு அரசுகளும் கப்பலைத் தேடும் பணியில் உதவிசெய்து வருகின்றன.

# அயோத்தி விவகாரம்: பேச்சு மூலம் தீர்வு – ஸ்ரீ ரவிசங்கர்



அயோத்திப் பிரச்சினை தொடர்பாகப் பேச்சு மூலம் பெரிதான வகையில் நாம் சாதிக்க முடியும் என ஸ்ரீ ரவிசங்கர் கூறியுள்ளார்.

அயோத்திப் பிரச்சினையில் அனைத்துத் தரப்பினருடனும் பேச்சு நடத்திச்சுமுக தீர்வு காண்பதில் 'வாழும் கலை' அமைப்பின் நிறுவுநரும்,ஆன்மிகக்குருவுமான ஸ்ரீரவிசங்கர் ஆர்வம் காட்டி வருகின்றார். இது தொடர்பாக அவர் நேற்று முன்தினம் அயோத்தி சென்று பலரையும் சந்தித்தார்.

அவர் பராங்கி மகால் இஸ்லாமிய மையத்தின் தலைவரும், அகில இந்திய முஸ்லிம் தனிநபர் சட்ட சபையின் மூத்த உறுப்பினருமான மவுலானா ரஷீத் பராங்கி மஹ்லி உள்ளிட்ட முஸ்லிம் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார்.

அதன்பின்னர் அவர் நிருபர்களிடம் பேசுகையில், நான் நீதிமன்றை மதிக்கிறேன். அதே நேரத்தில், அவற்றால் இதயங்களை இணைக்க முடியாது.100ஆண்டுகளுக்கு பின்னர் கூட நீதிமன்றத் தீர்ப்பு நிலைத்து நிற்கும். அதேநேரத்தில், நாம் இதயங்களின் வழியாகத் (பேச்சு வார்த்தை நடத்தி) தீர்வு கண்டு விட்டால், அது தலைமுறைகளுக்கும் அங்கீகரிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறும் போது, இந்த முயற்சிகளை எடுப்பதில் கொஞ்சம் தாமதம் ஏற்பட்டு விட்டது என்பதை ஒப்புக் கொள்கிறோம். இந்தப் பிரச்சினை விரைவில் தீர்க்கப்பட வேண்டும் என்று விரும்புகிறோம். பேச்சு வார்த்தை மூலம் பெரிதான வகையில் நாம் சாதிக்க முடியும் என்று நம்புகிறேன் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# பிணத்துக்குத் தலைமாற்று சத்திர சிகிச்சை வெற்றி!

## மனிதர்களுக்குப் பொருத்தத் திட்டம்

ரோம்,நவ.19

பிணத்துக்கு நடந்த தலைமாற்றுச் சத்திரசிகிச்சை வெற்றிகரமாக முடிந்துள்ளது. இதே தொழில்நுட்பத்துடன் உயிருடன் வாழும் மனிதர்களுக்குத் தலை மாற்றுச் சத்திரசிகிச்சை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

மனிதர்களுக்கு உடல் உறுப்பு மாற்றுச் சத்திரசிகிச்சை நடைபெறுகின்றமை வழமையாகிவிட்டது. அதன் அடிப்படையில் தலைமாற்றுச் சத்திரசிகிச்சை நடத்தும் முயற்சியில் வைத்தியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ரஷ்யாவைச் சேர்ந்த வெலேரி ஸ்பிரிதிநோவ் என்பவருக்குத் தலைமாற்றுச் சத்திரசிகிச்சை நடத்தப்போகின்றோம் என இத்தாலியைச் சேர்ந்த வைத்தியர் செர்ஜியோ கனோவெரா அறிவித்தார். இதன் மூலம் முதன் முறையாக தலைமாற்றுச் சத்திரசிகிச்சை நடக்க உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. இதற்கான சோதனை முயற்சிகளில் கனோவெரா ஈடுபட்டு வந்தார்.

இந்த நிலையில், தற்போது ஒரு பிணத்துக்குத் தலைமாற்றுச் சத்திர சிகிச்சை வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது. செர்ஜியோ கனோவெரா தலைமையிலான குழுவினர் இந்தச் சத்திர சிகிச்சையைச் செய்துள்ளனர்.

சுமார் 18 மணி நேரம் இந்தச் சத்திரசிகிச்சை நடத்தப்பட்டது. அப்போது புதுவிதமான தொழில் நுட்பம் பின்பற்றப்பட்டது. தண்டுவடம், நரம்புகள் மற்றும் இரத்த நாளங்கள் அனைத்தும் அதி நவீனதொழில்நுட்பத்துடன்தலையுடன் பொருத்தப்பட்டன.

இந்தச் சோதனை வெற்றி பெற்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே இதே தொழில்நுட்பத்துடன் உயிருடன் வாழும் மனிதர்களுக்கு தலை மாற்றுச் சத்திரசிகிச்சைநடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

# போயஸ் கார்டன் சோதனையில் அரசியல் சதி இருக்கிறது: தினகரன்



தூத்துக்குடி,நவ.19

போயஸ் கார்டன் இல்லத்தில் நடந்த வருமான வரித்துறைச் சோதனையில் அரசியல் சதி இருக்கின்றது என டி.டி.வி. தினகரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சசிகலா, டி.டி.வி. தினகரன் மற்றும் அவர்களின் உறவினர்கள், நண்பர்கள் தொடர்புடைய இடங்களில் வருமான வரித்துறை அதிகாரிகள் கடந்த வாரம் தீவிர சோதனை நடத்தி ஏராளமான ஆவணங்களைக் கைப்பற்றினர். இதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் ஜெயலலிதாவின் போயஸ் கார்டன் இல்லத்திலும் சோதனை நடந்தது. இந்தச் சோதனைக்கு டி.டி.வி. தினகரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.


இதுபற்றி டி.டி.வி. தினகரன் நேற்றுத் தூத்துக்குடியில் நிருபர்களிடம் கூறியவை வருமாறு:-

ஜெயலலிதா வாழ்ந்த இல்லத்தில் வருமான வரிச்சோதனை நடத்தியதில் அரசியல் உள்நோக்கம் மற்றும் சதி இருக்கிறது. போயஸ் கார்டன் இல்லத்தில் நடந்த சோதனையின்போது, பாழாகிப் போன 2 மடிக்கணினிகளைக் கைப்பற்றியிருக்கிறார்கள். ஜெயலலிதாவின் அறையில் சோதனை நடத்தப்படவில்லை.

சோதனைகள் மூலம் அச்சுறுத்தப் பார்க்கின்றார்கள். எந்த அச்சுறுத்தலுக்கும், நடவடிக்கைக்கும் பயப்படமாட்டேன். சோதனை நடப்பதால் குற்றவாளி என்று கூறிவிட முடியாது. சேகர் ரெட்டியின் வீட்டில் இருந்ததைபோன்று ஜெயலலிதா வீட்டில் நகைகளோ பணமோ குவியல் குவியலாக இல்லை. இங்கு சோதனை நடத்தியதுபோன்று, அன்புநாதன், சேகர்ரெட்டி வீடுகளில் சோதனை நடத்தியிருக்க வேண்டும்.

ஜெயலலிதாவைப் பிரதமர் மோடி மருத்துவமனையில் பார்க்காதமையை அரசியலாகப் பார்க்கவிலை. கருணாநிதியைச் சந்தித்ததையும் அரசியலாகப் பார்க்கவில்லை.ஆனால்,தற்போதுநடக்கும் வருமான வரிச்சோதனையில் அரசியல் இருக்கிறது என்று தெரிவித்துள்ளார்.

# லக்மலின் புதிய சாதனை




இந்திய அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கையின் சுரங்க லக்மல் அபூர்வ உலக சாதனையைப் படைத்துள்ளார்.

இலங்கை - இந்தியா இடையிலான முதல் டெஸ்ட் போட்டி கொல்கத்தாவின் ஈடன் கார்டன் மைதானத்தில் நடந்து வருகின்றது. போட்டியின் இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் இந்தியா 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 74 ஓட்டங்கள் எடுத்தது.

கடுமையான மழை காரணமாக இப்போட்டியில் மொத்தமாகவே, இரண்டு நாள்களிலும் சேர்த்து 32.5 ஓவர்கள் மட்டுமே வீசப்பட்டன. இதில் முதல் நாளில் 6 ஓவர்கள் வீசிய இலங்கை வீரர் லக்மல் ஓர் ஓட்டம் கூட விட்டுக் கொடுக்கவில்லை. இரண்டாம் நாள் தொடர்ந்து பந்து வீசிய லக்மல் தனது 47ஆவது பந்தில் தான் முதல் ஓட்டத்தை விட்டுக் கொடுத்தார்.

இதன் மூலம் முதல் ஓட்டத்தை விட்டுக்கொடுக்கும் முன் அதிக பந்துகளைக் கட்டுப்படுத்திய பந்துவீச்சாளர் என்ற புதிய உலக சாதனையை லக்மல் படைத்துள்ளார். இதற்கு முன்னர் 2001இல் மேற்கிந்திய வீரர் டெய்லர் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக போட்டியில் 40 பந்துகள் வரை கட்டுப்படுத்தியதே சாதனையாக இருந்த நிலையில் லக்மல் அதை முறியடித்துள்ளார்.



# ஆஷஸ் தொடர்: ஆஸியின் குழப்பம் இங்கிலாந்துக்குச் சாதகம் - ஷேன் வோர்ன்

ஆஷஸ் தொடரின் முதல் இரண்டு டெஸ்டுக்காக ஆஸ்திரேலிய அணியில் ஏற்பட்டுள்ள குழப்பம், இங்கிலாந்துக்கு சாதகம் என ஷேன் வோர்ன் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட ஆஷஸ் கிரிக்கெட் தொடர் வருகிற 23ஆம் திகதி பிரிஸ்பேனில் ஆரம்பமாக உள்ளது. முதல் இரண்டு போட்டிக்கான (பிரிஸ்பேன் மற்றும் அடிலெய்) ஆஸ்திரேலிய அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

யாரும் எதிர்பார்க்காத வகையில் விக்கெட் காப்பாளர் டிம் பெய்ன் அணியில் சேர்க்கப்பட்டார். 7 வருடத்திற்குப் பிறகு பெய்ன் மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். அதேபோல் ஆரம்ப வீரர் ரென்ஷா நீக்கப்பட்டு கமரூன் பன்கிராப்ட், ஷேன் மார்ஷ் ஆகியோர் அணியில் சேர்க்கப்பட்டனர். மெக்ஸ்வெல்லுக்கு அணியில் இடமில்லை.

மேத் வடே மற்றும் நெவில் ஆகியோரை புறந்தள்ளிவிட்டு டிம் பெய்ன் இற்கு இடம் அளித்ததற்கு முன்னாள் வீரர்கள் விமர்சனம் செய்துள்ளனர்.

13 பேர் கொண்ட அணியைத் தேர்வு செய்ததிலும், ஆஸ்திரேலிய அணியில் யாரை களம் இறக்குவது என்பதில் குழப்பம் நிலவுவதாலும், பிரிஸ்பேன் போட்டியில் இங்கிலாந்துக்கு அதிக வாய்ப்புள்ளது என முன்னாள் சுழற்பந்து வீச்சு ஜாம்பவான் ஷேன் வோர்ன் தெரிவித்துள்ளார்.


இது தொடர்பாக ஷேன் வோர்ன் கூறுகையில் ''ஆஸ்திரேலிய அணியில் குழப்பம் நிலவுகின்றது. ஆஸ்திரேலியா விக்கெட் காப்பாளர் பெய்னைத் தேர்வு செய்துள்ளது. அவரைச் சொந்த மாநில அணிகூடத் தேர்வு செய்யவில்லை. ஆஸ்திரேலியாவை விட இங்கிலாந்து முதல் போட்டிக்குச் சிறந்த சூழ்நிலையுடன் சென்று கொண்டிருக்கிறது என நினைக்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட்

இலங்கையில் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடைபெறவுள்ளது. இதில் இந்தியா, பங்களாதேஷ் அணிகள் பங்கேற்கின்றன.

இலங்கை சுதந்திரம் அடைந்து 70ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடரை நடத்த இலங்கைக் கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது. அந்தத் தொடருக்கு 'நிதஹாஸ் ட்ராபி' என்று பெயரிடப்பட்டுள்ளது. ஒவ்வோர் அணியும் மற்ற அணிகளுடன் தலா ஒருமுறை மோத வேண்டும். முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணி இறுதிப் போட்டியில் பலப்பரீட்சை நடத்தும்.

இந்தத் தொடரில் கலந்துகொள்கின்றமை தொடர்பாக பி.சி.சி.ஐயின் முகாமையாளர் ராகுல் ஜோரி கூறுகையில், இலங்கையின் 70ஆவது வருடக் கொண்டாட்டத்தில் சிறப்புரிமை பெற்றவர்களில் நாங்கள் ஒருவராக இருக்கிறோம். இலங்கைக்கு பி.சி.சி.ஐ. விடச் சிறந்த நண்பர் வேறு யாரும் இருக்க முடியாது'' என்று தெரிவித்துள்ளார்.




# என்னைப் பார்த்துச் சிரிக்கிறார்கள் ஏன்? ஏன்? — கலங்கிய நெஹ்ரா



இந்திய அணியிலிருந்து சமீபத்தில் ஓய்வு பெற்ற நெஹ்ரா, தற்போது கிரிக்கெட்டில் வர்ணனையாளர் பணியில் ஈடுபட்டு வருகின்றார்.

இந்தியா, இலங்கை அணிகளுக்கான டெஸ்ட் போட்டியில் வர்ணனையாளராகக் களமிறங்கியபோது ரசிகர்கள் பலர் கிண்டலுடன் சிரித்தமையால் நெஹ்ரா கவலையடைந்துள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் முதலாம் திகதி நியூஸிலாந்துக்கு எதிரான கடைசி ரி-20 போட்டியுடன் ஓய்வுபெற்றார் நெஹ்ரா. அதன் பின்னர், அவர் என்ன செய்யப் போகிறார் என்பதை அறியப் பலரும் ஆவலாக இருந்தனர்.

இந்த நிலையில், அவர் இந்தியா மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையேயான முதல் டெஸ்ட் போட்டியில் வர்ணனையாளர் பணியில் ஈடுபட்டார். இது தொடர்பாக அவர் கூறுகையில்,

காலையில் நான் கோட் அணிந்து வந்ததைப் பார்த்த பலர் சிரித்தனர். ரசிகர்கள் பலர் மோசமாகக் கூச்சலிட்டனர். மேலும், இந்திய அணியிலும் கூட என்னைப் பார்த்துச் சிலர் சிரித்தனர். என் வேலைக்கும், கிரிக்கெட்டுக்கும் சம்பந்தமில்லை. எனினும், இந்த வேலை இயல்பாகச் செல்கிறது. எப்போதும் போலவே வர்ணனை செய்வேன். என் வேலையை விட மாட்டேன் எனத் தெரிவித்துள்ளார். இந்த நிலையில், சிரித்த முகத்துடன் எப்போது இருக்கும் நெஹ்ரா வையே கலங்கடித்து விட்டார்கள் எனப் பலரும் சமூக வலைத்தளங்களில் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

# மெசுட் ஒசிலை குறிவைக்கும் பார்சிலோனா




லிவர்பூல் அணியின் பிலிப்பே கவுட்டினே விற்குப் பதிலாக அர்சௌல் வீரர் மெசுட் ஒசிலைப் பார்சிலோனா குறிவைக்கின்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

ஸ்பெயின் நாட்டின் முன்னணி உதைபந்து அணியாகத் திகழ்ந்து வருவது பார்சிலோனா. இந்த அணியில் விளையாடிய பிரேஸில் அணியின் நெய்மர் பிரான்ஸில் உள்ள பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணிக்கு மாற்றம் ஆனார்.

நெய்மருக்குப் பதிலாக லிவர்பூல் அணியில் விளையாடும் பிலிப் கவுட்டினோவை வாங்கப் பார்சிலோனா விரும்பியது. ஆனால், லிவர்பூல் அவரை விடுவிக்க மறுத்தது. இந்த நிலையில் ஆர்சௌல் அணியில் விளையாடும் மெசுட் ஒசிலை வாங்கப் பார்சிலோனா திட்டமிட்டுள்ளது. ஜனவரி மாதம் நடக்கும் வீரர்களை மாற்றம் செய்யும் நடவடிக்கையின் போது இதற்கான முயற்சியைப் பார்சிலோனா எடுக்க இருக்கின்றது.

ஒசிலின் ஒப்பந்தம் இந்தப் பருவகாலத்தோடு முடிவடைகிறது. இதனால் ஜனவரி மாதம் வீரர்களை மாற்றம் செய்யும் நடவடிக்கைக்கு உட்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேபோல் அலெக்சிஸ் சான்செஸ் ஒப்பந்தமும் ஜூன் மாதத்துடன் முடிவடைகிறது.

இதற்கிடையே ஜனவரியில் அர்டா துரான், அலெக்ஸ் விடால் அல்லது டெனிஸ் சுவாரஸ் ஆகியோரில் ஒருவரை ஒப்பந்தம் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சர்வேஸின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்க்கூட்டமைப்பில்செயற்படாமல் – அதற்கு எதிரான கூட்டணியில் ஈ.பி.ஆர்.எல்.எவ். தேர்தலில் நின்றால் – கூட்டமைப்பில் அக்கட்சி தொடர்ந்து இல்லை என்று அறிவிக்கவும் –

கூட்டமைப்பில் அக்கட்சி இல்லை என்பதால், கூட்டமைப்பின் ஆட்சி நடக்கும் வடக்கு மாகாண சபையின் அமைச்சுப் பதவியிலிருந்து அக்கட்சியின் பிரதிநிதியை நீக்குமாறு முதலமைச்சர் விக்னேஸ்வரனைக் கோரவும் –

தமிழ்க் கூட்டமைப்பு தயங்காதுஎனஅதன்மூத்ததலைவர்களில்ஒருவர்நேற்றுமுன்தினம் நடைபெற்ற – கூட்டமைப்பின் பிரதான பங்காளி கட்சியான இலங்கைத் தமிழரசின் – அரசியல் குழுக் கூட்டத்துக்குப் பின்னர் தெரிவித்தார்.

தேவையானால் கூட்டமைப்பில் இடம்பெறாதகட்சிஒன்றின் உறுப்பினர் ஒருவரை கூட்டமைப்பு ஆட்சி அமைத்துள்ள மாகாண அரசின் அமைச்சுப் பதவியில் இருந்து அகற்றுவதற்கு சபையில் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வரவும் தயங்கோம் என்றும்அந்தத்தலைவர்குறிப்பிட்டார். (உ)

## யாழ். மேயர்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்தெரிவில்அவசரப்படவேண்டிய தேவை எதும் இல்லை என்றும், நன்கு நிதானித்து – யோசித்தே அதற்குப் பொருத்தமானஒருவர்நியமிக்கப்படுவார் என்றும், அது தேர்தலுக்குப் பின்னரேபெரும்பாலும்முடிவாகும் என்றும் தமிழரசுக் கட்சியின் அரசியற் குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் சார்பில் யாழ். மாநகர முதல்வர் பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளர்கள் தொடர்பில் பெரும்போட்டி நிலை எழுந்துள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சிறில், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஜங்கரநேசன், ஆர்னால்ட், இ.ஜெயசேகரம் ஆகியோரின் பெயர்கள் முதல்வர் வேட்பாளர் பதவிக்கு அடிபடுகின்றன.

ஆயினும் இது குறித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட்டாரங்கள் இதுவரை முடிவெதனையும் எடுக்கவில்லை என்று தெரியவருகிறது.

யாழ். மாகர முதல்வர் பதவி மிகப் பொறுப்பு வாய்ந்த பதவி என்பதால் அதற்குப் பொருத்தமான ஒருவரைத் தேர்வு செய்வதில் கூட்டமைப்பு அக்கறை காட்டுவதாகவும், பெரும்பாலும் தேர்தலின் பின்னரே அந்தப் பதவியையாருக்குவழங்குவது என்பது தொடர்பில் முடிவு எட்டப்படும்என்றும்தமிழரசுக்கட்சியின் அரசியல்குழு உறுப்பினர் ஒருவர் கூறினார்.

## வாள்வெட்டு நடந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசா லைக்குச் சென்று தாம் பார்வையிடவுள்ளார் எனவும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தனது உத்தரவுக்கு அமைவாக யாழ்ப்பாணத்தில் பொலிஸாரால் வீதிச் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றனவா என ஒவ்வொரு பகுதிகளுக்கும் சென்று தாம் கண்காணிக்க உள்ளார் எனவும் அவர் கூறினார்.

## காலியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றில்ஆஜர்செய்யப்பட்டு எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வெலிபிட்டிமோதர, மஹலபுகல, ருக்வத்த, கிங்தொட்ட, பியதிகம, குருந்துவத்த ஆகிய பிரதேசங்களில் நேற்று முன்தினம் இரவு முதல் ஊரடங்குச் சட்டம் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, 200பொலிஸ் அதிகாரிகளும்நூற்றுக்கும்அதிகமான சிறப்பு அதிரடிப் படையினரும் பாதுகாப்பு நடவடிக்கைக்காக அந்தப் பகுதியில் நிறுத்தப்பட்டிருக்கின்றனர் என ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர மேலும் கூறினார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் அந்தப் பகுதியில் இடம்பெற்ற விபத்து சம்பவம் ஒன்றில்முஸ்லிம்சிறுமிஒருவர் உயிரிழந்துள்ளார். அந்த விபத்தை ஏற்படுத்தியவர் சிங்களச்சாரதிஎன்பதால்அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.

விபத்துச் சம்பவத்தை அடுத்து அப்பகுதிக்கு விரைந்த பொலிஸார் சாரதியைக் கைது செய்திருந்தனர். பின்னர் சாரதி விடுவிக்கப்பட்டார். அதனால் மேலும் பதற்றம் நீடித்தது.

அதனைத் தொடர்ந்து பொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடிப் படையினர் அந்தப் பகுதிகளில் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டனர். நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமைகாவல்கடமையில்ஈடுபட்டுஇருந்தபொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் அந்தப்பகுதியில் இருந்து விலக்கப்பட்டனர்.

அதனை தொடர்ந்து வெள்ளிக்கிழமை மாலை வெளியிடங்களில் இருந்து பேருந்துகள் மூலம் அழைத்து வரப்பட்ட சிங்கள இளைஞர்கள் முஸ்லிம்களின் வீடுகள், கடைகள் மீது தாக்குதல் நடத்தி வன்முறைகளில்ஈடுபடதொடங்கினார்கள் எனவும், அத்துடன்கடைகளைச் சூறையாடி உடைமைகளைத் தீக்கிரையாக்கினர் எனவும் கூறப்பட்டது.

இந்தத் தாக்குதல் சம்பவங்களால் முஸ்லிம்கள் பலர் காயமடைந்தனர். இதனால் இன முறுகல் ஏற்பட்டது. இதனை அடுத்து ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. பின்னர்நேற்றுக்காலைஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டது. ஆயினும் அங்கு நிலைமை இன்னும் வழமைக்குத் திரும்பவில்லை.

## பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பொலிஸார் தற்போது எவரையும்அநாவசியமாகக்கைது செய்வதில்லை. சந்தேகம் ஏற்பட்டால்அந்தநபரை அழைத்து விசாரிப்போம். அவர் மீதான சந்தேகம்நிரூபிக்கக்கூடியதாக இருக்குமாயின் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துவோம். இல்லையெனில் அவரை விடுவிப்போம்.

அதேபோன்று 11 இளைஞர்கள்சந்தேகத்தின்பேரில்நேற்று அழைக்கப்பட்டனர். அவர்களிடம் விசாரணைகள் இடம் பெறுகின்றன – என்றார்.

## மன்னாரில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாக நேற்று அதிகாலை இனம் தெரியா தோரால் உடைத்துச் சேதப்படுத் தப்பட்டுள்ளது.

அத்துடன்மன்னார் – யாழ்ப்பாணம்பிரதான வீதி, நாயாற்று வழி சந்தியில் அமைக்கப்பட்டிருந்த பிள்ளையார் சிலையும் மூன்றாவதுதடவையாகஉடைக்கப்பட்டுள்ளது.

மேலும் உயிலங்குளம் – பள்ளமடு பிரதான வீதியில் வைக்கப்பட்டிருந்தபிள்ளையார் சிலை, ஆண்டாங்குளம் சந்தியில் வைக்கப்பட்டிருந்த பிள்ளையார்சிலை, மாந்தைமேற்கு பிரதேசச் செயலகத்துக்கு அருகாமையில் வைக்கப்பட்டிருந்த பிள்ளையார் சிலை என்பனவும் உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, மாந்தைமாதா தேவாலயத்தின் உண்டியல் கதவு திறக்கப்பட்டுப் பணம் திருடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிள்ளையார் சிலைகள் உடைப்பு மற்றும் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் மன்னார் மற்றும் அடம்பன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் பிள்ளையார் சிலைகள் உடைக்கப்படும் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றன. ஆயினும் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனக் கூறப்பட்டது. (112)

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு வடக்கு மாகாண சிரேஷ்டபிரதிப்பொலிஸ்மாஅதிபர் ரொஷான் பெர்னாண்டோ தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:–

யாழ்ப்பாணத்தில் மீளவும் விடுதலைப் புலிகள் உருவாகிவிட்டனர் என நாடாளுமன்றில் சிலர் பேசுகின்றனர். அவ்வாறு ஒரு நிலைமை யாழ்ப்பாணத்தில் இல்லை.

20 வயது இளைஞர்கள் நான்கைந்து பேர் மோதிக் கொள்கின்றனர். அவர்களில் பலர் சிறைகளில் வைக்கப்பட்டுள்ளனர். வெளியில்உள்ளவர்கள் சிலர் – இரு தரப்புகள் – தங்களுக்கு இடையே மோதிக் கொள்கின்றனர்.

அவர்களின்நோக்கம்சிறைகளிலுள்ளவர்களின்மனநிலை மாறக்கூடாது என்பதேயாகும். – என்றார்.

## சு.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சுதந்திரக் கட்சியும், கூட்டு எதிரணியும் சேர்வதா, இல்லையா என்பது கட்சியின் உள்வீட்டுப் பிரச்சினையே தவிர அது ஒரு தேசியப் பிரச்சினை யல்ல.

இது குறித்து கூட்டணியில் ஒரு கட்சி என்ற வகையில் பிவிதுறு ஹெல உறுமய பொது மக்கள்மத்தியில்கருத்துஎதனையும் தெரிவிக்காது. அந்தக் கட்சியின் உள்வீட்டுப் பிரச்சினையை வெளிப்படுத்தக்கூடாது என்பதனால், எமது கட்சி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது. – என்றார்.

# கேரளக் கஞ்சாவுடன் பெண் வவுனியாவில் கைதாகினார்

வவுனியா, நவ. 19

வவுனியாமத்திய பஸ் நிலையத்தில் 2 கிலோ 32 கிராம் கேரளக் கஞ்சாவுடன் முல்லைத்தீவைச் சேர்ந்த பெண்ணொருவரைவவுனியாப்பொலிஸார் நேற்றுக் கைது செய்தனர்.

வவுனியாபொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் முல்லைத்தீவிலிருந்து புத்தளம் நோக்கி சென்ற இ.போ.ச. பஸ்ஸில் சோதனை மேற்கொண்டனர். இதன்போது 2 கிலோ 32 கிராம் கேரளக் கஞ்சாவைப் பயணப் பொதியில் வைத்து கடத்திச் செல்ல முயன்ற பெண் கைதானார்.

முல்லைத்தீவு, முள்ளியவளையைச் சேர்ந்த – 42 வயதுடைய அந்தப்பெண்ணை வவுனியாமத்தியபஸ்நிலையத்தில் வைத்து பொலிஸார் கைது செய்தனர். (உ–100)

# வேட்பாளர் தெரிவில் அவதானம் வேண்டும்

## சுட்டிக்காட்டுகிறது 'பவ்ரல்'

உள்ளூராட்சிச்சபைத்தேர்தலில் கட்சிகளின் வேட்பாளர் பட்டியல் நிராகரிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் இம்முறை அதிகம் உள்ளன.

இதனால் புதிய தேர்தல் முறைமையின் கீழ் வேட்பாளர் பட்டியலை மிகவும் அவதானத்துடன் தயாரிக்குமாறு 'பவ்ரல்' அமைப்பு சகல அரசியல் கட்சிகளுக்கும் சுட்டிக்காட்டியுள்ளது.

வேட்பாளர் பட்டியல் தயாரிக்கும்போது துறைசார்ந்த அதிகாரிகளை அணுகிதேவையான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளக்கட்சிகள் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என 'பவ்ரல்' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

## வாள்வெட்டுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சத்துக் குள்ளா கியுள்ளனர்.

இதனையடுத்து வாள்வெட்டுக்கும்பல்களைஉடனடியாகக் கைதுசெய்யுமாறுஅவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துமாறு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் வடக்குமாகாணப்பொலிஸ்அதிகாரிகளுக்குக் கடுமையான உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இதனடிப்படையில் குடாநாட்டில் பணியில் உள்ள பொலிஸாரின் விடுமுறைகள் அனைத்தும் உடனடியாக இரத்துச் செய்யப்பட்டு அவர்கள் விசேட கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இரவில்குடாநாடுமுழுவதும் பொலிஸ் ரோந்து அதிகரிக்கப்பட்டுள்ளது. வீதிகளில் இரவில் பயணம்செய்யும்வாகனங்கள் அனைத்தும் முழுமையாகச் சோதனையிடப்படுவதுடன் பயணம் செய்யும் நபர்களும் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

வாள்வெட்டுக் குழுக்களை உடனடியாகக்கைதுசெய்வதன் மூலம் குடாநாட்டில் மீண்டும் இயல்பு நிலையை ஏற்படுத்தப் பொலிஸார்தீவிரமாக முயன்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தேசியக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதீபாமஹாநாமஹேவாதெரிவித்துள்ளார்.

மாகாண அமைச்சர்கள் அரசமைப்பை ஏற்பதாகச் சத்தியப்பிரமாணம் செய்துள்ள நிலையில், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சரின் இந்தச் செயல் அரசமைப்பை மீறும் வகையில் அமைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:–

இந்த விடயம் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் உடனடியாக விசாரணைகளை முன்னெடுக்க வேண்டியமை கட்டாயம்.

வடக்கு முதல்வர் தேசிய நல்லிணக்கம், ஒருமைப்பாடு தொடர்பில் ஜெனீவா உள்ளிட்ட நாடுகளில்பேசினாலும்அவரின் கீழ் உள்ள அமைச்சர் ஒருவர் அந்தக் கொள்கைகளுக்கு எதிராகநடந்துக்கொண்டமையை ஏற்றுக்கொள்ள முடியாது. – என்றார்.

வவுனியாபாடசாலையொன்றில் இடம்பெற்ற நிகழ்வின் போது தேசியக் கொடியை ஏற்ற வடக்குமாகாணக்கல்விஅமைச்சர் க.சர்வேஸ்வரன் மறுப்பு தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தது.

## வடக்கின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் தலைவர்கள் கோரினாலும் தேசிய பாதுகாப்பு விடயத்தில்அவர்களுடன்அரசு சமரசத்துக்குச்செல்லாதுஎன்று முன்னாள் இராணுவத் தளபதியும் அமைச்சருமான பீல்ட் மார்ஷல்சரத்பொன்சேகாதெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வரவு – செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இந்த விடயங்களை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:–

வடக்கிலிருந்து இராணுவத்தினர் குறைக்கப்படுகின்றனர் என்று மஹிந்த அணியினர் பொய்யான பரப்புரைகளை முன்னெடுக்கின்றனர்.

வடக்கு – கிழக்கில் இராணுவத்தினர் நிலைகொண்டிருக்கவேண்டும். அதேபோன்று இராணுவத்தின் பிரசன்னம் தெற்கிலும் அவசியம். போர் நிறைவுக்கு வந்துள்ளதால் வடக்கிலிருந்து இராணுவத்தை அகற்றவேண்டும் எனத் தமிழ் அரசியல் தலைவர்கள் கோரி வருகின்றனர்.

எனினும் தேசிய பாதுகாப்பு விடயத்தில் அரசு ஒருபோதும் சமரசத்துக்கு போகாது – என்றார்.




# அந்த 48 மணிநேர அதிரடிச் சோதனை!

## விழி பிதுங்கிய நிலையில் சசிகலா குடும்பம் திணறல்!!

சென்னைக்கு வந்த பிரதமர் நரேந்திர மோடி திடீர் திருப்பமாக தி.மு.க. தலைவர் கருணாநிதியைச் சந்தித்த பரபரப்பு அடங்கும் முன், அடுத்த பரபரப்புக்குத் திரி கிள்ளிவிட்டது வருமான வரித்துறை. நவம்பர் 9 ஆம் திகதி காலை 6 மணிக்கு 187 இடங்களில் தொடங்கிய சோதனையில், 40 இடங்களைத் தவிர்த்து மற்ற இடங்களில் 48 மணி நேரங்களைத் தாண்டியும் சோதனை தொடர்ந்து வருகிறது. இரண்டு நாள்களைத்தாண்டி நடக்கும் இந்தச் சோதனை தமிழக அரசியல் களத்தில், மட்டுமல்ல... தேசிய அளவிலும் மிகுந்த பரபரப்பை உருவாக்கியிருக்கிறது. "187 இடங்கள், 1,800 அதிகாரிகள் என்று இந்தியாவிலேயே இது மிகப்பெரிய தேடுதல் வேட்டை" என்கிறார்கள் சிரேஷ்ட வருமான வரித்துறை அதிகாரிகள்.

ஒரே நேரத்தில், இத்தனை அதிகாரிகள் வேறு இடங்களில் ஏற்கெனவே சோதனை நடத்தியிருந்தாலும் ஒரு குடும்பத்தைச் சார்ந்தவர்களைச் சுற்றி நடைபெற்றுவரும் மெகா சோதனை இது என்பதால், நாடு முழுக்க பரபரப்பு தொற்றிக் கொண்டிருக்கிறது. இது தொடர்பான விறுவிறுப்பான அரசியல் விமர்சனங்களும் எழுந்துள்ளன.

சசிகலா குடும்பம், அவரது உறவினர்கள், உதவியாளர்கள், நண்பர்கள், நெருக்கமானவர்கள், அவர்களது நிறுவனத்தின் முக்கிய நிர்வாகிகள் என்று அனைவருமே கடந்த 48 மணி நேரத்துக்கு மேல் சங்கிலித் தொடர் போல சுற்றிவளைக்கப்பட்டுள்ளனர். கிட்டத்தட்ட 'வீட்டுக் காவல்' போலவே வைக்கப்பட்டுள்ளனர்.

சென்னை, தஞ்சை, மன்னார்குடி, திருச்சி, நாமக்கல், கோவை, கோடநாடு, புதுச்சேரி, டில்லி உள்ளிட்ட இடங்களிலும் கர்நாடக மாநிலத்தில் பெங்களூர், தெலுங்கானா மாநிலத்தில் ஐதராபாத் என நாடு முழுக்க மொத்தம் 187 இடங்களில் வருமான வரித்துறையின் அதிரடி சோதனை 9 ஆம் திகதி அதிகாலை 6 மணிக்குத் தொடங்கியது. டி.டி.வி. தினகரன் வீட்டுக்கு வருமானவரித்துறை சோதனை இருக்கின்றது எனச் சொல்லி அதற்கானபொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் வருமானவரித்துறை செய்திருந்தது. ஆனால், என்ன நினைத்தார்களோ திடீரென்று 9 ஆம் திகதி அந்த முடிவை மாற்றிவிட்டார்கள். டி.டி.வி.தினகரன் வீட்டுக்குச் சென்ற வருமான வரித்துறை அதிகாரி ஒருவர், போன வேகத்திலேயே திரும்பிப் போய்விட்டார்.

முதல்நாளில் சுமார் 15 மணி நேரங்களில், 40 இடங்களில் தங்களது சோதனையை முடித்துக் கொண்டனர் வருமான வரித்துறையினர். 2 ஆவது நாளில் 147 இடங்களில் தொடர்ந்து சோதனை நடத்தப்பட்டது. டி.டி.வி. தினகரனின் சகோதரர் பாஸ்கரனின் சென்னை நீலாங்கரை பங்களாவில், கணக்கில் காட்டப்படாத 7 கிலோ தங்க நகைகளும் சில ஆவணங்களும் சிக்கியதாக 2 ஆவது நாள் சோதனை முடிவில், வருமான வரித்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

பண மதிப்பு நீக்க நடவடிக்கைக்குப் பிறகு சசிகலாவின் உறவினர்கள், தங்களிடம் இருந்த கறுப்புப் பணத்தை மாற்றுவதற்கு 60 போலி நிறுவனங்களைத் தொடங்கியிருக்கின்றமை இந்த 2 நாள் சோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது எனத் தகவல் வெளியாகியிருக்கிறது. இந்த நிறுவனத்தின் கணக்குகள் மூலம் கறுப்புப் பணத்தை வெள்ளையாக மாற்ற உதவிய வங்கி அதிகாரிகள் யார் யார் என்பதும் ஆய்வு செய்யப்படுகிறது. தனியார் மற்றும் மத்திய அரசுக்குச் சொந்தமான வங்கி அதிகாரிகள் 100 பேர்வரை இதில் சிக்குவார்கள் என்கிறார்கள். போலி நிறுவனம் தொடங்க உடந்தையாக இருந்த அரசு அதிகாரிகள் பட்டியலையும் தயாரித்து வருகிறார்கள்.

### விவேக் சசிகலா

சசிகலாவின் அண்ணன் ஜெயராமன் – இளவரசியின் தம்பதியரின் மகன் மகன் விவேக் வீடு, அண்ணாநகரில் உள்ள விவேக்கின் மாமனார் பாஸ்கர் வீடு ஆகியவையும் இந்தச் சோதனையில் சிக்கின. 2 ஆவது நாளாக இங்கு சோதனை நடந்தது. வீட்டில் கைப்பற்றப்பட்ட தங்க நகைகள் குறித்து பாஸ்கரிடம் வருமானவரித்துறை அதிகாரிகள் விளக்கம் கேட்டனர். அப்போது, அந்த நகைகளில், 100 பவுண் கொளத்தூரில் வசிக்கும் தனது உறவினருக்குரியது என்றும் கடந்த வாரம் கொளத்தூரில் பெய்த மழையையடுத்து நகையைப் பாதுகாப்பாக வைக்க இங்கு எடுத்து வந்தேன் எனவும் பாஸ்கர் கூறியுள்ளார். 'அந்த நகை சித்ரா என்பவருக்கு உரியது; அதைக் கொடுத்து விடுங்கள்' என்று திரும்பத்திரும்ப பாஸ்கர் கேட்டுக் கொண்டிருந்தார். "முழு விசாரணை முடித்த பிறகு அதுபற்றி முடிவு எடுக்கலாம்" என்று வருமான வரித்துறை அதிகாரிகள் கூறிவிட்டனர்.

இதற்கிடையில், பாஸ்கர் வீட்டுக்கு வந்த சித்ரா மற்றும் அவரது உறவினர்கள், 'அந்த 100 பவுண் நகையைத் தாருங்கள்' என்று வருமான வரித்துறை அதிகாரிகளிடம் கேட்டனர். அவர்கள் அதுபற்றி கண்டுகொள்ளவே இல்லை. இந்தப் பிரச்சினை குறித்து வருமான வரித்துறை அதிகாரிகளுடன் கடும் வாக்குவாதம் செய்தனர். ஆனாலும் அவர்கள் ஒரு பதிலும் சொல்லவில்லை. இதனால், சோகமாக இருந்த சித்ரா மற்றும் அவரது உறவினர்கள் வெறுங்கையோடு வீடு திரும்பினார்கள்.



சென்னை வேளச்சேரியில் உள்ள ஜாஸ் சினிமா அலுவலகத்தில் 3 ஆவது நாளாக சோதனை நடக்கிறது. தாம்பரம் அடுத்த படப்பை மிடாஸ் ஆலையிலும் ஈக்காட்டுத்தாங்கலில் உள்ள ஜெயா டி.வி., நமது எம்.ஜி. ஆர் நாளிதழ் ஆகிய நிறுவனங்களிலும் தி.நகரில் விவேக் சகோதரி கிருஷ்ணப்பிரியா வீட்டிலும் சோதனை நீடிக்கிறது. ஜாஸ் சினிமா, மிடாஸ் ஆலை, ஜெயா டி.வி, நமது எம்.ஜி. ஆர் நாளிதழ் ஆகிய அனைத்தும் விவேக் கட்டுப்பாட்டில்தான் இருக்கின்றன. அதாவது, இளவரசி குடும்பத்தின் கட்டுப்பாட்டில் தான் இந்த நிறுவனங்கள் அனைத்தும் இயங்கிவருகின்றன. இதுவரை இதுமாதிரியான வருமான வரித்துறை சோதனையை நேரில் எதிர்கொள்ளாத விவேக், கிருஷ்ணப்பிரியா, கிலா ஆகியோர் இந்த இரண்டு நாள் சோதனையில், விழிபிதுங்கி நிற்கிறார்கள். வருமானவரித்துறையினரின் தொடர்ச்சியான கேள்விகளுக்குப் பதில் அளிக்கமுடியாமல் திணறிவரும் விவேக், ஒருகட்டத்தில் ரொம்பவும் சோர்ந்துவிட்டாராம். 27 வயதில், மிகவும் குறுகிய காலத்தில் அதாவது 2015 ஆம் ஆண்டுக்குப் பிறகு விவேக்கின் தொழில் வளர்ச்சி அசுரவேகத்தில் விஸ்வரூபம் எடுத்துள்ளது. அது போலவே இப்போது, அசுர சக்தியுடன் வருமானவரித்துறையும் சோதனையில் ஈடுபட்டுள்ளது.

இந்தச் சுற்றிவளைப்பு (ரெய்ட்) குறித்து டி.டி.வி.தினகரன் கூறுகையில்; 'இது போன்ற ரெய்டுகளை 1996 ஆம் ஆண்டிலேயே நாங்கள் பார்த்துவிட்டோம். ஆனால், எங்களோடு பேசியவர்கள், தெரிந்தவர்கள், பழகியவர்கள் என்று குறிவைத்து இந்த ரெய்ட் நடந்துள்ளது. இந்த கட்சியைக் காப்பாற்ற நாங்கள் போராடுகிறோம். அம்மா வழியில் தொடர்ந்து செயற்படுவோம். முன்னாள் எம்.எல்.ஏ.தங்க தமிழ்செல்வன் உதவியாளர், பெங்களூர் புகழேந்தி ஆகியோர் வீடுகளில் ரெய்ட் செய்துள்ளார்கள். அதானால்தான் உள்நோக்கம் இருக்கிறது என்று நாங்கள் மட்டுமல்ல, எங்களின் எதிர்முகாமில் இருக்கும் கட்சிகள் கூட இந்த ரெய்டை கண்டித்துள்ளன. எங்களுக்குப் போதிய மன வலிமை இருக்கிறது. இந்த ரெய்டு நடவடிக்கைகளை எதிர்கொள்வோம். இப்படி எல்லாம் எங்களை மிரட்ட முடியாது. இப்படியே அரசியல் இருக்காது. காலம் மாறும். தேர்தல் வரும். அப்போது யார் டெப்பாசிட் வாங்குகிறார்கள். யார் யார் எங்கே இருப்பார்கள் என்று தெரியும். அன்று எங்கள் வலிமையை காட்டுவோம். ரெய்டுக்கு எங்கள் குடும்பத்தினர் முழு ஒத்துழைப்பு கொடுத்தார்கள். சட்டத்தை நாங்கள் மதிக்கிறோம்' என்றார்.

தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும் தர்மம் மறுபடியும் வெல்லும் என்று அடிக்கடி ஜெயலலிதா சொல்வார். இப்போது, ஜெயலலிதா இல்லை. அவரோடு 33 ஆண்டுகாலம் வாழ்ந்த சசிகலா ஜெயிலில் இருக்கிறார். சசிகலாவின் ஒட்டுமொத்தக் குடும்பத்தையும் வருமான வரித்துறை சுற்றி வளைத்திருக்கிறது. ★

# காலி முஸ்லிம்கள் மீது திட்டமிட்டே வன்முறை

## அமைச்சர் ரிசாத் பதியுதீன் சாடல்






ஜிந்தோட்டை வன்முறைச்சம்பவம் திட்டமிட்டு செய்யப்பட்டுள்ளது. இதற்கு அங்குள்ள மதகுரு ஒருவரே காரணம். அவரால் வெளிமாவட்டங்களில் இருந்து அழைத்து வரப்பட்டோரே தாக்குதல்களில் ஈடுபட்டுள்ளனர்.

– இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளார் அமைச்சர் ரிசாத் பதியுதீன்.

ஜிந்தோட்டைப் பகுதியில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களை நேரில் சென்று பார்வையிட்ட பின்னர் அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:


காலி ஜிந்தோட்டைப் பகுதியிலே நேற்று முன் தினம் மாலை இடம்பெற்ற வன்முறைச்சம்பவத்தையடுத்து அங்கே தற்போதைய சூழ் நிலையைப் பார்வையிடுவதற்காக நேற்று அதிகாலை ஒரு மணியளவில் சென்றபோது பாதுகாப்புக் காரணங்களுக்காக கொழும்பு – காலி வீதியூடாக உள்ளே செல்ல பொலிஸார் அனுமதிக்கவில்லை.

அதையும் மீறி உள்ளே சென்று அங்கு பாதிக்கப்பட்டிருந்த மக்களையும், வன்முறையாளர்களால் சேதமாக்கப்பட்ட வாகனங்கள், கடைகள், பள்ளிவாசல்கள் மற்றும் வீடுகளையும் பார்வையிட்டோம்.

ஜிந்தோட்டை விதான கொட, குருந்துவத்த, மகாசபுகல, எலபட, எம்பிட்டிய போன்ற பகுதிகளிலும் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமையை காணக் கூடியதாக இருந்தது. பாதுகாப்பு காரணங்களால் அங்குள்ள மக்கள் வெளியேறி வேறு இடங்களுக்குச் சென்றுள்ளனர்.

இந்த நாசகாரச் செயல்கள் திட்டமிட்டு செய்யப்பட்டிருக்கின்றன எனவும், அதற்கு அங்குள்ள மதகுரு ஒருவர் மதத் தலம் ஒன்றைப் பயன்படுத்தியுள்ளார் எனவும், அந்த மதகுருவால் வெளிமாவட்டங்களில் இருந்து ஆள்கள் வரவழைக்கப்பட்டு இந்தத் தாக்குதல் சம்பவங்கள் மேற்கொள்ளப்பட்டன எனவும் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

தற்போது, இராணுவம், பொலிஸ் விடே அதிரடிப் படையினர் அங்கு குவிக்கப்பட்டுள்ளனர் – என்றார்.




# பணியின் போது முறிந்தது ஏணி; மின்சார சபை ஊழியர் படுகாயம்



யாழ்ப்பாணம், நவ 19

ஏணியைப் பயன்படுத்தி மின்கம்பத்தில் ஏறிய இலங்கை மின்சார சபை ஊழியர் ஒருவர், ஏணி முறிந்ததால் மேலே இருந்து நிலத்தில் வீழ்ந்து படுகாயம் அடைந்தார். அவர் சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை வீதி உப்புமடச் சந்திக்கு அருகில் இலங்கை மின்சார சபை ஊழியர்கள் நேற்று முன் தினம் மாலை மின் இணைப்பு வேலையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது ஊழியர் ஒருவர் ஏணி மீது ஏறி மின்கம்பத்தில் திருத்த வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்துள்ளார். திடீரென ஏணி முறிந்து கீழே சாய்ந்ததால் ஏணியில் நின்று வேலை செய்த ஊழியர் கீழே வீழ்ந்துள்ளார்

காயமடைந்த ஊழியரை அருகில் நின்றிருந்த அனைவரும் உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர்.

பிரதான போக்குவரத்துப் பாதையான கே.கே.எஸ் வீதியில் போக்குவரத்து அதிகமாக உள்ள நேரம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# காலியில் நிலைமை இப்போது கட்டுக்குள் என்கின்றார் சாகல



கொழும்பு, நவ 19

காலி, ஜிந்தோட்டைப் பிரதேசத்தில் ஏற்பட்ட அமைதியின்மை தற்போது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது எனச் சட்டம், ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரட்னாயக்க தெரிவித்தார்.

மேற்படி தாக்குதல் சம்பவம் தொடர்பில் தெளிவுபடுத்தும் வகையில் விசேட அறிக்கை ஒன்றை அவர் விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் ஆலோசனைக்கு இணங்கவே அங்கு பொலிஸ் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ள அமைச்சர், இதனை மிகப்பெரிய பிரச்சினையாகக் காண்பிக்கச் சில இனவாதக் குழுக்கள் முயற்சித்து வருகின்றன எனவும் கூறினார்.

இந்தச் சம்பவத்தைப் பெரிதாக்கி இனவாதிகள் முகப் புத்தகம் மற்றும் சமூக ஊடகங்கள் ஊடாகப் போலியான காணொளிகளை பதிவேற்றி வருகின்றன எனவும், இவற்றைக் கண்டு மக்கள் அச்சமடைய தேவையில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இவ்வாறு போலிப் பிரசாரங்களை மேற்கொள்ளும் அனைவரையும் தராதரம் பார்க்காது சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் சாகல மேலும் தெரிவித்தார்.

# வவுனியா விவசாயக் கல்லூரி மாணவர் படுகொலை நினைவு

வவுனியா, நவ 19

வவுனியா விவசாயக் கல்லூரியில் பாடவேளையில் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட 5 மாணவர்களின் 11 ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்றுக் கல்லூரியில் அனுஷ்டிக்கப்பட்டது.

விவசாயக் கல்லூரி மாணவர்களின் ஏற்பாட்டில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

படுகொலை செய்யப்பட்ட 5 மாணவர் களின் உருவப்படங்களுக்கும் இதன்போது மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. இதனையடுத்து மரக்கன்றுகள் நடப்பட்டன. இரத்ததான நிகழ்வும் இடம்பெற்றது.

2006 ஆம் ஆண்டு வவுனியா விவசாயக் கல்லூரியில் பாடவேளையில் செயன்முறையில் ஈடுபட்டிருந்த 5 மாணவர்கள் துப்பாக்கியால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணைகள் அநுராதபுரம் நீதிமன்றத்தில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# முஸ்லிம் மக்களின் பொறுமையை சீண்டும் செயல் என்கிறார் ஹக்கீம்

## அரசை உடன் தலையிடுமாறும் கோரிக்கை

கொழும்பு, நவ 19

காலியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவமானது முஸ்லிம்களின் பொறுமையை மீண்டும் ஒரு தடவை சீண்டிப் பார்க்கும் செயலாகும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இந்தத் தாக்குதல் தொடர்பில் அரசின் உயர்மட்டத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், தென் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபருடனும் நான் தொலைபேசியில் உரையாடி அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகளை உடனடியாகச் செய்யுமாறு கேட்டுக்கொண்டேன்.

முஸ்லிம்களுக்கு எதிரான இந்தத் திட்டமிட்ட தாக்குதலின் பின்னணியை அரசு கண்டறியவேண்டும்.

அத்துடன் சூத்திரதாரிகளைக் கண்டறிந்து சட்டத்தின் முன் நிறுத்தவும் அரசு முன்வரவேண்டும் – என்றார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.11.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.